# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No. 1 of 2005**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா
**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*புதிய வருடம் ஆரம்பித்து விட்டது. நமது பத்திரிகைக்கு இது சிறப்பான வருடம். பத்து வயதைக் கர்த்தரின் கிருபையால் கடந்து வந்திருக்கிறது திருமறைத்தீபம். இதை நினைவுகூறுமுகமாக அடுத்த இதழ் சிறப்பு இதழாகப் பரிமளிக்கவிருக்கிறது. பணத்தையோ, பாராட்டையோ எதிர்பார்க்காமல் சத்திய வாஞ்சையோடு தமிழ் கிறிஸ்தவத்தின் மறுமலர்ச்சிக்காக, சீர்திருத்தத்திற்காக உழைத்து வருகிறது பத்திரிகை. இத்தனை வருடங்களாக வழிநடத்தி ஆசீர்வதித்துள்ள இறையாண்மையுள்ள கர்த்தர் இனி வருங்காலங்களிலும் நம்மை வழி நடத்தி சத்தியத்திற்காக பாடுபட தொடர்ந்து உதவ வேண்டுமென்பதே எங்கள் ஜெபம். இதற்காக எங்களோடு இணைந்து செயல்படுங்கள், ஜெபியுங்கள்.*

*இதுவரை வந்துள்ள இதழ்களைப் போலவே இதிலேயும் சில முக்கிய கோட்பாடுகளை ஆராய்ந்திருக்கிறோம். தமிழ்ப் பண்பாடு என்ற பெயரில் விசுவாசிகள் மத்தியில் உலவி வரும் இந்துமதப் பண்பாட்டையும் (பக். 1), பண்பாடென்ற பெயரில் நம்மத்தியில் காணப்படும் வாழ்க்கைக்கு உதவாத நடைமுறைகளையும் (பக். 26) இரு ஆக்கங்களில் ஆராய்ந்திருக்கிறோம். வேதபூர்வமான சீர்திருத்தப் போதனைகளை அளிப்பது பத்திரிகையின் பிரதான நோக்கம் என்பது வாசகர்களுக்குத் தெரியும். வேதரீதியிலான அந்த சீர்திருத்தம் இன்று எங்கெல்லாம் நடக்க வேண்டும் என்பதை 'எதில் வேண்டும் சீர்திருத்தம்' என்ற ஆக்கம் ஆராய்கிறது. முடிந்து போனதல்ல சீர்திருத்தம்; அது தொடர்ந்து நடக்க வேண்டியது என்பதைப் புரிந்து கொள்ளாதவர்கள் அதிகம். வேத அடிப்படையில் நாம் வாழ்கிறோமா?, நமது ஊழியங்கள் அதன்படி நடக்கின்றனவா? என்று அன்றாடம் ஆராய்ந்து பார்த்து கவனத்தோடு வாழ்வதுதான் சீர்திருத்த வாழ்க்கை. வியாபார ஊழியம் செய்கிறவர்களுக்கும், சுயநலத்தால் தம்மை வளர்த்துக்கொள்வதற்காக குடும்ப ஊழியம் செய்து வருபவர்களுக்கும் இந்த சத்தியம் சுட்டுப்போட்டாலும் விளங்காது. சிக்கலான வேதப்பகுதிகளை விளக்கும் ஒரு பகுதியும் இந்த இதழில் ஆரம்பமாகிறது. வழமையாக வந்து கொண்டிருக்கும் ஏனைய ஆக்கங்களும் இந்த இதழை அலங்கரிக்கின்றன.*

*பத்திரிகையால் அடைந்த பயன்களைக் கடிதங்கள் மூலம் தொடர்ந்து விளக்கிவரும் உங்களுக்கு எங்களுடைய நன்றி. ஒவ்வொரு கடிதத்திற்கும் பதிலெழுதுவது முடியாத காரியமென்றாலும் அவை எங்களை அதிகமாக இந்தப் பணியில் ஊக்கத்தோடு உழைக்கவைக்கின்றன. தொடர்ந்து எழுதுங்கள். ஜெபியுங்கள். - ஆசிரியர்*

# புறஜாதிப் பண்பாடும் நாமும்

ஒளிக்கும், இருளுக்கும் உறவேது? தேவனுடைய ஆலயத்துக்கும் சிலைகளுக்கும் உறவேது? என்று கேட்கிறது வேதம் (2 கொரி. 6:14-16). இஸ்ரவேலர் புறஜாதியினரோடு எந்தத் தொடர்பும் வைக்காமல் பிரிந்து தனித்து வாழும்படிக் கட்டளையிட்டார் கர்த்தர். ஆராதனை முதற்கொண்டு சமூக வாழ்க்கைவரை அனைத்திலும் புறஜாதியினரின் ஜாடை இருக்கக் கூடாது என்று அவர் கட்டளையிட்டார். புறஜாதியினரின் வழிப்படி போனவர்களை அவர் தயவுதாட்சண்யம் இன்றி அழிக்கவும் தவறவில்லை. மற்றவர்களுக்கு அது ஒரு பாடமாக இருக்க வேண்டுமென்பது கர்த்தரின் நியதியாக இருந்தது. இந்தக் கோட்பாட்டை நாம் பழைய ஏற்பாடு முழுவதும் தெளிவாகக் காணலாம். இஸ்ரவேலர் புறஜாதியினரைப் பிரிந்து தனக்கென வாழ்ந்து தன்னை மட்டுமே மகிமைப்படுத்த வேண்டுமென்பது கர்த்தரின் சித்தமாக இருந்தது. இதிலிருந்து நாம் மூன்று முக்கிய உண்மைகளை அறிந்துகொள்ளுகிறோம்.

(1) கர்த்தர் மட்டுமே தேவன்.

(2) கர்த்தரின் வழியில் மட்டுமே அவருடைய பிள்ளைகள் நடக்க வேண்டும்.

(3) கர்த்தருக்கு விரோதமான எந்த வழிகளிலும் அவருடைய பிள்ளைகள் போகக்கூடாது.

கர்த்தரின் வழிகளை மீறியவர்களையும், அந்த வழிகளை சமுதாயப் போக்குகளுக்கேற்ப மாற்றி அமைத்து முரண்பாடான வழிகளில் போனவர்களையும் கர்த்தர் ஒருபோதும் விட்டுவைத்ததில்லை.

இதெல்லாம் நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கும் சத்தியங்கள். இன்று யூதர்கள், புறஜாதியார் என்று இல்லாதபடி இனங்கள் இணைக்கப்பட்டு சபைகள் வளர்ந்து வருகின்றன. பழைய ஏற்பாட்டுக் காலத்தைப்போல் யூதர்கள் தனித்து வாழாமல் மற்ற இனங்களோடு இணைந்து வாழவேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். உண்மைதான். ஆனால், இப்போது அனைவரும் கிறிஸ்துவின் விசுவாசத்தோடு, கிறிஸ்துவின் தலைமையில் ஒரே குடும்பமாக சபைகளில் வளர வேண்டும். யூதனும், புறஜாதியானும் தங்களுடைய பழைய வாழ்க்கையை நிராகரித்து கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்து மட்டுமே அவர்களுக்கு தேவனாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் வழிகளை மட்டுமே அவர்கள் பின்பற்றி நடக்க வேண்டும். ஆகவே, பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் (மேலே நாம் பார்த்த) அந்த மூன்று உண்மைகளும் இன்றைய புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் தொடர்ந்து நடக்க வேண்டியவை. தம்முடைய பிள்ளைகள் அவற்றைத் தம் வாழ்க்கையில் விசுவாசத்தோடு பின்பற்ற வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

மேலே நாம் பார்த்த மூன்று சத்தியங்களில் மூன்றாவதை ஆராய்வதே

*இந்த ஆக்கத்தின் நோக்கமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற யூதனும், புறஜாதியானும் அவருக்கு விசுவாசமாக இருந்து அவருக்கு எதிரான வழிகளை வெறுத்து நடப்பது எப்படி? அதுவும் புறஜாதிகள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிற விசுவாசிகள் இருதய சுத்தத்தோடு குற்ற உணர்வு இல்லாமல் இந்த உலகத்தில் தொடர்ந்தும் அனுபவிக்க வேண்டியவைகள் எவை? வெறுத்து ஒதுக்கி விலக்கிவைக்க வேண்டியவை எவை? என்பதை ஆராய்வதே எனது நோக்கம். இதற்கான பதிலை ஆம், இல்லை என்று ஒரே வரியில் சொல்லிவிட முடியாது. இந்த விஷயம் இலகுவானதுமல்ல. இதை ஆராய்வதற்கு முன் புதிய ஏற்பாட்டில் கர்த்தர் காட்டியிருக்கும் ஒரு விதியையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.*

*அதாவது, உலகத்தைக் கர்த்தரே படைத்திருப்பதாலும், கர்த்தர் படைத்த அனைத்தும் மனிதன் அனுபவிப்பதற்காகவே கொடுக்கப்பட்டிருப்பதாலும் இந்த உலகத்தில் விசுவாசிகள் குற்ற உணர்வு எதுவும் இல்லாமல் அனுபவிக்க வேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. இதில் எவருக்கும் சந்தேகம் இருக்கக் கூடாது. பவுல் சொல்லுகிறார், "உலகமும் அதிலுள்ள அனைத்தும் கர்த்தருடையது" (1 கொரி. 10:27-28). இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை, உலகத்தில் காணப்படும் அனைத்தும் தீமையானதல்ல என்பதுதான். அனேக விஷயங்களை நாம் சுதந்திரமாக அனுபவிக்கலாம். மேலும் பவுல் சொல்லுகிறார், "நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும், அனைத்தையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" என்று (1 கொரி. 10:31). இந்த இரு வசனங்கள் காணப்படும் பகுதியில் பவுல் புறஜாதி தெய்வங்களுக்கு படைக்கப்பட்ட உணவை உண்ணலாமா கூடாதா என்ற விஷயத்தைப் பற்றி அறிவுரை கூறுகிறார் என்பதை உணர வேண்டும். இருந்தாலும் பொதுவாக உலகத்திலுள்ள எல்லாமே தீமையானதல்ல என்பதையும், நன்மையானவைகளை நாம் சுதந்திரமாக அனுபவிக்கலாம் என்பதையும் புரிந்து கொள்வது அவசியம். ஏனெனில், நமக்கு மத்தியில் நாம் சுதந்திரமாக, கர்த்தர் அனுமதித்து அனுபவிக்க உரிமையுள்ள விஷயங்களையும் தடை செய்ய பிசாசு எத்தனிக்கும். கீழ்வரும் வசனங்களில் அந்த ஆபத்தைத்தான் பவுல் சுட்டிக்காட்டுகிறார். "உலக ஞானத்தினாலும் மாயமான தத்துவத்தினாலும், ஒருவனும் உங்களைப் பிடித்துக் கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனிதர்களின் பாரம்பரியத்தையும் உலகத்தின் அடிப்படைக் கருத்துக்களையுமே சார்ந்திருக்கிறது; அது கிறிஸ்துவைப் பற்றியதல்ல." (கொலோ. 2:8). மேலும் 1 தீமோத்தேயு 4:1-5 வரையுள்ள வசனங்களையும் வாசியுங்கள்.*

*இப்பகுதியில் உலகத்திலுள்ள அனைத்தையும் நாம் உரிமையுடன் அனுபவிக்கலாம் என்று பவுல் சொன்னபோதும் விவாதிக்கப்படும் விஷயம் வெறும் உணவல்ல அது அந்நிய தேவர்களுக்கு படைக்கப்பட்டு கடைகளில் விற்கப்படும் உணவு என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இதைப் பவுல் வேதம் சாதகமாகவும், பாதகமாகவும் கூறாத விஷயங்களின் பட்டியலில்* (Things indifferent) *சேர்த்து விளக்குகிறார். அத்தகைய விஷயங்களை நாம் நம்முடைய* Common sense-*ன் அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

இருந்தாலும், நாம் அனுபவிக்க உரிமையுள்ளவைகளை பிறர் மனம் புண் படும்படியான சூழ்நிலைகளில் அனுபவிக்காமல் இருப்பது நல்லது என்று பவுல் கூறுவதையும் புரிந்து கொள்வது அவசியம். நம்முடைய மனச்சாட்சி அந்த விஷயத்தில் குற்றமற்றதாக இருந்தாலும் பிறருடைய மனச்சாட்சி அவர்களை உறுத்துவதற்கு நாம் காரணமாக இருந்துவிடக்கூடாது. நாம் சுதந்திரமாக அனுபவிக்கக்கூடிய விஷயங்கள் பிறருடைய விசுவாசத்திற்கு தடையாக இருக்குமானால் அவர்களுடைய விசுவாச வாழ்க்கையின் நன்மை கருதி அவற்றை வாழ்க்கையில் தவிர்த்து விடுவது விசுவாசிக்குரிய அடையாளம் என்கிறார் பவுல் (1 கொரி. 10:29-33).

எத்தகைய விஷயங்களில் விசுவாசிகள் வேதத்தைப் பின்பற்றி தங்களுடைய வாழ்க்கையில் அவற்றைத் தள்ளி வைக்க வேண்டும்? இதுபற்றி ஒரு பெரிய லிஸ்டைத் தயாரித்து உங்கள் முன் வைப்பது என்னுடைய நோக்கமல்ல. வேதம் விளக்கும் சில பொதுவான விதிமுறைகளை விளக்கி அவற்றின் அடிப்படையில் நீங்கள் சிந்தித்து முடிவெடுக்க உதவுவதே எனது நோக்கம். அதேவேளை நாம் தொடர்பு வைக்கக்கூடாத, நம் வாழ்க்கையில் இடங் கொடுக்கக்கூடாத தெளிவான சில விஷயங்களையும் விளக்கப்போகிறேன்.

**1. உலகத்து சிந்தனைகளையும், நடைமுறைகளையும் நாம் உடனடியாக ஏற்றுக்கொள்ளாது வேதஅடிப்படையில் தீர்க்கமாக அவற்றை ஆராய்ந்து பார்த்தபின்பே அவற்றைப் பின்பற்றுவதா? இல்லையா? என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.**

அனேகர் உலக சிந்தனைகளையும், பழக்க வழக்கங்களையும் உடனடியாக தயங்காது ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இது வேதஞானமில்லாததால் வருகின்ற விளைவு. இதே இதழின் இன்னொரு பகுதியில் தமிழ்ப் பண்பாடு பற்றிய ஆக்கத்தில் இதை விளக்கியிருக்கிறேன். திருமணம், குடும்ப வாழ்க்கை போன்ற வற்றில் இந்துப் பண்பாடு தொடர்ந்தும் கிறிஸ்தவ சமுதாயத்தைப் பாதித்து வருவது பற்றி விளக்கியிருக்கிறேன். பிசாசின் சிந்தனைகளைக்கொண்ட உலகம் கர்த்தரின் வழிகளில் அன்புவைக்காது. பாவவழிகளில் மட்டுமே போய்க் கொண்டிருக்கும். இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் இந்துக்களைப் போல பெண்கள் நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்வது அதிகரித்து வருகிறது. நவீன நாகரீகம் என்ற பெயரில் பலர் இதைச் செய்துவருகிறார்கள். இந்துப் பண்பாட்டிற்கு நாகரீக விளக்கம் தருவது பிசாசின் சிந்தனையே தவிர வேறில்லை. இதை கர்த்தர் விரும்பவில்லை. லோத்தின் மனைவிபோல் உலக சிந்தனைகளுக்கு நாகரீக விளக்கம் தர முயல்வது வேதவிரோதமான செயல்.

திருமணத்தின்போது தாலி கட்டுவது தமிழ்ப் பண்பாடு. அதில் தவறில்லை. ஆனால், தாலி கழுத்து அறுந்துவிடுவதுபோல் பல சவரின் தங்கத்தில் செய் யப்படுவதை வேதம் அனுமதிக்கவில்லையே. ஒன்று அல்லது இரண்டு பவுண் களில் செய்யப்படும் தாலியால் தாலியா அறுந்துவிடப்போகிறது? பத்துப் பன்னிரெண்டு பவுண்களில் தாலி கேட்கும் மனிதனுக்கு பணத்திலும், கௌரவத்திலும்தான் குறி என்பது சொல்லாமலே புரியவேண்டும். இப்படி ஒவ்வொன்றையும் வேதஅடிப்படையில் விசுவாசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். பக்திவிருத்திக்கும் இவற்றிற்கும் சம்பந்தமில்லை என்று பகற்கனவு காணாதீர்கள். கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசம் நமது வாழ்க்கையின்

ஒவ்வொரு பகுதியையும் சிந்தனைபூர்வமாக பாதிக்காவிட்டால் அது விசுவாச மேயல்ல. விசுவாச வாழ்க்கையை தேவபயத்தோடு வாழ நாம் வேதத்தைப் பயன்படுத்தி எல்லாவற்றையும் ஆராய்ந்து நமது வாழ்க்கை உலக ஞானப்படி அமைந்துவிடாமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

**2. இந்துமதம், புறமதங்கள் சம்பந்தமான சடங்குகளிலும், பண்டிகைகளிலும் கிறிஸ்தவர்கள் கலந்துகொள்வதையும், அவற்றைப் பின்பற்றுவதையும் விட்டு விட வேண்டும்.**

தமிழ்ப் பண்பாடும் இந்து மதமும் இரண்டறக் கலந்தவை. ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிப்பது இலகுவான காரியமல்ல. சுவிசேஷத்தை தமிழினம் அறிந்த காலத்தில் இருந்து இந்த இரண்டையும் பிரிக்கும் செயலைச் செய்ய சபைகள் தவறிவிட்டன. ஒருசில காரியங்களில் மட்டும் மாற்றங்களைச் செய்துவிட்டு ஏனையவற்றை அப்படியே விட்டுவிட்டார்கள். இதனால் பாதிக்கப்பட்டிருப்பது திருச்சபையே. மேலைத்தேசத்து மிஷனரிகளும் விஷயம் புரியாமல் பண்பாட்டில் பெரியளவுக்கு மாற்றங்களைக் கொண்டுவரத் தவறிவிட்டார்கள். அப்படி மாற்ற முயற்சி செய்தவர்களை நமது பண்பாடு தெரியாதவர்கள் என்று பட்டம் சூட்டி நம்மவர்கள் போக்குக் காட்டிவிட்டார்கள்.

இந்து மத சடங்குகள், பண்டிகைகள் அனைத்தும் அவர்களுடைய தெய்வங்களை முன்வைத்தே நடத்தப்படுகின்றன. அவை எல்லாவற்றிற்கும் ஏதாவதொரு இந்துமதத் தொடர்புள்ள ஆன்மீகக் கருத்து இருக்கும். தீபாவளி, பொங்கள், கார்த்திகை தீபம், சித்திரை பண்டிகை என்று எந்தப் பண்டிகையை எடுத்துக் கொண்டாலும் அல்லது குடும்ப நிகழ்ச்சிகளான திருமண வைபவம், பெண் வயதுக்கு வருதல், வளைகாப்பு, பிறந்த பிள்ளைக்கு மொட்டை அடித்தல் என்று எல்லா சமூக நிகழ்ச்சிகளுக்கும் பின்னணியில் இந்துமதக் கருத்துக்களும் சிந்தனைகளும் விரவிக் காணப்படும். அவை இல்லாமல் எந்தவொரு சமூக நிகழ்ச்சியையோ, பண்டிகையையோ பார்ப்பது முடியாத காரியம். இந்த நிலைமையில் ஒரு விசுவாசி தன்னுடைய இந்து நண்பன் கூப்பிடுகிறானே என்று இந்த வைபவங்களில் கலந்து அவனோடு சேர்ந்து கொண்டாடுவது விசுவாசி செய்யக்கூடிய காரியமல்ல. அனேக விசுவாசிகள் சிந்திக்காமல், ஏன் என்று கூடக் கேட்காமல் இவ்வைபவங்களில் கலந்து கொள்கிறார்கள். நண்பர்களின் முகங்கோணக் கூடாது என்ற நல்ல எண்ணத்திலும், சமூகத்தோடு ஒத்துப்போக வேண்டும் என்றும் சிலர் இப்படி நடந்துகொள்கிறார்கள். பெரும்பாலான விசுவாசிகள் எந்த சிந்தனையுமே இல்லாது இவற்றில் கலந்து கொள்கிறார்கள். இப்படி நடப்பதால் இரண்டு பெரிய ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. (1) புறமத தெய்வங்களுக்கு அம்மத அடிப்படையில் நடத்தப்படும் சடங்குகளில் எந்தவித சிந்தனையுமில்லாமல் நாம் பங்கு கொள்கிறோம். இப்படி செய்வதன் மூலம் கர்த்தரின் வார்த்தையின் தெளிவான போதனைகளுக்கு எதிராக நடந்து கொள்கிறோம். (2) கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பதை விட்டுவிட்டு, அதற்கான சந்தர்ப்பத்தையும் அலட்சியப்படுத்துகிறோம்.

தெய்வநாயகம், சாது செல்லப்பா போன்றோர் இந்து மதத்தில் இயேசுவைக் காண ஆரம்பித்து இந்தப் பண்டிகைகளுக்கும், சடங்குகளுக்கும் கிறிஸ்தவ விளக்கம் கொடுக்க முயன்றது விசுவாசிகளின் புறமதத்தொடர்பை அதிகரிக்கச் செய்தது. அவர்களுடைய போக்கும், விளக்கங்களும் கர்த்தருக்கு

விரோதமானவை. கர்த்தர் அவற்றைத் தன் வேதத்தில் அடியோடு நிராகரிக்கிறார். பூசாரி வைத்து இந்துமத தெய்வங்களுக்கு பூசைகள் செய்யாத, புறமத சடங்குகள் நடைபெறாத சமூக நிகழ்ச்சிகளில் நாம் பங்கு கொள்வதில் தவறில்லை. அனைத்தையும் சிந்தித்து ஆராய்ந்து பார்க்காமல் செயல்படுவது கிறிஸ்தவ விசுவாசிக்கு அழகல்ல. ஆதிசபையில் புறமதங்களில் இருந்து விடுபட்டு விசுவாசிகளானவர்கள் மத்தியில் இந்தக் கேள்விகள் எழத்தான் செய்தன. அதை அவர்கள் அசட்டை செய்யாமல் அப்போஸ்தலர்களும், சபைகளும் கூடி ஆராய்ந்து விட்டுவிட வேண்டியது எது? தொடர வேண்டியது எது? என்று சிந்தித்து செயல்பட்டார்கள் (அப்போ. 15).

சாதி பார்த்து, குலம் பார்த்து திருமணம் செய்வது, செவ்வாய்த் தோஷம் பார்ப்பது, நல்ல சகுனம் பார்ப்பது, தீட்டுக் கழிப்பது, பிறந்த பிள்ளைக்கு மொட்டை அடிப்பது, புதுமனை புகும்போது பால் பொங்கவைப்பது (இதை செய்யாவிட்டால் வீடு உருப்படாமலா போய்விடும்?) என்று இத்தியாதி இந்துப் பாரம்பரிய மூடநம்பிக்கைகளும் விசுவாசிகள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்கள் மத்தியில் உலவுவதை மன்னிக்கவே முடியாது. கர்த்தரின் வேதம் இவற்றை அடியோடு நிராகரிக்கிறது. இவற்றிற்கு தமிழ்ப் பண்பாடு என்று பெயரிட்டு வழக்கத்தில் வைத்திருக்கப் பார்க்கிறவர்கள் வேத விரோதிகள். சிலர் இந்துக்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்ல இவை பயன்படும் என்று இவற்றிற்கு தமிழ் பண்பாட்டு ‘விளக்கம்’ கொடுத்து வருகிறார்கள். சத்தியத்தை எப்படிப் புரட்டினாலும் அது அசத்தியமாகத் தான் மாறிவிடும். பல வருடங்களுக்கு முன் என்னுடைய இந்து மாமா ஒரு பண்டிகையில் கலந்து கொள்ள என்னை அழைத்தார். என்னுடைய விசுவாசத்தை சுட்டிக்காட்டி அதில் நான் கலந்து கொள்வது சரியல்ல என்று கூறினேன். அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு படைத்ததை எனக்குத் தந்த போது, தெய்வங்களுக்கு படைக்காத உணவைத் தாருங்கள் என்று வாங்கிச் சாப்பிட்டேன். அவர்கள் மனம் துன்புறாதபடியும், அதேவேளை என்னுடைய விசுவாசத்திற்குப் பங்கம் வராமலும் நான் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. அதன் காரணமாக என்னுடைய மாமா ஒருநாள் சுவிசேஷத்தை தனக்கு விளக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்.

ஓய்வு நாள் நமக்கு விஷேட நாள். அந்நாளில் நாம் ஆலயத்துக்குப் போய் ஆராதனையில் ஈடுபட்டு கர்த்தரைத் துதிக்க வேண்டும். வீடு திரும்பியதும் ஆத்மீக காரியங்களில் அதிகம் ஈடுபடவேண்டும். இந்துக்கள் அந்த நாளில் திருமணங்களையும், வைபவங்களையும் நடத்துவார்கள்; நம்மையும் அழைப்பார்கள். என்ன செய்வது? பலர் எதுவும் யோசிக்காமல் போய்க் கலந்துகொள்வார்கள். அது தவறு என்பது அவர்களுக்கு உரைப்பதில்லை. பூசாரி வைத்து, சாஸ்திரம் பார்த்து, மந்திரம் ஓதி புறதெய்வங்களுக்கு முன் நடக்கும் திருமண வைபவத்தில் நமக்கு என்ன வேலை? அதுவும் ஓய்வு நாளில் அதில் நாம் கலந்துகொள்ளலாமா? ஓய்வு நாளை அசிங்கப்படுத்துவதே ஆகாது. அதிலும் அந்நாளில் இந்துத் திருமணத்துக்குப் போவது கொடுமை. இந்து வைபவங்களில் விசுவாசிகளுக்கு வேலை இல்லை. இந்த விஷயங்களில் வேதத்தின் அதிகாரத்துக்கு நாம் கட்டுப்பட வேண்டும்; அது நம்மை ஆள வேண்டும். மனிதபயமில்லாமல் இனியாவது வேதஅடிப்படையில் சிந்தித்து வாழுங்கள்.

# கிறிஸ்துவின் சிலுவைப் பலி

கிறிஸ்துவின் சிலுவை மரணப்பலி பற்றி குழப்பமான சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்கள் அனேகர். இந்த சத்தியத்தை தர்க்க ரீதியில் அணுகி குழப்பத்தைப் போக்க முயல்கிறோம் என்று வேத போதனைகளுக்கு முரணான விளக்கத்தை அளிக்கிறார்கள் சிலர். வேதம் போதிப்பது மட்டுமே சத்தியம். அது நமக்குப் புரியவில்லை, பிடிக்கவில்லை என்பதற்காக நாம் நினைத்தவிதத்தில் அதை மாற்றி அமைத்துக் கொள்ள முடியாது. கிறிஸ்துவின் சிலுவைப் பலிபற்றியும் மனித சித்தம் பற்றியும் இனி ஆராய்வோம்.

## கிறிஸ்துவின் சிலுவைப்பலி சகல மக்களையும் இரட்சிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்ததா?

சிலுவையில் கிறிஸ்து இறந்தபோது அவர் இந்த உலகத்துக்கு வந்த காரியங்கள் அனைத்தும் நிறைவேறி, 'எல்லாம் முடிந்தது' (யோவான் 19:30) என்று சொல்லி மரித்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். 'எல்லாம் முடிந்தது' என்றால் நடந்து முடிந்த காரியங்கள் அனைத்திலும் கிறிஸ்துவுக்கு முழுத்திருப்தி இருந்தது என்றுதான் அர்த்தம். தான் வந்த காரியம் நிறைவேறிவிட்டது என்பதில் அவருக்கு முழுநம்பிக்கையும் இருந்தது. யோவானில் அவர் சொல்லியிருப்பதுபோல் தன்னுடைய ஆடுகள் அனைத்தையும் ஒன்று விடாமல் தன்னிடம் அழைத்துக் கொள்ளுவதற்கான அனைத்தையும் அவர் நிறைவேற்றிவிட்டார் என்றுதான் அதற்குப் பொருள்.

அப்படியானால் கிறிஸ்து யாருக்காக மரித்தார்? ஏசாயா 53:6; எபிரேயர் 2:9; 1 யோவான் 2:2 ஆகிய வசனங்களைப் பயன்படுத்தி சிலர் வாதிடுவது போல் கிறிஸ்து எல்லா மனிதர்களுக்குமாக மரித்திருந்தால் அவர் 'எல்லாம் முடிந்தது' என்று சொல்லி முழுத்திருப்தியோடு மரித்திருக்க முடியாது. எல்லா மனிதர்களும் கிறிஸ்துவை விசுவாசிப்பதில்லை. அனேகர் அவரை நிராகரித்து, நிந்தித்து மரிக்கிறார்கள். படித்தவனும், படிக்காதவனும், சகல மனிதர்களும் இரட்சிக்கப்பட்டு பரலோகம் போகிறார்கள் என்ற வாதம் வேதபோதனைகளுக்கெல்லாம் முரணானது. கிறிஸ்துவை விசுவாசிக்காமல் ஒருவரும் இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும் அடைய முடியாது என்று வேதம் ஆணித்தரமாக கூறுகிறது.

உலகத்து மக்கள் கிறிஸ்துவின் மரணத்தால் அனேக பொதுவான நன்மைகளை அடைகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதால் உலகத்து மக்களுக்கு அனேக நன்மைகள் கிடைக்கின்றன. அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடியவர்கள் கிறிஸ்தவர்களே. உலகத்தில் கல்வியும், மருத்துவ வசதிகளும் ஏற்படக் கிறிஸ்தவம் காரணமாக

இருந்திருக்கின்றது. நம் சமுதாயத்தில் பின்தங்கிய மக்கள் வளம் பெற உழைத்தவர்கள் கிறிஸ்தவர்களே. பாவத்தைச் சுட்டிக்காட்டி, அது கட்டுப் பாட்டில் இருக்க சுவிசேஷம் தொடர்ந்து பயன்பட்டு வருகிறது. அவிசுவாசிகள் இருக்கும் குடும்பங்களில் இரட்சிக்கப்படுகிறவர்களால் அந்தக் குடும் பங்களுக்கு சுவிசேஷ ஒளி கிட்டுகிறது. கிறிஸ்து இராஜாவாக இருப்பதால் மனிதர்கள் மத்தியில் கருணையும், அன்பும் ஓரளவுக்கு காணப்படுகிறது. இதனால் எல்லா மனிதர்களும் இரட்சிப்பை அடைந்து விட்டார்கள் என்றோ கடைசி காலத்தில் இரட்சிப்பை அடைந்து விடுவார்கள் என்றோ கூறவிட முடியாது.

சகல மனிதர்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்ற போதனை மனிதனின் பாவத்தை அலட்சியப்படுத்துகிறது. மனிதன் பாவத்தில் பிறந்திருக் கிறான் (சங். 51). மனிதன் கர்த்தரைத் தன் இருதயத்தில் எதிரியாக எண்ணு கிறான். கர்த்தரின் சகல நீதியையும், பத்துக் கட்டளைகளையும் முற்றாக நிராகரித்து, அவருடைய சுவிசேஷ அழைப்பை அலட்சியப்படுத்தி, அவரு க்கு எதிராக வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறான். கிறிஸ்து வின் மரணத்தின் பலாபலன்களான, பாவமன்னிப்பு, சமாதானம், கர்த்தரு டனான ஐக்கியம், கிறிஸ்துவுடனான ஐக்கியம் ஆகியவற்றை விசுவாசத்தின் மூலம் அடையும்போதே மனிதனுக்கு இரட்சிப்பு கிடைக்கின்றது. இவற்றை அடைய மனிதன் முதலில் தான் பாவி என்பதை உணர வேண்டும். கிறிஸ்து வின் அழைப்பிற்கு உடன்பட்டு அவரிடம் வர வேண்டும். தன்னுடைய மீட்புக்காக அவரைப் பணிந்து விசுவாசிக்க வேண்டும்.

சகல மக்களும் இரட்சிப்பை அடைவார்கள் என்ற போலிப் போதனை யைக் கொண்டிருப்பவர்கள் மனிதனைப் பற்றிய தவறான எண்ணத்தையும், அவனுடைய பாவத்தைப் பற்றிய அறைகுறையான அறிவையும் கொண்டிருக் கிறார்கள். மனிதன் பாவத்தில் மரித்திருக்கிறான் (எபேசி. 2:1). அவன் தேவனை எதிரியாகக் கருதுகிறான் (ரோமர் 8:7). தன்னுடைய இயற்கைத் தன்மையின்படி அவன் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒருபோதும் உடன்பட மாட்டான். மனித னின் பாவத்தன்மை, நீதியுள்ள கர்த்தர் அவன் மீது இரக்கங்காட்ட வேண்டு மென்று நாம் கேட்பதைத் தடைசெய்கிறது. தன்னுடைய இரக்கத்தை நாடி வராதவர்களை நீதியுள்ள கர்த்தர் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் நீதியுள்ள வராக இருப்பதால் தன்னுடைய இரக்கத்தை நாடி வருகிறவர்களுக்கே அவர் கருணை காட்ட வேண்டும். ஆகையால், கிறிஸ்துவின் சிலுவைப் பலி எல்லா மனிதர்களையும் இரட்சிப்பதற்கு வாய்ப்பேயில்லை.

## கிறிஸ்து குறிப்பிட்ட தொகையினரை மட்டுமே இரட்சிப்பதற்காக மரித்தாரா?

வேறு சிலர் கிறிஸ்துவின் சிலுவை மரணப்பலியையும், மனிதன் ஆத்மீக காரியங்களில் சுதந்திரமாக எந்தத் தீர்மானத்தையும் எடுக்கக்கூடியவனாக இருக்கிறான் என்ற அவர்களுடைய சொந்தக் கருத்தையும் இணைத்து இரட்சிப்புக்குரிய விடயத்தில் கர்த்தரின் பங்குக்கு இடமேயில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். மனிதன் இரட்சிப்புக்குரிய தீர்மானத்தை தன் வாழ்வில் எடுத்தபிறகே கர்த்தர் அவனை இரட்சிப்புக்காக தெரிவு செய்கிறார் என்ற விளக்கத்தை அளிக்கின்றனர். இந்த விளக்கம் வேதத்தின்

தெளிவான போதனைகளுக்கு முரணானதாக இருக்கின்றது.

முதலில், வேதம் மனிதன் ஆத்மீக உணர்வே இல்லாமல் மரித்திருக்கிறான் என்கிறது (எபேசி. 2:1). இறந்து உயிரற்று இருக்கும் மனிதன் கர்த்தருக்காக எப்படி ஆத்மீகத் தீர்மானத்தை எடுக்க முடியும்? மறுபிறப்புக்கான ஆத்மீகக் கிரியையை பரிசுத்த ஆவியானவர் அவனில் செய்யாவிட்டால் அவன் இரட்சிப்பை அடையவே முடியாது என்கிறது வேதம். ஆத்மீக மரணத்தை அடைந்திருக்கும் மனிதன் அதில் இருந்து விடுபட எந்தத் தீர்மானத்தையும் எடுக்க இயலாத நிலையில் இருக்கிறான். கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒருவனால் தன்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள முடியும்? அந்த நிலையில்தான் மனிதனுடைய ஆத்மீக நிலை இருக்கின்றது. இரண்டாவதாக, மனிதனால் இரட்சிப்புக்குரிய தீர்மானத்தை, சுயமாக எடுக்க முடியுமானால் அவனுடைய இரட்சிப்பு கிரியையினால் உண்டாவதாக இருக்கும். அது கிருபையினால் ஏற்பட்டதாக இருக்காது. அதுமட்டுமல்லாமல் மனிதன் கர்த்தருக்கு இதில் துணை செய்பவனாக இருப்பான். கர்த்தர் ஒருவருக்கும் கடன்பட்டவரல்ல. ஆகையால், இந்த வாதம் கர்த்தரைப் பற்றி வேதம் தரும் போதனைக்கு முரணாக அமைந்து விடுகிறது. மூன்றாவதாக, மனிதனுக்கு சுயாதீன சித்தம் (விருப்பச் சித்தம்) இருக்கிறது என்ற போதனை கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையும், தன்னுடைய கிரியை பற்றிய அவருடைய முழுத் திருப்தியையும் பாதிப்பதாக இருக்கின்றது. அதாவது தங்களுடைய சுயாதீன சித்தத்தின்படி ஒருவருமே கிறிஸ்துவை விசுவாசிக்காமல் போனால் கிறிஸ்துவின் சிலுவைப் பலி பயனற்றதாகப் போய்விடும். மனிதன் பிசாசின் குழந்தையாக பாவத்தில் மரித்து வாழ்ந்து வருவதால் அவன் கிறிஸ்துவுக்கு ஒருபோதும் தன் குணத்தின்படி உடன்பட்டு வாழ மாட்டான். அத்தோடு, அவனுடைய சித்தத்தினால் கட்டுப்படும்படியாக கிறிஸ்துவின் சிலுவைப் பலியின் பலன்களும் அமைந்திருக்கவில்லை. ஆகவே, மனிதனின் சுயாதீன சித்தம் என்பது வெறும் கற்பனையே. அவன் சுயமாக, சுதந்திரமாக பிசாசின் வழியில் போய் பாவத்தை மட்டுமே செய்யக்கூடியவனாக இருக்கிறான். இரட்சிப்புக்குரிய எந்த நடவடிக்கையையும் எடுக்கும் வல்லமை அவனுடைய அடிமைச் சித்தத்திற்கு இல்லை.

வேறு சிலர் சிலுவைபலியையும், மனிதனுடைய சுயாதீன சித்தத்தையும் பாதுகாப்பதற்காக இன்னொரு வழியைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அதாவது, கிறிஸ்துவின் சிலுவைப்பலி எல்லோரையும் இரட்சிக்கும் வல்லமையுடையதென்றும், அவரை விசுவாசிக்கிறவர்கள் இரட்சிப்பை அடைவார்கள் என்றும் இவர்கள் கூறுகிறார்கள். அத்தோடு, சிலர் கிறிஸ்துவைப் புறக்கணித்துவிடுவதால் அவர் ஒரு குறிப்பிட்ட தொகையினரை மட்டுமே தெரிந்துகொள்ள நேரிட்டது என்றும் கூறுகிறார்கள். இந்த விளக்கத்தில் உள்ள ஆபத்து என்னவென்றால் இவர்கள் கிறிஸ்துவின் சிலுவைப்பலி எல்லோரையும் இரட்சிக்கக்கூடிய வல்லமை கொண்டது என்று கூறுவதுதான். அந்த விளக்கத்தின்படி கிறிஸ்துவின் சிலுவைப்பலியின் பலன்கள் முழு உலகத்துக்கும் சொந்தமானதாகிவிடுகிறது. அதேநேரம், அவற்றால் ஒருவருக்கும் எந்தப் பலனுமில்லாமலும் போய்விடுகிறது. இது வேதம் தருகின்ற விளக்கமல்ல.

ஆகவே, நாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக ஒரேயொரு தகுந்த விளக்கம் மட்டுமே இருக்கின்றது. அதாவது, கர்த்தர் எந்த மக்களுக்காக கிறிஸ்து மரிக்கும்படியாகத் தீர்மானித்து அவரை இந்த உலகத்துக்கு அனுப்பினாரோ அவர்களுக்காக மட்டுமே அவர் சிலுவையில் தன்னைப் பலியாகத் தந்தார். உலகத்தோற்றத்துக்கு முன்பாக கர்த்தரால் முன்குறிக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இரட்சிப்பை அடைவதற்காக கிறிஸ்து பிதாவின் கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றி சிலுவையில் மரித்து முழுத்திருப்தியுடன் பிதாவைச் சென்றடைந்தார். இதன் மூலம் கிறிஸ்துவின் பரிகாரப்பலி செலுத்தப்பட்ட அனைத்து மக்களும் அவரிடத்தில் நிச்சயம் உலக முடிவுக்கு முன் வந்தே சேர்வார்கள். அதுவும் விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவை அவர்கள் பற்றிக்கொள்ளுவார்கள். இந்த விளக்கம் மட்டுமே கர்த்தருடைய இறையாண்மையை மகிமைப்படுத்துவதாக இருக்கிறது. இந்த விளக்கம் மட்டுமே வேதபோதனைகளோடு ஒத்துப்போவதாய் பாவத்தில் மூழ்கி அழிந்து கொண்டிருக்கும் மனிதனை விடுவிப்பதற்குரிய வல்லமையைக் கொண்டதாய் இருக்கிறது.

## குறிப்பிட்ட மக்களுக்கான கிறிஸ்துவின் மரணத்தை எதிர்ப்பவர்கள்

குறிப்பிட்டவர்களுக்கான கிறிஸ்துவின் பரிகாரப்பலி (Particular Redemption or Limited Atonement) என்ற பதங்களைக் கேட்டவுடனேயே காதில் நாரசம் விழுந்ததுபோல் துடிப்பவர்கள் இருக்கிறார்கள். தவறான போதனைகளுக்கு இடங்கொடுத்து அவர்கள் சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். கருணையுள்ள கர்த்தர் எப்படி சிலரை நரகத்துக்கு அனுப்ப முடியும்? என்று அவர்கள் வருத்தப்படுவார்கள். கர்த்தருடைய குணாதிசயத்துக்கே அது முரணானது என்பார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கத்தான் வேண்டும்.

உலகத்தோற்றத்துக்கு முன்பு கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காகவே கிறிஸ்து சிலுவையில் மரித்தார் (எபேசியர் 1) என்கிறது வேதம் என்று ஏற்கனவே பார்த்தோம். மனிதன் நரகத்துக்கு உரிய பாவி என்பதும் வேதம் தெளிவாகப் போதிக்கும் சத்தியம். அவன் சுயமாக விசுவாசத்தை அடையமுடியாதென்றும், கர்த்தரின் இரக்கத்தாலும், கருணையினாலும் மட்டுமே அவன் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ள முடியும் என்கிறது வேதம். பரிசுத்த ஆவியானவர் அவனுடைய குருட்டுக் கண்களைத் திறந்து இருதயத்தில் அடிப்படை ஆத்மீக மாற்றத்தை ஏற்படுத்தினால் மட்டுமே அவன் பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவை நாடி ஓடுவான் என்கிறது வேதம். நீதியின் தேவனாகிய கர்த்தர் கருணையுள்ளவராக இருப்பதால்தான் மனிதன் அழிந்துவிடாதபடி அவன் இரட்சிக்கப்படும்படியான இத்தகைய வழிமுறையை கிறிஸ்துவின் சிலுவைப்பலியின் மூலம் ஏற்படுத்தித் தந்துள்ளார். கர்த்தர் நீதியாகத் தெரிந்துகொண்டவர்களுக்கான சிலுவைப்பலி கர்த்தருடைய கருணையின் செயல்முறை. திருந்தமாட்டேன் என்று பாவத்தில் நிலைத்திருக்கத் துடிப்பவர்களுக்காக சிலுவைப்பலி அமைந்திருந்தால் மட்டுமே நாம் கர்த்தரைக் குறைகூற முடியும். மனந்திரும்ப மாட்டேன் என்று விடாப்பிடியாக நரகத்தை நோக்கி ஓடுகிறவர்களுக்கு கருணை காட்டுகிறவர் கர்த்தராக இருக்க முடியாது. தம்முடைய அளப்பரிய ஞானத்தின்படி உலகத்தோற்றத்துக்கு முன் தெரிந்துகொண்ட மக்களுக்காக கிறிஸ்துவை சிலுவை

*யில் பலியிட்ட செயல் கர்த்தர் எத்தனை நீதியுள் ளவர், அன்புள்ளம் கொண்டவர் என்பதையே வெளிப்படுத்துகிறது.*

### குறிப்பிட்ட மக்களை மட்டுமே கர்த்தர் இரட்சிப் பாரானால் நாம் பாவிகளுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டிய அவசியமென்ன?

*நிச்சயம் நாம் சுவிசேஷத்தை எல்லோருக்கும் எந்தவித பாரபட்சமும் காட்டாமல் அறிவிக்க வேண்டும். அதற்கான பதிலை மத்தேயு 29:18–20 தருகிறது. சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தரே கட்டளையிட்டிருக் கிறார். நமது கடமை யார் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்து சுவி சேஷத்தை அவர்களுக்கு அறிவிப்பதல்ல. அந்த எண்ணமெல்லாம் நமக்கு வரவேகூடாது. இரக சியமான காரியங்களை கர்த்தர் மட்டுமே அறி வார். நமது கடமை எல்லோருக்கும் சுவிசேஷ த்தை அறிவிப்பது மட்டுமே என்கிறது வேதம்.*

*கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் தொகையை அறிந்தவர் கர்த்தர் மட்டுமே. சகல ஜாதிகள் மத்தியிலும் இருக்கின்ற அந்த மக்கள் உலகமெல்லாம் பரவிக்காணப்படுகிறார்கள். அவர்களை அறிந்தவர் இந்த உலகத்தில் யாரு மில்லை. கிறிஸ்துவை ஒருவர் விசுவாசிக்கின்ற போதே நாம் அந்த நபர் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிறார், இரட்சிப்புக்காக முன்குறிக்கப் பட்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்கி றோம். அதற்கு முன் எவரையும் நாம் நரகத்திற் குரிய பாவிகளாக மட்டுமே கருத முடியும்.*

*பாவிகளான அனைத்து மக்களுக்கும் சுவிசே ஷத்தை சொல்ல வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை. சுவிசேஷத்தை பாவியான மனிதன் கேட்கிறபோதே ஆவியானவர் அவனில் கிரியை செய்து அவனுடைய செவி மடல்களைத் திறந்து கர்த்தரின் அழைப்பைக் கேட்டு உணரச் செய்கி றார். அவனுக்கு கர்த்தர் விசுவாசத்தையும் தரு கிறார். இந்தச் செயல்கள் நடைபெற அனைத்து மக்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டியது அவசியம். சுவிசேஷப் பிரசங்கம் இல்லையெனில் பாவிகள் மனந்திரும்புவதற்கு வழியே இல்லை (ரோமர் 10:13–17).*

## கவிதைகள்

**இ**ந்த இதழில் ஒரு புது அம்சத்தைக் கவனிப்பீர்கள். 'சுபி' யின் கவிதைகளில் மூன்றை இதில் வெளி யிட்டிருக்கிறோம். கருத்தைவிட உணர்ச் சிக்கே கவிதையில் முதலிடமென்றும், புரியாமல் இருந்து விடுவது கூட கவிதை யின் ஒரு தன்மை யென்றும் ஒரு தமிழறி ஞர் தன்னுடைய நூலில் கவிதை இலக் கணத்தைக் குறித்து எழுதியிருந்ததை வாசித்தேன். அந்தக் கருத்தைப் பொய்யாக் குவதுபோல், சத்திய விழிப்புணர்ச்சியை நமது கிறிஸ்தவ சமு தாயம் அடையும்படி யாக, அதைத் தூண்டு கிற கவிதைகளும், வேத அடிப்படையில் சமூகப் பிரச்சனை களை அலசி தனி மனித, சமூக சீர்திருத் தத்தைத் தூண்டி வலி யுறுத்துகின்ற கவிதை களும் வாசகர்களை சிந்திக்க வைக்கும் படியாக இந்தப் பத்திரிகையில் இருந் திருந்து இனிப் பிரசுர மாகும். இந்த இதழில் வந்துள்ள கவிதைகள் உங்களை சிந்திக்க வைக்கும் என்று நம்புகிறோம்.

– **ஆசிரியர்**

# எதில் தேவை சீர்திருத்தம்

(கடந்த பத்து வருடங்களாக சீர்திருத்தவாதத்தைப்பற்றியும், சீர்திருத்தப் போதனைகளைப்பற்றியும் இந்தப் பத்திரிகையில் வெளிப்படையாகவே பலரும் அறிய எழுதி வந்திருக்கிறேன். அதில் எனக்கு எந்தவிதமான வெட்கமோ, தயக்கமோ ஆரம்பத்தில் இருந்தே இருந்ததில்லை. சீர்திருத்தப் போதனைகளை நான் வியாபாரத்துக்காகவோ, என்னை உயர்த்திக்கொள்ளும் சுயநலத்துக்காகவோ பின்பற்றவில்லை. அது என் உயிர்நாடி; வேதம் அப்பட்டமாகப் போதிக்கும் சத்தியம். அதற்கு மாறான போதனைகளை, அவை வேதத்துக்கு முரண்பட்டவையாய் இருந்தால் இனங்காட்டவும், வேத அடிப்படையில் அவற்றின் போலித்தனத்தை வெளிப்படுத்தவும் நான் தயங்கியதில்லை. சத்தியத்தைப் பின்பற்றுகிறவர்களுக்கு முகத்தாட்சண்யம் பார்க்கும் குரங்குத்தனம் இருக்கக்கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். மற்றவர்கள் மனதைப் புண்படுத்துவது எழுதுகிறவனுக்கோ, விசுவாசிக்கோ பணியாக இருக்கக்கூடாது. அதற்காக உயிர் மூச்சாய் விசுவாசிக்கிற சத்தியத்தை மற்றவர்கள் மனஸ்தாபப் படுவார்கள் என்பதற்காக மறைப்பது கோழைத்தனம். "அசத்தியத்தை தோலுரிக்கிற போது சத்தியம் ஒளிருகிறது" என்றார் ஒரு சீர்திருத்தவாதி. சீர்திருத்தவாதிகளான லூதரும், கல்வினும் தம் காலத்தில் எதைச் செய்தார்களோ அதையே நான் செய்யத் துணிகிறேன்; முயற்சித்தும் வருகிறேன். புதிய வாசகர்களுக்காகவும், சீர்திருத்தப் பாதையில் செல்லத்துணிந்திருக்கிறவர்கள் அந்தப் பாதையில் எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை நினைவுபடுத்திக் கொள்ளுவதற்காகவும் இந்த ஆக்கத்தை எழுதியுள்ளேன். இறையாண்மையுள்ள கர்த்தர் நமது பாதையில் வழித்துணையாக இருந்து நாமும், நமது சபைகளும் தொடர்ந்து சீர்திருந்த உதவுவாராக.)

சீர்திருத்தம் என்ற வார்த்தையின் மூலம் நான் எதைக் குறிக்கிறேன் என்பதை இப்பத்திரிகையின் தீவிர வாசகர்கள் நிச்சயம் அறிவார்கள். இருந்தாலும் புதிய வாசகர்களின் பொருட்டு அதை சுருக்கமாக விளக்குவது அவசியமாகிறது. 'சீர்திருத்தம்' என்பதற்கு சாதாரணமாக மறுமலர்ச்சி, சீராக இல்லாததை திருத்தி அமைத்தல் போன்ற பொதுவான அர்த்தங்கள் உள்ளன. அந்த அர்த்தங்கள் இந்த வார்த்தையில் நிச்சயம் அடங்கியிருந்தபோதும், இதை முக்கியமாக கிறிஸ்தவ வரலாற்று அடிப்படையில் விளங்கிக்கொள்ளுவது அவசியம். கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் இதை வரலாற்று அடிப்படையிலேயே நாம் அதிகமாக பயன்படுத்துகிறோம்; வரலாற்றிலும் அப்படியே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

சீர்திருத்தம் என்ற வார்த்தையைக் கேள்விப்பட்ட உடனேயே கிறிஸ்தவ வரலாறு தெரிந்தவர்கள் 16-ம் நூற்றாண்டைத் திரும்பிப் பார்ப்பார்கள். அதற்குக் காரணம், அந்த நூற்றாண்டில்தான் ரோமன் கத்தோலிக்க மதத்தின் பிடியில் இருந்து கிறிஸ்தவத்திற்கு விடுதலை கிடைத்தது. 6-ம் நூற்றாண்டுகளில் இருந்து படிப்படியாக வளர்ந்து தன்னை நிலைப்படுத்திக் கொண்ட ரோமன் கத்தோலிக்க மதம் கிறிஸ்தவத்தைக் காலில் போட்டு மிதித்து வைத்திருந்தது. வேதத்தை ஒருவரும் வாசிக்க முடியாதபடியும், வேத அடிப்படையில் திருச்சபைகள் நிறுவ முடியாதபடியும் அரசையும் தன்வசப்படுத்தி

கொடூர ஆட்சி செய்துவந்த ரோமன் கத்தோலிக்க மதத்தில் இருந்து கர்த்தர் கிறிஸ்தவத்திற்கு விடுதலை பெற்றுத் தந்த நூற்றாண்டு 16-ம் நூற்றாண்டு. இந்த நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க மதத்திற்கெதிராகப் போர்க்கொடி ஏந்தி மார்டின் லூதர், ஜோன் கல்வின், ஜோன் நொக்ஸ் போன்றோர் புறப்பட்டு திருச்சபை சீர்திருத்தத்திற்குப் பாடுபட்டதாலேயே 'சீர்திருத்தம்' (Reformed) என்ற பெயர் அவர்கள் நிறுவிய சபைகளால் பயன்படுத்தப்பட்டன. தன்னை சபையாக உலகில் பொய்யாகக் காட்டிக் கொண்டிருந்த ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தகர்த்ததால் அவர்களும் 'சீர்திருத்த வாதிகள்' (Reformers) என்ற பெயரில் அழைக்கப்பட்டனர்.

17-ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் தோன்றிய 'பியூ ரிட்டன்' (பரிசுத்தவான்கள்) இயக்கமும் சீர்திருத்தவாதத்தின் தொடர்ச்சியே. லூதரையும், கல்வினையும்போல இக்காலத்தில் கர்த்தரால் எழுப்பப் பட்டவர்கள் ஜோன் ஓவனும், தொமஸ் குட்வினும், ஜோன் பனியனும், ரிச்சட் சிப்சும், இவர்களைப்போன்ற மேலும் நூற்றுக்கணக்கானவர்களும். 16-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் அடிப்படையில் தொடர்ந்த சபை சீர்திருத்தமே 17-ம் நூற்றாண்டில் பியூரிட்டனிசம் (Puritanism) என்ற பெயரைப் பெற்றது. இந்நூற்றாண்டில் மெய்ச்சபைகளைப் பாதுகாப்ப தற்காக விசுவாச அறிக்கைகளும், வினாவிடைப் போதனைகளும் எழுதி வைக்கப்பட்டன. இந்தப் போதனைகளின் அடிப்படையில் வரலாற்றில் தொடர்ந்து நிறுவப்பட்ட சபைகள் 'சீர்திருத்த சபைகள்' (Reformed Churches) என்று அழைக்கப்பட்டு வருகின்றன. இப்படியாக 17-ம் நூற்றாண் டில் வெளிவந்த சீர்திருத்த விசுவாச அறிக்கையே 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கை. ஸ்பர்ஜன் இதன் அவசியம் கருதி இதனை 1855ல் மறுபதிப்பு செய்து வெளியிட்டார். இது சீர்திருத்த போதனைகளின் அடிப்படையில் இயங்கி வரும் சீர்திருத்த பாப்திஸ்துகளின் விசுவாச அறிக்கையாக எல்லா நாடுகளிலும் இன்று இருந்து வருகிறது.

உலகத்திலிருக்கின்ற பாப்திஸ்து சபைகள் எல்லாமே 1689 விசுவாச அறிக்கையைப் பின்பற்றுவதில்லை. சீர்திருத்த பாப்திஸ்து என்று வசதிக் காகப் பெயர் சூட்டிக் கொள்கிறவர்கள்கூட இதனைத் தங்கள் சபையின் விசுவாச அறிக்கையாகக் கொள்வதில்லை. சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றாத அனேக பாப்திஸ்து பிரிவுகள் இருக்கின்றன. அவர்களில் பெரும்பான்மையானோர் ஆர்மீனியனிசக் கோட்பாட்டைத் தழுவிய வர்கள். ஆர்மீனியனிசக் கோட்பாட்டைப் பின்பற்றுகிற பாப்திஸ்து சபை கள் இரட்சிப்பிற்கு மனிதன் தன்னிலேயே தங்கியிருக்கிறான் என்று நம்பு கின்றன. இது வேத போதனைகளுக்கெல்லாம் முரணானதாகும். அத்தோடு அனேக பாப்திஸ்து சபைகள் ஸ்கோபீல்டின் டிஸ்பென்சேஷனலிசத்தையும் ஆறத்தழுவிக்கொண்டிருக்கின்றன. பொதுவாக ஆர்மீனியனிசப் போக்கைப் பின்பற்றும் பாப்திஸ்து சபைகள் எல்லாமே வேதத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு அதன் போதனைகளின்படி சபை நடத்துவதில்லை. மனித ஞானமே இவர்களின் வாழ்க்கையையும், சபைகளையும் வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் பாப்திஸ்துப் பிரிவுகள் முழுக்கு ஞானஸ் தானத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கின்றன. அதுவும் முழுக்கு

ஞானஸ்தானத்தைக் கேள்வி முறையில்லாமல் பலருக்கும் கொடுப்பது இவர்கள் மத்தியில் வழக்கிலிருப்பதைப் பார்க்கலாம்.

சீர்திருத்த பாப்திஸ்துகள் இதுவரை நாம் மேலே பார்த்த பாப்திஸ்துகளில் இருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் 16ம் நூற்றாண்டு சீர்திருத்தவாதத்தின் மூலம் எழுந்த போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேதத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு சபை நடத்தும் இலட்சியப் போக்கைக் கொண்டவர்கள். மனித ஞானத்திற்கு அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும் சபையிலும் இடங்கொடுப்பதை வழக்கமாகக் கொண்டவர்களல்ல.

16-ம் நூற்றாண்டில் எழுந்த சீர்திருத்தவாதத்தால் உயிர்பெற்ற சத்தியங்களை சுருக்கமாக பின்வருமாறு விளக்கலாம்:

1. கிருபையின் போதனைகள் - கர்த்தர் இறையாண்மையுள்ளவர் என்றும் அவர் தன்னுடைய அநாதிகாலத் திட்டப்படி தன்னுடைய மக்களைத் தெரிந்துகொண்டு, கிறிஸ்துவின் சிலுவைப் பலியை அவர்களுக்காக வரலாற்றில் நிறைவேற்றி, அவர்களுக்கு தகுந்த காலத்தில் விசுவாசத்தைத் தந்து தன்னிடம் அழைத்துக் கொள்ளுகிறார் என்பது கிருபையின் போதனைகளின் சுருக்கம். இதில் மனிதனின் கிரியைகளுக்கோ, பங்கிற்கோ இடமில்லை என்கிறது சீர்திருத்தவாதம். ஆவியானவரின் கிரியை ஆரம்பித்த பின்பே அவருடைய துணையின் மூலம் மனிதன் மனந்திரும்பி இரட்சிப்பை அடைகிறான் என்கிறது இவ்வேத சத்தியம். இது இரட்சிப்பைக் குறித்த சீர்திருத்தப் போதனை.

2. கர்த்தரின் ஆராதனை - ஆராதனை மனிதனின் சுய உணர்ச்சிகளின் அடிப்படையிலல்லாது கர்த்தரின் வேதம் காட்டும் வழிப்படி நடத்தப்பட வேண்டுமென்கிறது சீர்திருத்தப் போதனை. வேதம் போதிக்கும் ஆராதனை விதிகளை மீறிக் கர்த்தரை ஆராதிப்பது அந்நிய அக்கினியை கர்த்தருக்கு முன் ஏற்றும் பாவச் செயலுக்கு ஒப்பானது என்கிறது சீர்திருத்தப் போதனை.

3. கர்த்தரின் சபையும், ஊழியங்களும் - மனிதனின் தேவைகளை முன்வைத்து நடக்க வேண்டியதல்ல சுவிசேஷ ஊழியம்; கர்த்தரின் மகிமைக்காகவே அது நடத்தப்பட வேண்டும் என்று நம்பும் சீர்திருத்தப் போதனை சுவிசேஷ ஊழியத்தின் மூலமும், சபை அமைத்தலின் மூலமும் கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்றி அவருக்கு மகிமை தேடுவதை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு சீர்திருத்தக் கோட்பாடுகளை தமிழினம் அறிந்து வருகின்றது. பல இடங்களில் அக்கோட்பாடுகளின் அடிப்படையில் சபைகள் உருவாகி வருகின்றன. போக வேண்டிய பாதை அதிக நீளமானது என்பதும், அதில் முற்களும், கற்களும் அதிகமென்பதும் அவர்களுக்குத் தெரியும். சத்தியத்தால் கண்கள் திறக்கப்பட்டு சீர்திருத்தப் பாதையில் போக அவர்கள் காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள். சடங்குகளை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் சபைகளும், வயிற்றுக்காக போதக ஊழியம் செய்து கொண்டிருக்

கும் போலிகளும், காளான்களாய் நிரம்பி வழியும் ஸ்தாபனங்களும், கலாச் சாரத்தின் பெயரில் பிணநாற்றம் அடிக்கும் போலிப் பண்பாடும் தங்கள் பாதையில் இடறல்களாய் இருப்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். முன் வைத்த கால்களைப் பின்வைக்க முடியாது. முடிந்தவரை முயற்சி செய்து ஒரு கை பார்த்துவிடுவது என்ற வைராக்கியத்தோடு அவர்கள் எழும்பி யிருக்கிறார்கள். விடிவானில் தெரியும் வெள்ளி நட்சத்திரம் போல் இது நம் இதயத்துக்கு இதமளிக்கிறது.

சீர்திருத்தம் என்பது விசுவாசியின் வாழ்க்கையிலும், திருச்சபையின் போக்கிலும் வளர்ச்சியிலும் காணப்பட வேண்டிய மாற்றங்களைக் குறிக்கிறது. அந்த மாற்றங்கள் மனிதஞானத்தின் அடிப்படையில் உண்டா கும் மாற்றங்களல்ல; சத்திய வேதத்தின் அடிப்படையில் உருவாகும் சத்திய வளர்ச்சி. சீர்திருத்தம் ஏற்படுவதற்கு ஆரம்பம் மெய்யான விசுவாசமும், சத்திய வசனத்திற்குக் கட்டுப்படும் மனப்போக்கும்தான். சத்திய வேதத்தை வெறும் காகித ஏடாகப் பயன்படுத்தி வருபவர்களுக்கு சீர்திருத்தப் போத னைகள் சுட்டுப் போட்டாலும் விளங்காது. சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றுபவர்கள் முகத்தாட்சணியத்தை முரத்தால் அடித்து விரட்டி முழு மனதோடு சத்திய வேதத்திற்கு அடிபணிந்தவர்கள்.

எதில் தேவை சீர்திருத்தம்? என்ற கேள்விக்கான பதிலை இனிப் பார்ப் போம்.

### எதை விசுவாசிக்கிறோம் என்பதில் தேவை சீர்திருத்தம்

விசுவாசிகள் கூட்டம் என்ற பெயரில் எதை விசுவாசிக்கிறோம் என்பதே தெரியாத நிலையில் இன்று தமிழினத்தில் இருந்து வருகின்றது ஒருவகைக் கிறிஸ்தவம். ரோமன் கத்தோலிக்க மதத்திற்கும் சுவிசேஷ கிறிஸ்தவத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம் தெரியாமலும், கிறிஸ்தவ வரலாற்றை அறியா மலும், வேதத்தின் அருமை தெரியாமலும், வேத ஆதாரமில்லாத கொள்கை களைப் பின்பற்றியும், தனிமனிதர்களுக்கு துதிபாடி, பரவசத்தை மட்டும் நாடி இருந்து வருகிறது தமிழினத்தின் கிறிஸ்தவம். பாட்டும், இசையும் இருந்தால் போதும் வேறு எதுவும் தேவையில்லை என்ற மனப்பாங்கோடு இருட்டில் வாழ்ந்து வருகிறார்கள் அனேகர். வேதத்தை இந்தளவுக்கு அறி யாமலும், அதை உதாசீனப்படுத்தியும் வரும் இவர்கள் மெய்யான விசுவாசி களாக இருக்க முடியுமா என்ற சந்தேகமும் எழுகின்றது.

இந்தக் குழப்பமான மனநிலைக்கு மாறாக மெய்யான மனந்திரும்பு தலையும், விசுவாசத்தையும் கொண்டிருந்து வேதத்திற்கு அடிபணியும் மனப்போக்குள்ள விசுவாசிகள் உறுதியான வேதக்கோட்பாடுகளை அறிந்து வளர வேண்டியது அவசியமாகிறது. நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்று தீர்மானிப்பது நாமோ, தனி மனிதர்களோ அல்ல வேதம் மட்டுமே என்ற உறுதியான எண்ணம் நமக்கிருக்க வேண்டும். அந்த மனப்போக்கைக் கொண்டிருப்பதே சீர்திருத்தத்தின் ஆரம்பப்படி. காதில் விழுவதையெல் லாம் நம்புவது தவறு, கண்ணில் தெரிவதெல்லாம் ஆவியின் செயல்களல்ல என்ற நம்பிக்கை சீர்திருத்தவாதிக்கு அவசியம். எதையும் ஆராய்ந்து பார்க் காமல் ஏற்றுக்கொள்ளுவது சீர்திருத்தவாதியின் அகராதியில் கிடையாது.

*கர்த்தர் சகலத்துக்கும் அதிகாரி, அனைத்தையும் ஆள்கிற, நம்மைப் படைத்த அவர் மட்டுமே நமக்கு இரட்சிப்பை வழங்க முடியும் என்றும், நம்மில் எந்த நீதியும் பிறப்பில் இருந்தே இருக்கவில்லை, நீதியும், நாதியுமற்ற நமக்கு கர்த்தர் மட்டுமே ஜீவனை அளிக்க முடியும் என்ற சீர்திருத்த வேத அறிவு நமக்கிருக்க வேண்டும். சுட்டுப்போட்டாலும் எந்தவொரு மனிதனோ, போதகனோ, சுவிசேஷகனோ எவருக்கும் ஆத்மீக விடுதலை அளிக்க முடியாது என்பதில் உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். இரட்சிப்பு கர்த்தருடையது; இது, இன்று நமக்கிருக்க வேண்டிய வேதநம்பிக்கை.*

வேதத்தை தேவபயத்தோடு தன்மேல் அதிகாரம் செலுத்தும் கர்த்தரின் வார்த்தையாக ஏற்றுக்கொள்கிறான் சீர்திருத்த கிறிஸ்தவன். மாறும் நிலைப்பாடுடைய மனிதனின் போதனைகளுக்கு அவன் மசிய மாட்டான். வேதம் சொல்வதே நிரந்தரமான உண்மை என்பதை அறிந்திருந்து அதனை அன்றாடம், வாசித்து, படித்து, ஆராய்ந்து, அதன் வழி சிந்தித்து வேத போதனைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பான் சீர்திருத்த விசுவாசி. சீர்திருத்த வாதிகளைப் பற்றியும் அவர்களுடைய போதனைகளையும் படித்து ஆராய்ந்து தன்னை வேதசத்தியங்களில் நிலைநிறுத்திக் கொள்ளுவான். இன்று தமிழ் கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறை இது. பரவசத்தை ஊட்டி, ஆவியின் பெயரைச் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கும் எத்தர்களின் வழியில் போய் ஏமாந்துவிடாமல் இருக்க வேதசத்தியங்களில் நிலைத்திருப்பது அவசியம். இன்றைய தமிழ் மகனின் சிந்தனைப் போக்கை விளக்கும் ஒரு உதாரணத்தைக் கவனியுங்கள். இப்படிச் சொல்கிறார் ஒருவர், ‘அந்த சபையில் பிரசங்கம் இருக்கிறதோ இல்லையோ என்னைப் பரவசப்படுத்தும் ஒரு சூழல் நிச்சயமாக இருக்கிறது. அது போதும் எனக்கு’ என்று. இந்த எண்ணப் போக்கில் மாறுதல் தேவை. இது ஆத்தும அழிவுக்கு வழிதேடும் குழந்தைத்தனமான சிந்தனை.

நான் பரவசமடைகிறேனா? என்று புத்தியற்று சிந்திக்காமல், நான் எதை விசுவாசிக்கிறேன் என்ற கேள்வியைக் கேட்கப் பழகிக்கொள்ள வேண்டும். நாம் விசுவாசிக்கும் போதனைகள் தவறானவையாக இருந்தால் நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்தத்திற்கு இடமிருக்க முடியாது. சத்தியத்தைப் பின்பற்றுவதால் ஒருவனுடைய வாழ்க்கையில் ஏற்படுவதே பரிசுத்தம். பரவசத்தால் பரிசுத்தமடைந்து பரலோகம் போனவர்கள் ஒருவர்கூட இல்லை. தன் ஆத்துமாவை பரவசப்படுத்திக்கொள்ள தாவீதை சங்கீதம் வாசிக்கச் சொன்ன சவுல் அந்த நிமிடம் ஆறுதலை அடைந்தபோதும் இன்று வெந்துகொண்டிருப்பது நரகத்தில். எதை விசுவாசிக்கிறீர்கள் என்று இன்றே சிந்தித்துப் பாருங்கள். அவை வேத அடிப்படையில் அமைந்திருக்கின்றனவா என்று ஆராய்ந்து பாருங்கள். சபை வரலாற்றில் அவற்றை அப்போஸ்தலர் முதற்கொண்டு எத்தனைப் பெரியவர்கள் பின்பற்றியிருக்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள். வரலாற்றில் சபைகளும், சபைப் பெரியவர்களும் பின்பற்றியிராத, வேத அடிப்படையில் அமைந்திராத போதனைகள் ஒருக்காலும் மெய்யான போதனைகளாக இருக்க முடியாது; இருக்கப்போவதுமில்லை.

## கர்த்தரைத் துதிக்கும் முறையில் தேவை சீர்திருத்தம்

சபைகள் இன்று கலியாட்ட அரங்கங்களாக மாறியிருப்பதை யாரால் மறுக்க முடியும். பாட்டும், இசையுமே இன்று சபைகளை ஆள்கின்றன; கர்த்தரின் வார்த்தையல்ல. கைத்தட்டலும், உடலசைவும், அல்லேலூயா கூச்சலும் பரிசுத்த அமைதி ஆள வேண்டிய இடத்தில் அதிகாரம் செலுத்து கின்றன. குரலை உயர்த்தி நன்றாக நாலு பாடல்களைப் பாடமுடிந்து விட்டாலே போதக ஊழியத்துக்கு அழைப்பு வந்துவிட்டதாக எண்ணி அலைய ஆரம்பித்துவிடுகிறார்கள். பாடத் தெரிவது மட்டுமே போதகர் களுக்கான முக்கிய இலக்கணமாக எண்ணிச் செயல்பட்டு வருகிறது தமிழ் கிறிஸ்தவம். போதக ஊழியத்துக்கும் பாடுவதற்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாக வேதத்தில் நாம் வாசிப்பதில்லை. ஆனால், தமிழுலகத்தில் வசியக் குரலை வைத்துக் கொண்டு கவர்ச்சியாகப் பேசுவதையும் பாடுவதையுமே போதகர்கள் செய்துவருவது தமிழ் கிறிஸ்தவத்தைப் பிடித் திருக்கும் பெரும் தொழுநோய்.

‘துதி’ என்ற பெயரில் கர்த்தரைத் துதிக்கும் ஒரு முறையை தமிழினத்தின் சபைகளில் மட்டுமே காணமுடியும். தமிழ் வேதத்தில் இருக்கும் ‘துதி’ என்ற வார்த்தையை ஜெபத்தோடு தொடர்பில்லாத வார்த்தையாகக் கருதி சபை மக்களெல்லோரும் ஒருவர் மாறி ஒருவர் சத்தமிட்டு துதிக்கும் வழக் கம் ஆராதனை அமைதியைக் குலைத்துக் கொண்டிருக்கிறது சபை களிளெல்லாம். வேதத்தில் ஜெபத்திற்கு இன்னொரு பெயராக துதியும் இருக்கிறது என்பது அனேகருக்குப் புரிவதில்லை. ஜெபத்தில் வர வேண்டியது துதி என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. இயேசு, தான் போதித்த மாதிரி ஜெபத்தை துதியுடனேயே ஆரம்பித்தார். அவருடைய ஜெபத்தில் துதி கலந்திருந்தது. இதையெல்லாம் தமிழினம் எண்ணிப் பார்ப்பதேயில்லை. யாரோ என்றோ சுழிபோட்டு ஆரம்பித்து வைத்த ‘துதி’ சொல்லும் முறை இன்று சடங்காக சபைகளை ஆண்டு வருகிறது.

தமிழினத்தில் கர்த்தரை ஆராதிக்கும் முறையில் இன்று சீர்திருத்தம் தேவை. அதாவது, இருக்கும் தவறான முறைகள் அழிந்தொழிந்து வேத போதனைகளின் அடிப்படையில் ஆராதனை அமைய வேண்டும். கர்த்தர் தன் வேதத்தில் போதித்திருக்கும் ஆராதனை முறைகள் ஆராதனையை ஆள வேண்டும். கர்த்தர் தன்னை எந்தவகையில் ஆராதனை செய்ய வேண் டும் என்று கட்டளையிட்டிருக்கிறாரோ அந்தவகையில் அவரை அணுகும் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். இசை நம் காதுகளைக் குடைந்து செவி மடல்களை நாசம் செய்வது ஒழியும் நாள் ஏற்பட வேண்டும். அடக்கி வாசிக்கத் தெரியாத அடங்காப்பிடாரிகள் சபையைவிட்டு துரத்தப்படும் சீர்திருத்தம் இன்று தேவை. இசை அதன் பெயருக்கு ஏற்ப அமைதியாக பின்னணியில் இருந்து நாம் குரலுயர்த்தி பாடும் சங்கீதங்களுக்கும், பாடல் களுக்கும், கீர்த்தனைகளுக்கும் துணையாக மட்டும் இருக்க வேண்டும்.

வேதப்பிரசங்கங்கள் வேத சத்தியங்களின் அடிப்படையில் பிரசங்கிக்கப் படும் இடங்களில் மட்டுமே கர்த்தரின் ஆவியின் கிரியைகளைக் காணலாம். வேதப் பிரசங்கம் ஆராதனையின் முக்கிய அம்சம். வேதப் பிரசங்கமில்லாத ஆராதனை கர்த்தரின் ஆராதனையல்ல. ஆராதனையில் சீர்திருத்தம் ஏற்பட

ஒரேயொரு வேத வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு மனதில் பட்டதையும், இனிப்பினிப்பான கதைகளையும் சொல்லி நேரத்தை இழுத் தடித்து ஆத்துமாக்களை ஏமாற்றிவரும் பிரசங்கிகளுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். சத்திய போதனைகளே இல்லாது பிரசங்கமென்ற பெயரில் பிரசங்கிக்கப்படும் வெறும் வார்த்தை ஜாலங்களும், வாய்ச் சவடால்களும் சபைகளைவிட்டு விரட்டியடிக்கப்பட வேண்டும். விசுவாசத்தை அளிக்கக் கூடிய பிரசங்கங்களால் ஆராதனை அலங்கரிக்கப்பட வேண்டும். ஆராய்ந்து, கவனத்தோடு தயாரிக்கப்பட்ட வேதபோதனைகளுள்ள பிரசங்கங்கள் ஆரா தனையை உயர்த்த வேண்டும். பரிசுத்தத்தில் உயர்ந்த, அதை அணிநலனாகக் கொண்டு ஆத்துமாக்களுக்கு உதாரண புருஷர்களாக இருக்கும் மனிதர்கள் மட்டுமே பிரசங்க மேடைகளில் அனுமதிக்கப்பட வேண்டும். பரிசுத்தமற்ற வாழ்க்கை வாழ்ந்து, பணத்தைக் கையாடும் இழிவானவர்களும், பொய்யும், புரட்டும் சொல்லி வாழ்கிறவர்களும் பிரசங்க ஊழியம் செய்வதில் இருந்து அகற்றப்படும் நாள் வரவேண்டும். ஆராதனையின் பிரதான அம்சமான பிரசங்கத்தை தகுதியற்ற மனிதர்கள் செய்வது கர்த்தருக்குப் பொறுக்காது. பிரசங்கம் வேத அடிப்படையில் கொடுக்கப்படாத இடத்தில் ஆத்துமா ஒரு நிமிடமும் இருக்கக்கூடாது. கேட்டு சிந்தித்து வாழ்க்கையில் நடை முறையில் நிறைவேற்றக்கூடிய சத்தியங்களைத் தராத இடங்கள் கள்ளர் குகைகளே தவிர வேறில்லை. நிகழ வேண்டிய சீர்திருத்தத்தின் முதல்படியாக இன்று வேதபிரசங்கங்கள் ஆராதனை வேளையில் கொடுக்கப்பட்டு அவை சபைகளில் மிக உயர்ந்த இடத்தைப் பெற வேண்டும்.

## சுவிசேஷ ஊழியத்தில் தேவை சீர்திருத்தம்

இந்தப் பத்திரிகையில் நாம் பலமுறை சுவிசேஷ ஊழியங்களில் இன்றிருக்க வேண்டிய மாற்றங்கள் பற்றி எழுதியிருக்கிறோம். சபை அமைப் பதை நோக்கமாகக் கொண்டிராது (மத்தேயு 28:18–20) தனி ஊழியம் என்ற பெயரிலும், சொந்த ஊழியம் என்ற பெயரிலும் குடும்ப வியாபாரம் செய்வதை நோக்கமாகக் கொண்டு சுவிசேஷ ஊழியத்தில் இறங்குபவர் களுக்கு ஆத்துமாக்கள் அனுசரனையாக இருக்கக்கூடாது. அத்தகைய ஊழியங்கள் கர்த்தரின் அனுமதி பெறாதவை. சுவிசேஷ ஊழியங்களை செய்யப் புறப்படுகிறவர்கள் சபை மூப்பர்களுக்குள்ள இலக்கணங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அனுபவசாலிகளாகவும், ஏனையோ ரால் ஆராய்ந்து அனுப்பப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். எந்த வேலையும் செய்ய வக்கில்லாது கடைசியில் சுவிசேஷ ஊழியம் செய்யப் புறப்பட்டவர்களால் தமிழினம் இன்று தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதனாலேயே இன்று நம்மத்தியில் மேலைத்தேயத்தார் மத்தியில் இருப்பது போல் வளமான, உறுதியான, நல்ல போதகர்களையும், மூப்பர்களையும் கொண்ட சபைகளைக் காணமுடியாமலிருக்கிறது. சபை என்றால் என்ன? அது எப்படி இருக்க வேண்டும்? என்பதெல்லாம் தெரியாமல் ஊழியம் செய்யக் கிளம்பி இருப்பவர்களே நம்மத்தியில் அதிகம்.

சுவிசேஷம் சொல்லப்படும் விதத்திலும் இன்று சீர்திருத்தம் தேவை. மனிதர்களை வசியம் செய்து கிறிஸ்துவுக்கு அர்ப்பணம் செய்ய வைக்கும் செயல்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். வணிக உத்திகளைப் பயன்

*படுத்தி எந்தவிதத்திலாகிலும் ஆத்துமாக்களைக் கவரப் பார்க்காது கர்த்தருக்குப் பயந்து சுவிசேஷத்தைத் தெளிவாகச் சொல்லக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பலாபலன்களையும், ஆத்துமா தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டியதன் அவசியத்தையும் சொல்லும் நிலை ஏற்பட வேண்டும். சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தி கிறிஸ்துவின் மரணப்பலிபற்றி எதுவுமே சொல்லாமல் ஆத்துமாக்களைக் கரை சேர்க்கப் பார்க்கும் எத்தர்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.*

## சபை அமைப்பில் தேவை சீர்திருத்தம்

*சபை அமைப்பே இல்லாமல் சபைகள் என்ற பெயரில் ஊழியங்கள் தமிழினத்தின் மத்தியில் நிகழ்ந்து வருகின்றன. அதாவது, சபை சட்ட விதிகளையும், அங்கத்தவர்களையும், மூப்பர்களையும், உதவியாளர்களையும் கொண்டு முறையாக அமைந்த சபைகளைப் பார்ப்பதே அரிது. ஒரேயொரு போதகரை மட்டும் கொண்டு அவருடைய மனம்போன போக்கில் காரியங்கள் நிகழ்ந்து வருகின்றன பல சபைகளில். சுய இச்சையாலும், அதிகாரப் பிடிப்பாலும், தன் தலைமைக்கு இடையூறு ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தாலும் பல போதகர்கள் தங்களுக்கு பக்கத்தில் யாரையும் வரவிடுவதில்லை; எவரையும் வளர விடுவதும் இல்லை. இந்தப்போக்கால் நிம்மதி இல்லாமல், எல்லோரையும் சந்தேகக் கண்ணோடு பார்த்து வாழ்ந்து பல நோய்களையும் தேடிக்கொண்டு ஊழியத்தில் கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பார்க்க முடியாமல் இருந்து வருகிறார்கள் அனேக சுயநலம்பிடித்த போதகர்கள். சுயநலதாலும் ஊழியப் பளுவைத் தாங்கமுடியாமலும் இறந்து போகிறவர்களும் உண்டு.*

*சுவிசேஷப் பணியால் திருச்சபைகள் சரியாக உருவாகாததாலும், சபை அமைப்புக்கு என்றுமே இடமில்லாமல் இருந்ததாலும் தொடர்ந்தும் தமிழ் கிறிஸ்தவர்கள் தனி மனிதர்களின் எதேச்சாதிகாரப் போக்கிற்கும், அக்கறையற்ற, ஆத்தும விருத்தியற்ற தலைமைக்கும் தலைவணங்கி வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். வேத போதனைகளின்படியான சபை அமைப்போடு தமிழ் சபைகள் அமைய வேண்டும். சபை மக்களின் அங்கீகாரம் பெற்றுத் தெரிவு செய்யப்படாமல் தனிமனிதர்கள் தங்களைத் தாங்களே போதகர்களாக்கிக் கொள்ளும் அதிகப்பிரசங்கித்தனம் முடிவுக்கு வரவேண்டும். குடும்ப ஆதிக்கத்திற்கும், தனி மனித வழிபாட்டிற்கும் முடிவு கட்டப்பட வேண்டும். வேத அடிப்படையிலான சபை அமைப்பு இல்லாத இடங்களை விசுவாசிகள் அங்கீகரிக்கக்கூடாது; அவற்றிற்கு ஒத்துழைப்புக் கொடுக்கக்கூடாது. அத்தகைய இடங்களில் தொடர்ந்திருப்பதால் ஆத்துமாக்களின் ஆத்தும வாழக்கைக்கு ஆபத்து ஏற்படும். வேத அடிப்படையிலான சபை அமைப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படாதவரை மெய்யான திருச்சபைகளை தமிழினத்தில் ஒரு போதும் பார்க்க முடியாது. சபை சீர்திருத்தம் இன்று தமிழினத்தில் அவசியம் தேவைப்படுகிறது.*

## குடும்ப வாழ்க்கையில் தேவை சீர்திருத்தம்

*சாதி பார்த்தும், சமுதாயப் படிக்கட்டில் ஏற்ற இறக்கம் பார்த்தும்,*

இளைஞர்களின் மனநிலை தெரியாமல் பெற்றோர்கள் அவர்களுக்கு எவ ரெவரையோ மணமுடித்து வைப்பதுமாய் இருக்கின்ற அவல நிலைக்கும் முடிவுகட்டப்பட வேண்டும். இது எளிதாக விரட்டியடிக்க முடியாத எலித் தொல்லை தமிழினத்தில். இருந்தாலும் விசுவாசிகளான இளைஞர்களும், சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றி சபை நடத்துபவர்களும் இந்தக் காரியத்தில் அசட்டையாக இருந்துவிட முடியாது. போதகர்கள் தங்களு டைய சபை மக்களுக்கு இதுபற்றிப் போதித்து விசுவாசிகள் வேத அடிப் படையில் சிந்தித்து செயல்பட வழியெற்படுத்த வேண்டியது அவசியம். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு தம் பிள்ளைகளுக்கு சாதியும், தரமும் பார்த்து மணமுடித்து வைக்கிறவர்கள் கிறிஸ்துவை நிந்திக்கிறவர்கள்.

குடும்ப வாழ்க்கையிலும் சீர்திருத்தம் தேவை. கணவனும் மனைவியும் வேத அடிப்படையில் வாழ்வது அவசியம். எபேசியர் 5ம் அதிகாரம் ஒன்று சொல்ல, புறஜாதி மனிதர்களைப்போல குடும்பம் நடத்தி வரும் விசுவாசி கள் என்ற பெயர் கொண்டோர் அனேகர். குடும்ப வாழ்க்கைக்கும், கிறிஸ் தவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லாததுபோல் வாழ்ந்து கொண்டிருப் பவர்கள் விசுவாசத் துரோகிகள். கணவன் அன்புத் தலைவனாய், மனைவி அவனுக்கு அன்போடு அமைந்து நடப்பவளாய் இருவரும் விசுவாச வாழ்க்கை வாழ்ந்து, பெறும் பிள்ளைகளையும் அவ்வாறு வளர்க்கும் சீர்திருத்தம் இன்று தேவை. ஊழியம் செய்கிறேன் என்ற ஆர்வத்தில் மனைவி பிள்ளைகளை அதற்கு பலிகொடுப்பவர்கள் பாகாலின் மைந்தர் கள். அவர்களுக்கு வேதமும் தெரியவில்லை, கர்த்தரின் கட்டளைகளும் விளங்கவில்லை.

## பரிசுத்த வாழ்க்கையில் தேவை சீர்திருத்தம்

தமிழினத்தில் இன்று காணப்படும் கிறிஸ்தவர்கள் மத்தியில் பத்துக் கட்டளைகள் பற்றிய வேத ஞானம் இல்லாமலிருக்கிறது. அதை மேலெ ழுந்தவாரியாக வாசித்து பாராட்டுகிறார்களே தவிர அதன்படி வாழ முற் படுகிறவர்கள் குறைவு. பத்துக் கட்டளைகளின்படி வாழ முற்படாதவர்கள் கிறிஸ்தவத்தைப் பற்றிய அறிவே இல்லாதவர்கள். தமிழ்ப் பண்பாடு என்ற பெயரில் முகஸ்துதி பார்த்தும், உண்மைக்குப் புறம்பாய் நடந்தும், வாக்குத் தவறியும், பொய்களை நாளும் பொழுதுமாய் சொல்லி அதை மறைக்க சாக்குப் போக்குகளைச் சொல்லியும் பாவச்செயல்களைச் செய்து அது பாவம் என்பதை உணராமல் விசுவாசிகள் என்ற பெயரில் ஒரு பெருங் கூட்டமே நம்மத்தியில் இருக்கிறது. பத்துக்கட்டளைகளை அன்றாடம் இந்தவகையில் மீறுகிறவர்கள் எப்படி விசுவாசிகளாக இருக்க முடியும்? பத்துக் கட்டளைகளை வாழ்வில் நிறைவேற்றுகிறவனே விசுவாசி. அவற் றின்படி வாழுகிறவர்கள் வாழ்க்கையில் மட்டுமே விசுவாசத்தைப் பார்க்க முடியும். பரிசுத்தமான வாழ்க்கையை நாம் வாழ வேண்டுமென்பதற் காகவே இரட்சிப்பை இலவசமாக அளித்த கர்த்தர் நமக்கு பத்துக் கட் டளைகளையும் தந்திருக்கிறார். அவற்றின்படி நடந்துகொள்ளுகிறவர்கள் மட்டுமே தன்னை நேசிக்கிறவர்கள் என்றும் கூறியிருக்கிறார்.

தமிழினத்தில் இன்று ஓய்வுநாள் அசிங்கப்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வு

*நாளை அனுசரிக்காத மக்கள் கூட்டத்தில் மெய்க்கிறிஸ்தவத்தையும், கர்த்தர் மீதான மெய்யன்பையும் பார்க்க முடியாது. ஓய்வுநாளில் ஆராதனைக்கு ஒருவேளை மட்டும் போய்விட்டு, கடைக்குப் போய் பொருட்களை வாங்கி யும், துணிமனிகளை வீட்டில் துவைத்தும், டெலிவிஷனில் சினிமாப் படங்களைப் பார்த்தும், இருக்கும் பத்திரிகைகளையெல்லாம் வாசித்துத் தீர்த்தும், வீண் அரட்டை அடித்தும் வாழ்கிறவர்கள் விசுவாசிகள் என்றால், கிறிஸ்தவத்திற்கு இன்று புதுவிளக்கம் கொடுக்க நேரிடும். ஓய்வு நாளை அசிங்கப்படுத்தாதே என்கிறார் கர்த்தர். அந்நாள் எனக்குரியது என்கிறார் நம் தேவன். அந்நாளில் ஆத்தும ரீதியிலான காரியங்களையே செய்து, அநாவசியமான செயல்களைச் செய்வதை நாம் விலக்கி வைக்க வேண்டும். ஓய்வுநாளை தமிழினம் வேதபூர்வமாக அனுசரிக்க ஆரம்பிக்கும் நாளி லேயே தமிழினத்தில் சீர்திருத்தத்தின் உதயத்தைக் காண முடியும். ஓய்வு நாளை அசிங்கப்படுத்துவதில் போதகர்களே முன்நிற்பது இன்று தமிழினத் தைப் பிடித்துள்ள பெருந்தரித்திரம்.*

*பரிசுத்தமான வாழ்க்கை இருக்குமிடத்தில் பாவத்தைப் பற்றிய பயமும், அதைச் செய்துவிடக்கூடாது என்ற அக்கறையும், பாவத்தை எதிர்த்துப் போராடும் துடிப்பும் ஆர்வமும் இருக்கும். இந்த உலகத்தில் நாம் பூரணமாக வாழ்ந்துவிட முடியாத போதும் அதை நோக்கி வாழும் மனப்போக்கு விசுவாசிகளுக்கு இருக்கும். இதை இன்று தமிழ் கிறிஸ்தவத்தில் பார்க்க முடியாதிருக்கிறது. பாவத்தை அலட்சியப்படுத்துகிறவர்களே அதிகம். பாவத்தை உணர்த்தும் போதனைகளும், பிரசங்கங்களும் நம்மத்தியில் மிகக்குறைவு. சபைகளில் பாவம் மூடி மறைக்கப்படுகின்றது. ஆத்துமாக் களைக் கூசாமல் சபிக்கின்ற இதயமற்ற போதகர்கள் அதிகரித்திருக்கிற அளவுக்கு பாவத்தை விளக்கிக்காட்டி ஆத்துமாக்கள் பரிசுத்தமாக வாழ உதவுகின்ற போதகர்களை நம்மத்தியில் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின் றது. கூட்டம் குறைந்துவிடுமே, காணிக்கை தொகை அதிகரிக்காதே என்ற பயத்தில் தன்னுடைய தேவைகளில் மட்டுமே அக்கறை காட்டி ஆத்துமாக் களின் பாவங்களை சுட்டிக்காட்டித் திருத்தாமல் அவர்கள் செய்யும் அனைத்தையும் அனுசரித்து பகட்டு ஊழியம் செய்து கொண்டிருக்கும் போதகர்களுக்கு எத்தனை தண்டனை காத்திருக்கிறது என்பது அவர் களுக்குத் தெரியாமலிருக்கிறது. விசுவாசிகளின் வாழ்க்கைக்கு ஊறு செய்யும் போலிப்போதகர்கள் இருந்த இடம் தெரியாமல் போகும் நாள் வரத்தான் போகிறது.*

*எதில் தேவை சீர்திருத்தம்? நாம் இதுவரை பார்த்து வந்துள்ள அனைத் திலும் தேவை சீர்திருத்தம். இருளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மக்க ளுக்கு ஆத்தும விடுதலை தேவை இன்று. உணர்ச்சிகளுக்கு உணவூட்டி பரவசத்தை மட்டும் நாடி இருதயத்தைப் பாழடித்துக் கொண்டிருப்பவர்கள் கண்களைத் திறக்கக்கூடிய பிரசங்க சீர்திருத்தம் தேவை இன்று. பண ஆசையும், பதவி ஆசையும் இல்லாமல் சுத்த இருதயத்தைக் கொண்டு சிந் தித்து செயல்படும் சத்திய வாஞ்சையுள்ள போதகர்களும், இளைஞர்களும் அவசியமான இந்த சீர்திருத்தத்தில் இன்று ஈடுபட்டால் மட்டுமே நாளைய தமிழினத்திற்கு விடிவு காலம் ஏற்படும்; நல்ல சபைகளும் உருவாகும்.*

## கவிதைகள்
- சுபி -

### செழிப்பு!

காதில் செல்போன்
காரோ மாருதி
கழுத்தில் டை
வெள்ளை சூட்
தோளில் லெப்டாப்
இத்தனை செழிப்பும்
எப்படி வந்தது
என்று கேட்டால்
சொன்னார் சகோதரர்,
"அர்த்த ராத்திரியில்
இயேசு வந்தார்
கேளு தருகிறேன்
எது வேண்டுமானாலும்
என்று சொன்னதும்
கேட்டேன் இத்தனையும்
அப்படி வந்ததுதான்
இத்தனை செழிப்பும்"
என்றார் பல்தெரிய
அந்த நாள் முதல்
இந்த நாள் வரை
அர்த்த ராத்திரியில்
கண்கள் பூக்க
கதவைப் பார்த்து
நிற்கிறேன் இயேசுவுக்காய்
என்று வரும் என் செழிப்பு?

### நவீன யூதாசு!

பக்கத்தில் இருந்து
பாசத்தைக் கொட்டி
முதுகில் குத்தினான்
இஸ்காரி யோத்து
இயேசு பேர் சொல்லி
வேதத்தைப் புரட்டி
சிவனைக் காட்டுகிறான்
நவீன யூதாசு



'திருமறைத்தீபம்' பத்திரிகையின்
ஆசிரியர்

**பாஸ்டர்
ஆர். பாலாவின்**

# அருளுரைகள்

இப்போது ஒலிநாடாக்களில்
**(Audio Cassette)**
கிடைக்கும்

1. கர்த்தரின் பார்வையில் நோவா-1
2. கர்த்தரின் பார்வையில் நோவா-2
3. கர்த்தரின் பார்வையில் திருச்சபை
4. வாலிபர்களே ஜாக்கிரதை!
5. கர்த்தரின் தண்டனை
6. பத்துக் கட்டளைகளின்
   முக்கியத்துவம் - 1-2



விலை: (இந்திய) ரூபாய் 25/-
(தபால் செலவு தனி)
எழுதிப் பெற்றுக் கொள்ள
வேண்டிய முகவரி:

**சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்**
22 டீ. பி. கே. மெயின் வீதி,
பைகாரா,
மதுரை 04

# சிக்கலான சில வேதப்பகுதிகள்

(வேதத்தில் விளங்கிக்கொள்வதற்கு கடினமான சில பகுதிகள் உண்டு. சிலர் அவற்றைக் குழப்பமான பகுதிகளாகவும், விளங்கிக்கொள்ளவே முடியாத பகுதிகளாக வும் கருதி அலட்சியப்படுத்திவிடுகிறார்கள். வேறுசிலர் அப்பகுதிகளுக்கு தவறான விளக்கங்களைக் கொடுத்துவிடுகிறார்கள். வேதத்தை எழுத்தில் தந்திருக்கும் கர்த்தரே விளங்கிக்கொள்வதற்கு கடினமானதாக இருக்கும் பகுதிகளையும் தந்துள்ளார். அவற்றை முறையாக, கவனத்தோடும் ஆவியின் துணையோடும் ஆராய்ந்து படித்தால் கர்த்தர் அவற்றின் மூலம் வெளிப்படுத்தும் சத்தியங்களை நாம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். அத்தகைய வேதப்பகுதிகளை இந்த இதழிலிருந்து வாசகர்களின் நன்மை கருதி ஆராயவிருக்கிறோம். போதகர் **ஃபிரெட் சீபர்ட் (Fred Siebert, Australia)** இந்தப் பகுதிகளுக்கு இந்தப் புதிய வருடத்திற்கான இதழ்களில் விளக்கமளிப்பார்.)

வேதத்தில் விளங்கிக்கொள்வதற்கு கஷ்டமான ஒரு பகுதியை சந்திக்க நேருகிறபோது ஒரு போதகனோ அல்லது வேதமாணாக் கனோ என்ன செய்யவேண்டும்? இந்தக் கேள்வியோடு இந்த இதழில் இருந்து வேதத்தில் சிக்கலானதாகக் காணப்படும் வேதப்பகுதிகளை நாம் ஆராயப் போகிறோம். கர்த்தரால் வெளிப்படுத்தப்படாத, நம்மால் புரிந்துகொள்ள முடியாத சில விஷயங்கள் வேதத்தில் உள்ளன. அதே வேளை, படித்துப் புரிந்துகொள்ளக்கூடிய கடினமான பகுதிகளும் வேதத் தில் உள்ளன. அவ்வாறு விளங்கிக்கொள்ளக் கடினமானதாகத் தோன்றும் பகுதிகளை கர்த்தரின் துணையோடு ஆராய்வதே நம்நோக்கம்.

### வேதம் பற்றிய சில முக்கிய உண்மைகள்

வேதம் மனிதர்களால் எழுதப்பட்ட ஏனைய நூல்களைப் போன்றதல்ல. பவுல் அப்போஸ்தலன் வேதம் கர்த்தரின் ஆவியால் அருளப்பட்டது என்று கூறுகிறார். அதாவது, கர்த்தரின் ஆவியால் ஊதப்பட்டது (God-breathed) என்கிறார் (2 தீமோ. 3:16–17). வேதத்தை நாம் படிக்க முயல்கின்றபோது அதில் குறைகண்டு பிடிக்கும் எண்ணத்தைக் கொண்டிராமல் தாழ்மை யோடு அதைப் பயன்படுத்தி நம்மை ஆராய்ந்து பார்க்கும் எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும். “தேவனுடைய வார்த்தையானது இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்தையும்விடக் கூர்மையுள்ளதாகவும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்க தாக துளைக்கக்கூடியதாகவும், இருதயத்தின் சிந்தனைகளையும் மனோ பாவங்களையும் வகையறுக்கிறதாகவும் இருக்கிறது” என்கிறார் எபிரேயருக் கான நிருபத்தை எழுதியவர் (எபிரே. 4:12).

நம்மை பக்திவிருத்தியுள்ள வாழ்க்கைக்குத் தயார்செய்வதே வேதத்தின் இலக்காக இருக்கிறதேயன்றி நம்முடைய குருட்டார்வத்தின் மூலமாக எழும் கேள்விக்கெல்லாம் பதிலளித்துக்கொண்டிருப்பதல்ல. அத்தோடு, கர்த்தர் நம்மால் பூரணமாக புரிந்துகொள்ள முடியாதவராக எல்லையற்றுக் காணப்

*படுவதால் ஒருவரையறைக்கு உட்பட்டு சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் நாம் முழுமையாக அறிந்துகொள்ள முடியாத சில காரியங்கள் எப்போதுமே இருக்கும் என்பதை உணர வேண்டும். எல்லாக் கேள்விகளுக்குமே நமக்கு பதில் தெரியவேண்டிய அவசியமில்லை. நமக்குத் தெரியவேண்டிய தெல்லாம், அனைத்திற்கும் கர்த்தருக்கு பதில் தெரியுமென்பதையும், அவருடைய சித்தப்படி வாழ அவசியமானவைகளை அறிந்திருப்பதும்தான். ஏசாயா மூலம் கர்த்தர் சொல்லுகிறார், "பூமியைவிட வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைவிட என் வழிகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் உயர்ந்திருக்கிறது" (ஏசாயா 55:9). "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்." (உபாகமம் 29:29).*

## வேதம் பற்றியதொரு எச்சரிக்கை

*வேதத்தின் சிக்கலான பகுதிகளை விளங்கிக்கொள்ள முயலுகின்றபோது நாம் தவறானவிதத்தில் அவற்றிற்கு விளக்கங்கொடுக்க முனைந்தால் அது கல்லாதவர்களையும், உறுதியில்லாதவர்களையும் ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும் என்று பேதுரு கூறிய அறிவுரையை நாம் மனதில் வைத்திருப்பது அவசியம். (2 பேதுரு 3:15-16).*

## வேதத்தை விளங்கிக்கொள்வதற்கு அவசியமான இரு விதிகள்

*முறையாக வேதத்தை விளங்கிக்கொள்ளப் பயன்படுத்த வேண்டிய இரண்டு முக்கிய வேதவிதிகள் உள்ளன:*

*முதலாவதாக, எந்தவொரு வேதவசனத்தையும் அது அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தின் அடிப்படையிலேயே* (Context) *விளங்கிக் கொள்ள வேண்டும். இது ஒரு அடிப்படை வேதவிளக்க விதியாகும். இதைப் பயன்படுத்தாவிட்டால் எந்த வேதப்பகுதியையும் நாம் தவறாகவே புரிந்துகொள்ள நேரிடும்.*

*இரண்டாவதாக, வேதத்தை நாம் வேதத்தோடு ஒப்பிட்டுப் படித்து ஆராய வேண்டும்.* (Compare Scripture with Scripture). *ஒரு பகுதியில் தரப்பட்டிருக்கும் போதனையைப் பற்றி ஏனைய வேத நூல்கள் என்ன கூறுகின்றன? என்று ஆராய வேண்டும். வேதம் முழுவதுமே கர்த்தரின் வார்த்தையாக இருப்பதால் அதன் ஒரு பகுதி அளிக்கும் போதனையை இன்னொரு பகுதி நிராகரிக்காது; அதற்கு முரணான விளக்கத்தை அளிக்காது. இதன்படி ஒரு வேதப்பகுதி பற்றி நாம் கொண்டிருக்கும் விளக்கம் வேதத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படும் விளக்கங்களோடு ஒத்துப்போகாவிட்டால் நம்முடைய விளக்கம் தவறானது என்ற முடிவுக்கு வரவேண்டும்.*

## யூதாவில் காணப்படும் சிக்கலான வேதப்பகுதி

*"பிரதான தூதனாகிய மீகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே வாதிட்டபோது, அவனை நிந்தனையாகக் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்."*

*(யூதா 1:9).*

*இதை வாசித்தவுடனேயே மோசேயின் சரீரம் பற்றிய பிசாசின் சண்டையைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளும் ஆவல் நமக்கு ஏற்படுகிறது. ஆனால், இதைப்பற்றி அறிந்துகொள்ள பழைய ஏற்பாட்டில் எந்தப் பகுதியையாவது நாம் புரட்டிப்பார்க்க முடியுமா? முடியாது. ஏனெனில், மோசேயின் மரணம் பற்றி பழைய ஏற்பாடு நமக்கு மிகச்சுருக்கமான விளக்கத்தை மட்டுமே அளிக்கிறது. "அப்படியே கர்த்தரின் அடியானாகிய மோசே மோவாப் நாடான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் நாட்டிலுள்ள பெத்பேயாருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக் கம் பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக் குழியை அறியான்." (உபாகமம் 34:5, 6).*

*யூதா 1:9ல் நாம் பார்த்த விளக்கம் யூதாவுக்கு எங்கிருந்து கிடைத்தது என்பது யாருக்காவது தெரியுமா? சபை வரலாற்றின் ஆரம்ப காலத்தில் சிலர் யூதாவுக்கு இது அக்கால பாரம்பரியத்திலிருந்தோ அல்லது அன்றைய நூலான* The Assumption of Moses*-ல் இருந்தோ கிடைத்திருக்கலாம் என்று கூறினார்கள். ஆனால், இந்தப் புத்தகம் கர்த்தரால் அருளப்பட்ட நூலாக வேதத்தில் அறிவிக்கப்படவில்லை. தனக்கு எங்கிருந்து இந்த விளக்கம் கிடைத்ததென்று யூதாவும் சொல்லவில்லை. இதேபோல்தான் பவுல் அப்போஸ் தலனும் பின்வரும் வசனத்தில் காணப்படும் பெயர்கள் தனக்கு எங்கிருந்து கிடைத்ததென்பதை நமக்குத் தெரியப்படுத்தவில்லை. "யந்நேயும், யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல இவர்களும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற் கிறார்கள்; இவர்கள் நடத்தைகெட்ட மனிதர்கள். விசுவாச காரியத்தில் தள்ளப்பட்டவர்கள்." (2 தீமோ. 3:8). இருந்தாலும், வேதத்தை எழுதியவர் களைப் பற்றியும் அவர்கள் எங்கிருந்து செய்திகளைப் பெற்று எழுதினார்கள் என்பதையும் பற்றி பேதுரு நமக்கு மிக அவசியமான உண்மையை வெளிப் படுத்துகிறார்: "வேதத்திலுள்ள எல்லாத் தீர்க்கதரிசனமும் தீர்க்கதரிசியின் சொந்த விளக்கத்தினால் உண்டானதல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண் டும். தீர்க்கதரிசனமானது ஒருநாளும் மனிதருடைய சித்தத்தினாலே உண் டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியானவராலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." (2 பேதுரு 1:20, 21). அப்போஸ்தலனான பவுலும் இதே உண்மையை வலியுறுத்திக் கூறுகிறார். "என்னால் பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தி மனிதருடைய திட்டத்தின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனிதரிடமிருந்து பெற்றதுமில்லை, மனித னால் கற்பிக்கப்பட்டதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப் படுத்தினார்." (கலாத்தியர் 1:11–12). அதாவது, நாம் தெரிந்துகொள்ள வேண்டிய வற்றை கர்த்தரே வேதத்தை எழுதியவர்களுக்கு வெளிப்படுத்தி எழுத்தில் வடிக்கும்படிச் செய்தார். மோசேயைப் பற்றிய சண்டையின் விபரங்களை நாம் தெரிந்துகொள்ளுவது அத்தனை அவசியமானதாக இருந்திருந்தால் கர்த்தரே தன் வார்த்தையை எழுதியவர்கள் மூலமாக அவற்றை வெளிப் படுத்தியிருப்பார். அநாவசியமாக மோசே பற்றிய சண்டைக்கான விபரங் களை நாம் உலக நூல்களில் தேடிப்பார்க்கும் செயலை விட்டுவிட்டு வேதத் தில் கொடுக்கப்பட்டுள்ள செய்தி மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய*

தென்ன என்பதை அறிந்துகொள்ள முயல வேண்டும்.

## இந்தச் செய்தி அமைந்துள்ள பகுதி தரும் விளக்கம்

இந்தப்பகுதி மூலம் யூதா கர்த்தரின் பிள்ளைகளுக்கு மத்தியில் இரகசியமாக நுழைந்துவிடக்கூடிய பக்தியற்றவர்களைப்பற்றி எச்சரிக்கிறார். கர்த்தரின் சபையில் அவர்களால் தொல்லை ஏற்பட்டுவிடக்கூடாதென்பதற்காக அவர்களுடைய ஆபத்தான தீயசெயல்களை இங்கே வெளிப்படுத்துகிறார். (யூதா 1:4, 19). இத்தகைய தீயசெயல்களை தன்னுடைய மக்கள் மத்தியிலோ அல்லது உலக மக்கள் மத்தியிலோ அல்லது தேவதூதர்கள் மத்தியிலோ செய்கிற பக்தியற்றவர்களைக் கர்த்தர் எப்போதும் தண்டித்திருக்கிறார் என்றும் யூதா விளக்குகிறார். இவற்றை விளக்கிவிட்டு யூதா, தற்போது சபையை எதிர்நோக்கும் ஆபத்தை உணர்ந்து எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டிய பக்தியற்ற சிலரின் அடையாளங்களை விளக்க ஆரம்பிக்கிறார். “சொப்பனக்காரராகிய இவர்களும் தங்கள் சொந்த சரீரத்தைக் கறைபடுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி மாட்சிமைகளை நிந்திக்கிறார்கள்.” (யூதா 1:8). இவர்கள் ஒழுக்கங்கெட்டவர்களாக இருப்பதோடு, அதிகாரத்தை நிராகரிக்கிறவர்களாகவும், மனித அதிகாரங்களுக்கு எல்லாம் மேலான உயர் அதிகாரங்களையும் நிராகரிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள் என்று யூதா விளக்குகிறார். இந்த சந்தர்ப்பத்திலேயே யூதா, பக்தியுள்ளவர்களாக நடந்துகொள்கிறவர்களுக்கு உதாரணமாக மீகாவேலை உதாரணங்காட்டுகிறார். மீகாவேலின் எண்ணப் போக்கும், நடந்துகொண்ட முறையுமே இங்கு முக்கியமேயல்லாது மோசே பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ள சிறு குறிப்பு அல்ல. மிருகங்களைப்போல நடந்து கொள்ளும் ஒழுக்கங்கெட்ட மனிதர்களைப் போலல்லாது மீகாவேல் மோசக்காரனாகிய பிசாசின் முன்பாகக்கூட “கர்த்தர் அவனைக் கடிந்து கொள்வார்” என்று உத்தமமாகக் கூறியதாக யூதா விளக்குகிறார். கர்த்தரின் விசேட தூதனாக இருந்தபோதும் மீகாவேல் தாழ்மையோடு உத்தமனாய் நடந்து கொண்டான். அதேபோல் பக்தியுள்ளவர்கள் அகங்காரங் கொண்ட பக்தியற்றவர்களைப்போலல்லாது மீகாவேலைப்போல ஞானமும், தாழ்மையும் உள்ளவர்களாக நடந்துகொள்ளுவார்கள் என்று உணர்த்துகிறார்.

## வேதத்தை வேதத்தோடு ஒப்பிடுதல்

நாம் இதுவரை பார்த்த விளக்கத்தை வேறு எந்த வேதப்பகுதியாவது உறுதிப்படுத்துகிறதா? ஆம். பேதுரு தன்னுடைய 2-ம் நிருபத்தில் இதே செய்தியை தேவதூதனின் பெயரைச் சொல்லாமலும், மோசேயின் சரீரம் பற்றிய சண்டையைக் குறிப்பிடாமலும் விளக்குகிறார். “குறிப்பாக தீய இச்சையோடே பாவ இயல்புக்கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்களை அப்படிச் செய்வார். இவர்கள் துணிகரக்காரர், இறுமாப்புள்ளவர்கள், மாட்சிமையை நிந்திக்க அஞ்சாதவர்கள். அதிக பலமும் வல்லமையுமுடைய தேவதூதர்கள்கூட கர்த்தருக்கு முன்பாக அவர்களை நிந்தையாக குற்றப்படுத்தமாட்டார்களே. இவர்களோ பிடிபடவும் அழிக்கப்படுவதற்குமென்றே பிறந்த அறிவற்ற விலங்குகளைப் போலத் தங்களுக்குத் தெரியாதவைகளை நிந்தித்து, அந்த விலங்குகளைப் போலவே அழிந்துபோவார்கள்.” (2 பேதுரு 2:10-12) என்கிறார்.

# சீர்திருந்த வேண்டிய தமிழ்ப் 'பண்பாடு'

தமிழினத்தில் கிறிஸ்தவம் வேத அடிப்படையில் இயங்கி வருகிறதா? என்ற கேள்விக்கு இருதய சுத்தத்தோடு பதிலளிக்க வேண்டுமானால் இல்லை என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. எதற்கெடுத்தாலும் 'நெகட்டிவ்வாக' நம்மைப் பற்றிப் பேசுகிறாரே என்று சில உள்ளங்கள் இதை வாசித்து வருத்தப்படலாம். பொறுமையாக நான் சொல்லப் போவதைக் கேட்டுவிட்டு அதற்குப் பிறகு சிந்தித்து பதிலளியுங்கள்.

**மிஷனரிகள் விட்ட தவறு**

தமிழ் மக்கள் மத்தியில் பணிபுரிய வந்த அனேக மேலைத்தேச மிஷனரிகள் நல்ல உள்ளம் கொண்டவர்கள். பட்டரையும், ஜேம்மையும், பிரெட்டையும் வருடக்கணக்கில் கண்ணால் காணமுடியாமல் வாழ்ந்து நம்மக்கள் மத்தியில் நல்லூழியம் செய்திருக்கிறார்கள். வெய்யில் கொடுமையை சகித்துக் கொண்டு, தூசியையும், சூழலின் துர்நாற்றத்தையும், கொசுத்தொல்லையையும் பொறுத்துக்கொண்டு அரும்பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பையும், நல்ல நோக்கத்தையும் பாராட்டத்தான் வேண்டும். குடும்பத்தைப் பலிகொடுத்தும்கூட போகமாட்டேன் என்று பலர் உழைத்திருக்கிறார்கள். கடினமான நம்மொழியைக் கற்று அதில் பேசுவதென்றால் முடியுமா? ஆங்கிலத்தைப் படிக்க நம்மவர்கள் படுகிறபாடுதான் எத்தனை?

இத்தனை நன்மைகளை நமக்காக அவர்கள் செய்திருந்தும் அவர்கள் ஊழியத்தில் ஒரு குறை இருக்கத்தான் செய்தது. அது முழுவதும் அவர்களுடைய தவறல்ல. நம்மக்கள் இயேசுவின் அன்பை ருசிபார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு பணி செய்த அவர்கள் நமது பண்பாடு இயேசுவின் வார்த்தைக்கு ஏற்றபடி மாற்றமடைய பெரிதாக எதையும் செய்யவில்லை. ஒருசிலர் பாடுபட்டிருக்கிறார்கள்தான். ஆனால், அனேகர் அது கைவைக்கக்கூடாத, தீண்டத்தகாததொன்று என்று தொட மறுத்துவிட்டார்கள். சிலர் நமது பண்பாட்டை வேதமாகக் கூட ஏற்றுக்கொண்டிருந்திருக்கிறார்கள். ஏற்கனவே நான் சொன்னதுபோல் அது அவர்களுடைய முழுத்தவறல்ல. மேலைத்தேய பண்பாட்டில் வளர்ந்த அவர்களுக்கு குழப்பமான நம் பண்பாட்டைப் புரிந்துகொள்வது இலேசான காரியமல்ல. எத்தனை முயற்சி எடுத்தாலும் மேலைத்தேசத்தார் புரிந்துகொள்ளக் கஷ்டமானது நமது தமிழ்ப் பண்பாடு.

இங்கிலாந்தைச் சேர்ந்த, இப்போது அமெரிக்காவில் வாழும் என் நண்பரான போதகரொருவர் நம் தமிழ் சபைகளில் பெண்கள் ஒரு பக்கமும், ஆண்கள் ஒரு பக்கமும் உட்காருவதைப் பார்த்து துள்ளிக் குதித்தார். 'இது அடுக்காது. கணவன், மனைவி, பிள்ளைகளைக் கூடப் பிரித்து வைக்கி

றார்களே பாவிகள்' என்று பரிதவித்தார். அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அவருடைய எண்ணத்தில் எந்தவிதமான தவறுமில்லை. ஆணும், பெண் ணும் அருகருகே உட்காரக்கூடாது என்று வேதத்தில் எங்கே வாசிக்கிறோம்? இது நாமே உருவாக்கிக் கொண்டுள்ள பண்பாடு. ஏன் இதைச் செய்கிறோம்? பரிசுத்தம் கெட்டுவிடும் என்பதாலா? இல்லை. ஆண், பெண் உறவுபற்றி நம்மினத்தில் நாமே உருவாக்கிக் கொண்டுள்ள சில கருத்துக்களால் இந்தப் பிரிவினையை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். இப்படி சபைகளில் தள்ளி உட்காருவதோடு அது முடிந்துவிடுவதில்லை. கூடப்பிறந்து வளரும் சகோதரர் களும், சகோதரிகளும்கூட வீட்டில் பிரித்து வைக்கப்பட்டே வளர்ந்து வருகி றார்கள். உடன்பிறந்த சகோதரனும், சகோதரியும் கொஞ்ச நேரம் கூடிப்பேசிக் கொண்டிருந்தால்கூட அது தவறு என்று விதித்து இந்த ஆண், பெண் பேதத்தை சாதிவெறிபோல் நாம் பாதுகாத்து வருகிறோம். பெண்ணைப் பற்றியும், பெண்ணில் ஏற்படும் சரீரரீதியிலானதும், உளரீதியிலானதுமான மாற்றங்களை அறியாமல் வளர்ந்துவரும் வாலிபர்கள் நம்மினத்தில் அதிகம். ஏனெனில், இதுபற்றிப் பேசுவதோ, வாசிப்பதோ ஒழுக்கமற்ற செயல் என்ற உதவாக்கறை எண்ணத்தை நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். திருமண த்திற்குப் பிறகு கூட மனைவியோடு அவளுடைய சரீர மாற்றங்களில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றிப் பேசக்கூச்சப்பட்டு டாக்டரிடம் அழைத்துப் போகும் கணவன்மார் எத்தனை பேர்? அந்தளவுக்கு போலிப்பண்பாடு நம்மைக் குருடர்களாக வைத்திருக்கிறது. அதேபோல் ஆணில் ஏற்படும் மாற்றங்கள்கூட அனேக தமிழ்ப் பெண்களுக்குத் தெரிவதில்லை. இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்ட பின்னும் இது நம்மத்தியில் சுகமாகத் தொடர்கிறது. யாரும் இது பற்றி எதுவும் கேட்பதில்லை. பெண்கள் கூட்டம் என்றால்கூட ஆண் போத கர் பேசமுடியாமல் ஒரு பெண்ணே பேச வேண்டிய அளவுக்கு இந்தப் பேதம் தொடர்ந்து நம்மை ஆளுகிறது. இரட்சிப்பைக் கொடுக்கின்ற ராஜாதி ராஜனாகிய இயேசுவால்கூட இன்று இதில் கைவைக்க முடியாமலிருக்கிறது.

இப்படியிருக்கின்ற நிலைமையில் மேலைத்தேசத்து மிஷனரி என்ன செய்து விட முடியும்? அவர்கள் எதுவும் புரியாமல் இது பண்பாட்டோடு சம்பந்தப்பட்ட ஒன்று என்ற எண்ணத்தில் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டார்கள். அவர்கள் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டு இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற கூட்டம் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டு தொடர்ந்து நமது பண்பாட்டிலும், வாழ்க்கைமுறையிலும் எந்த வொரு மாற்றமுமில்லாமல் வாழ்ந்து வருகிறோம். நன்மையோ, தீமையோ பண்பாட் டில் கைவைக்கக்கூடாது என்பதே நமது எண்ணமாக இருக்கிறது.

## பண்பாடு நம்மைப் பாதிக்கிறது

இந்த அருமைப் பண்பாடு விசுவாசிகளைப் பாதிக்கிறதா? இல்லையா? என்பதே நான் விவாதிக்க விரும்புகிற விஷயம். நிச்சயம் பாதிக்கிறது. அவர்களுடைய விசுவாச வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, பிள்ளைகளின் வாழ்க்கை, சபை வாழ்க்கை எல்லாவற்றையுமே பாதிக்கிறது என்பது என்னு டைய தாழ்மையான முடிவு. எப்படி என்று கேட்கிறீர்களா? விளக்குகிறேன் பொறுமையாக வாசியுங்கள்.

முதலில், வேதம் சொல்லுவதைக் கவனியுங்கள். இயேசு நம் வாழ்க்கை

*யில் குடிபுகுந்தபின் நமக்குள்ளும், நம்மோடு சம்பந்தமுடைய அனைத்தி லும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்கிறது வேதம். அது கிறிஸ்துவே ஏற் படுத்துகிற மாற்றம். கிறிஸ்துவை ராஜாவாகக் கொண்டிருக்கும் நாம் புதிய சிந்தனைகளோடு, அதாவது வேத சிந்தனைகளோடு நம்மிலும், நம்மைச் சுற்றி நம்மோடு சம்பந்தப்பட்டிருக்கும் அனைத்திலும் வேதரீதியிலான மாற்றத்தைக் கொண்டுவர வேண்டியவர்களாக இருக்கிறோம். பண்பாடு என்பது நாம் பிறந்த சூழ்நிலையில் நம்மைப் பற்றிக்கொண்டிருக்கிற ஒன்று. அதில் நல்லதும் இருக்கலாம், கெட்டதும் இருக்கலாம். விசுவாசி நல்லவற்றை மட்டுமே தக்கவைத்துக் கொண்டு, தீயவற்றை விட்டுவிட வேண்டியவனாக இருக்கிறான். இன்னொருவிதமாகக் கூறினால், வேதம் அனுமதிக்கின்றவற்றை தக்கவைத்துக் கொண்டு வேதம் அனுமதிக்காதவற்றைத் தூரஎறிந்துவிட வேண்டியவனாக இருக்கிறான். நாம் விசுவாசிகளாக மாறியபின் நல்லது, கெட்டதைத் தீர்மானிப்பது நமது சமூகமோ, நாம் இதுவரைப் பின்பற்றி வந்துள்ள பண்பாடோ அல்ல. வேதம் மட்டுமே. விசுவாசிகளான நாம் வேதபோதனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்கள். வேதம் சொல்லுவதைச் செய்து, செய்யாதே என்று தடுப்பவற்றைத் தன் வாழ்க்கை யில் விலக்கிவைத்து வாழ்கிறவனே மெய்விசுவாசி.*

*சிலர் பண்பாட்டிற்கும் வேதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை, வேதம் அந்த விஷயத்தில் எல்லாம் நாம் ஊர்நிலவரத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகிறது என்பார்கள். பவுல் தீமோத்தேயு விருத்தசேதனம் செய்துகொள்ள அனுமதித்ததையும், "நான் எல்லோருக்கும் எல்லாமானேன்" என்று சொன்னதையும் காரணம் காட்டி விசுவாசியின் வாழ்க்கையில் பண்பாடுகள் தொடர்வதற்கு வேதம் அனுமதி யளிக்கிறது என்பார்கள். மேலே பார்த்த இரண்டும் வேத உதாரணங்களுக் கும் பண்பாட்டிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அந்த சந்தர்ப்பங்கள் புறஜாதிப் பண்பாடு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் தொடர்வதற்கு அனுமதி யளிக்கும் பகுதிகள் அல்ல. அந்த இரண்டும் ஒருசில சந்தர்ப்பங்களில் வாழ்க்கையில் வேதபோதனைகளுக்கு விரோதமற்ற செயல்களைத் தொடர் வதை மட்டுமே நியாயப்படுத்துகின்றன. உதாரணத்திற்கு சபைக்குள் செருப் புப் போடலாமா? போடக்கூடாதா? என்பது போன்ற பாதகமற்ற செயல் களையே அவை கருத்தில் கொண்டுள்ளன. தெளிவான வேத போதனை களுக்கு மாறான செயல்கள் நம் வாழ்க்கையில் தொடர்வதைக் கர்த்தர் ஒருபோதும் அனுமதித்ததில்லை.*

*மேலே நாம் பார்த்த இரண்டு வேத உதாரணங்களின் அடிப்படையில் பண்பாட்டிலுள்ள கேடான அம்சங்கள் நம் வாழ்க்கையில் தொடர்வதை ஆதரிப்பவர்கள் தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். வேதம் தொடாத இடம் விசுவாசியின் வாழ்க்கையில் இல்லை என்பது இவர் களுக்குப் புரியவில்லை. கிறிஸ்து நம் ராஜாவாக இருந்தால் அவர் ஆளாத இடம் நம் வாழ்க்கையில் இருக்கக்கூடாது. கணவன், மனைவி உறவில் கூட வேத அடிப்படையில் காரியங்கள் நடக்க வேண்டும் என்கிறது கர்த் தரின் வேதம். உதாரணத்திற்கு வீட்டுக்கு வரப்போகிறவளிடத்தில் வரதட் சனை வாங்குவது தமிழ் பண்பாடு. விசுவாசியான ஒருவன் தனக்கு*

*மனைவியாக வரப்போகிறவளிடத்தில் வரதட்சனை வாங்குவது வேத விரோதமான செயல். அப்பா, அம்மாவைப் பகைத்துக்கொள்ள முடியாது, அவர்கள்தானே வாங்குகிறார்கள் என்று ஒருவன் சொல்லுவானாகில் அவன் ஒரு பெரிய விசுவாசத் துரோகி; இயேசுவின் முதுகில் குத்துகிற யூதாசு. இந்த விஷயத்தில் வேதம் அதிகாரம் செலுத்துகிறது. அது இந்தப் போலிப்பண்பாட்டிற்கு இடம் கொடுக்கவில்லை. எப்படிச் சொல்லுகிறேன் என்கிறீர்களா? எபேசியர் 5:22-33 வரையுள்ள வசனங்களில் கணவன் மனைவியைப் போஷிக்க வேண்டிய முறையைப்பற்றி பவுல் கூறுவதை வாசியுங்கள். இயேசு தன் சபையை நேசிப்பதுபோல் தன் மனைவியை ஒருவன் நேசிக்க வேண்டுமென்கிறார் பவுல். மனைவியிடம் திருமணத்திற்கு முன்பே கைநீட்டிப் பணம் வாங்குகிற ஒரு பாவி அவளை இயேசு சபையை நேசிப்பது போலவா நேசிக்கப் போகிறான்? முதலில் அவனுடைய விசுவா சத்திலேயே பெரிய கோளாறு இருக்கிறது.*

## திருமணத்தில் பெற்றோரின் பங்கு

*பெற்றோர்கள் பார்த்து செய்து வைக்கும் திருமணத்தை எடுத்துக் கொள்வோம். இதுவும் தமிழர் மத்தியில் இருக்கும் வழக்கம். இதில் நன்மையும் இருக்கிறது; கேடும் இருக்கிறது. உதாரணத்திற்கு பெற்றோர் விசுவாசிகளாக இருந்தால், தங்களுடைய பிள்ளைகள் விசுவாசிகளாக இருந்தால் மட்டுமே விசுவாசிகளான துணைகளைத் தேடி வைக்க வேண்டும். விசுவாசியாக இல்லாத மகன் திருந்த வேண்டும் என்பதற்காக விசுவாசியான ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து வைப்பது எத்தனை பெரிய கொடுமை. அல்லது விசுவாசியான மகனோ, மகளின் எண்ணங்களுக்கு எந்த இடமும் கொடுக்காது பணத்தோடும், சமூக, சாதித்தரத்தோடும் வருகிறார்கள் என்பதற்காக அவிசுவாசிகளைப் பொருத்தம் பார்த்து திருமணம் செய்து வைப்பது எத்தனை பெரிய பாவம்.*

*தன் பிள்ளைகள் யாரையும் விரும்பிவிடக்கூடாது என்பதற்காக சபையில் எந்த வாலிபப் பையன்களும், பெண்களும் யாரையும் விரும்புவதற்கு தடைபோட்டு ஒருவரையொருவர் உடன்பிறந்த சகோதரர்கள் போல் நடத்த வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தி வைத்திருக்கும் போதகப் பெருமக்கள் எத்தனைப் பெரிய பாவத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சபையில் இருக்கும் பெற்றோர்கள் விசுவாசிகளான தங்களுடைய பிள்ளைகளுக்கு அவிசுவாசியையும், விசுவாசமேயில்லாத பெயர் கிறிஸ்தவர்களையும்* (Nominal Christians) *திருமணத்திற்காக நிச்சயம் செய்யும்போது அது தெரிந்திருந்தும், தெரியாததுபோல் மௌனமாக இருந்துவிடும் போதகர்கள் எத்தனைப் பெரிய பாதகர்கள். இது தொடக்கூடாத விஷயம் என்று வாய்திறக்காமல் இருந்துவிடுகிற போதகர்களின் ஊழியத்தைக் கர்த்தர் ஆசீர்வதிக்கப் போவதில்லை. வாழ்ந்து வளம்பெற வேண்டிய இளம் உள்ளங்களின் வாழ்க்கை வீணாவதற்கு போதகர்கள் உடன்போவதை எந்த விதத்தில் வேதம் அனுமதிக்கிறது? தமிழ்ப் பண்பாடு என்ற பெயரில் கிறிஸ்துவும், அவருடைய வார்த்தையும் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் வெளிப்படையாகப் புறக்கணிக்கப்படுகிறது. வேதசத்தியங்களின்படி திருத்தமடைய வேண்டிய பண்பாடு வேதத்தைப் புறக்கணிப்பதற்கு வழியேற்படுத்*

*தித் தந்திருக்கும் தமிழ் கிறிஸ்தவம் மெய்க்கிறிஸ்தவம்தானா? என்று நான் கேட்பதில் என்ன தவறு.*

*கிறிஸ்தவ சபைகளில் திருமண வயதில் இருக்கும் வாலிபர்கள் விசுவாசிகளான பெண்களை, அல்லது விசுவாசிகளான பெண்கள் விசுவாசிகளான வயதுக்கு வந்த வாலிபர்களை திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுவது எந்தவிதத்தில் தவறு? இது நம் பண்பாடில்லை என்று சொன்னால் நம் சமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் உணர்ச்சிகளே இல்லையா? கர்த்தர் படைத்துள்ள மனிதன் சகல உணர்ச்சிகளையும் கொண்டே படைக்கப்பட்டிருக்கிறான். உணர்ச்சிகள் தவறானவிதத்தில் அடக்கப்பட்டு, மறைத்து வைக்கப்படுகிறபோதுதான் மனிதர்கள் பாவச்செயலில் ஈடுபடுகிறார்கள். விசுவாசிகளுக்கு உணர்ச்சிகளே இல்லை என்று வேதத்தில் நாம் வாசிப்பதில்லையே. யாரைத் திருமணம் செய்ய வேண்டும் என்பதை திருமண வயதில் இருக்கிற வாலிபனோ, வாலிபப் பெண்ணோ முடிவு செய்ய வேண்டும். அவர்கள் உள்ளத்தில் ஏற்பட வேண்டிய உணர்வை பெற்றோர்களால் உருவாக்க முடியாது. பெற்றோர்கள் உள்ளத்தில் ஏற்பட வேண்டிய உணர்வு அல்ல அது.*

*தான் படைத்த உலகத்தில் தகுந்த ஒரு துணையைத் தேடிக்கொள்ளுமாறு கர்த்தர் ஆதாமைப் பணித்தார். ஆதாமே ஒரு துணையைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதே கர்த்தரின் விருப்பமாயிருந்தது. அப்படி ஒரு துணையைத் தேடிக்கொள்ளக் கூடிய சகல தகுதிகளும் அவனுக்கிருந்தன. தனக்கேற்ற துணையை அவனால் உலகத்தில் தேடிக்கொள்ள இயலாதபோதே கர்த்தர் அவனுக்கு ஏவாளைத் தந்தார். கர்த்தர் ஏவாளைத் தந்தபோது அவளை அவனுக்குப் பிடித்திருந்தது. அவனுக்குப் பிடித்தமில்லாதவளை கர்த்தர் படைத்துத் தரவில்லை. ஆதாமின் மனமறிந்து அவனுக்கேற்ற துணையை கர்த்தர் அளித்தார். நல்ல தகப்பன் செய்கிற காரியத்தை கர்த்தர் செய்தார். ஆதாம் ஏவாளைக் குறித்துக் கூறிய வார்த்தைகள் அவன் அவளை எந்தளவுக்கு நேசித்தான் என்பதை விளக்குகின்றன. இது பெற்றோர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கிறது. தனக்குப் பிடித்தமில்லாதவளை மணந்து வாழ்நாள் முழுதும் ஒருவன் மனக்கஷ்டத்துக்குள்ளாவதைப் போன்ற வேதனை ஒன்றுமில்லை. இளம் உள்ளங்களின் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுக்காது தங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காக இருவரை இணைத்து வைக்கும் அநியாயச் செயல், திருமண பந்தம் பற்றி வேதம் போதிக்கும் அத்தனை சத்தியங்களுக்கும் முரணாக அமைகிறது. அது கர்த்தருக்கு விரோதமானது என்பது விசுவாசிகள் என்று அழைத்துக் கொள்ளுகிற உங்களுக்குப் புரியாமல் இருப்பது ஆச்சரியமே.*

*பெற்றோர்களே, போதகர்களே, விசுவாசிகளான உங்கள் வாலிபர்கள் மெய் விசுவாசிகளை மட்டும் திருமணம் செய்து கொள்ள ஆலோசனை சொல்லுங்கள், அவர்களுக்குத் துணையாக இருங்கள். அவர்கள் காதலிக்க வேண்டிய பெண்ணையோ, ஆணையோ நீங்கள் தீர்மானிக்கப்போவது சிருஷ்டியில் மனித சரீரம், உணர்வுகள் சார்ந்த அனைத்திற்கும் எதிராக நடப்பதாகும். திருமணத்திற்குப் பிறகு காதலிக்கப் பழகலாமே என்று சிலர் சொல்லுவது காதில் விழுகிறது. என் கண் பார்த்து, மனதுக்குப் பிடிக்காத ஒருத்தியை என்னால் என்றாவது விரும்ப முடியுமா? இனிப்புக் கடைக்குப் போனால்*

கூட எனக்குப் பிடித்ததைத்தானே வாங்கிச் சுவைக்கிறேன். கடைக்காரன் சொல்லுவதைக் கேட்டு அவன் கொடுப்பதை வாங்கிக் கொண்டு வருவ தில்லையே. சாதாரண இனிப்பு விஷயத்திலேயே நம் நாக்கு விரும்புவதற்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறபோது வாழ்க்கை முழுவதும் சேர்ந்து வாழவேண்டியவள் நமக்குப் பிடிக்காதவளாய் இருந்துவிடக்கூடாது.

விசுவாசிகளான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்கள் விசுவாசிகளை மட்டும் விரும்பவும், மணக்கவும் ஆலோசனை சொல்ல வேண்டும் என்று சொன்ன உடனேயே எனக்கு இன்னொன்றும் நினைவுக்கு வருகிறது. நமது பண்பாட்டில் இந்த விஷயத்தை நாம் பிள்ளைகளோடு ஒருநாளும் பேசுவது இல்லையே. பிள்ளைகளுக்கு உணர்ச்சிகளே இல்லாதது போலவும், வயதுக்கு வந்தபின் எல்லாம் தானாய்த் தெரிந்துவிடும் என்ற கனவுலகில் அல்லவா நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆண், பெண் பற்றிய சரீர வேறுபாடுகளை யும், உணர்ச்சிகளையும், திருமணம், மணவாழ்க்கை பற்றி தம் பிள்ளை களோடு அவர்கள் வளர்ச்சி கருதி பேசி உதவுகிற பெற்றோர்களைத் தமிழினத்தில் பார்க்க முடிகிறதா? விசுவாசத்திற்கு எதிரியான வரட்டுப் பண்பாடு பலரின் கண்களையும், இருதயத்தையும் குருடாக்கி வைத்திருக் கிறது. பண்பாடு என்ற பெயரில் பிள்ளைகளோடு நட்போடு கூடிய உறவை வளர்த்துக் கொள்ளாது அவர்கள் வாழ்க்கையிலேயே அதிமுக்கியமான நிகழ்ச்சியான மணவாழ்க்கையை வெறும் சந்தை வியாபாரமாக நடத்திக் கொண்டிருக்கிற பெற்றோர்கள் தாங்கள் விசுவாசிகள்தானா என்று ஆராய் ந்து பார்பது நல்லது. பண்பாடு நம்மை எந்தளவுக்கு பாதித்து திருமண வயதுக்கு வந்துள்ள பிள்ளைகளுக்கு இல்லற விஷயத்தில் ஆலோசனைகள் சொல்லக்கூட முடியாதபடி நம்மைத் தடுத்து வைத்திருக்கிறது என்பது புரிகிறதா? விசுவாசிகள் இந்த மோசமான பண்பாட்டிற்கு முடிவு கட்டாத வரையில் நம்மினத்தில் குடும்பங்கள் விசுவாசமாக வாழ்க்கை நடத்துவது முடியாது. திருமணத்துக்கும் விசுவாச வாழ்க்கைக்கும் பெருந்தொடர்பு இருக்கிறது. வேத அடிப்படையில் அமையாத திருமணங்களின் மூலம் குடும்ப வாழ்க்கை வேதபூர்வமாக அமைவது சாத்தியமில்லை. சாத்திய மாகும் என்று நினைப்பது பெருங்கனவு.

## குடும்ப வாழ்க்கையில் பண்பாட்டுக் கோளாறு

நமது பண்பாட்டால் சீரழிந்திருப்பது திருமணம் மட்டுமல்ல, குடும்ப வாழ்க்கையும்தான். "யாரோ பார்த்து வைத்தவளைக் கட்டி திருமணம் முடிந்த பிறகு இருவரும் உடலுறவும் கொண்டுவிட்டோம். ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் அன்பினால்தான் அப்படிச் செய்தோமா என்று கேட்டால் நிச்சயம் இல்லை என்றுதான் பதில் சொல்ல வேண்டியிருக் கிறது" என்று என்னிடம் சொன்னார் ஒரு விசுவாசி. "ஒரு பெண்ணைக் காட்டி இவள் உனக்குப் பொருத்தம், மணந்துகொள் என்று சொன்னதால் கட்டினேன் தாலி. அதற்கு அடுத்தபடியாக ஒரு கடமையாய்தான் ஹனிமூன் நடந்ததே தவிர அன்பால் இணைக்கப்பட்டதால் அல்ல" என்று கூறிய விசுவாசி "காலச்சக்கரம் மட்டும் மாறி அமையுமானால் அன்போடு திருமணம் செய்து அன்போடு வாழ்க்கை நடத்துவதைத்தான் விரும்புகி

றேன்" என்றார். இதற்காக அவர் தன் மனைவியை இப்போது நேசிக்க வில்லை என்று அர்த்தமில்லை. சரியாக நடந்திருக்க வேண்டியது அப்படி நடக்கவில்லையே என்ற ஆதங்கம்தான் அவருக்கு.

இன்று எத்தனை விசுவாசிகள் வயது வந்தபின் காலாகாலத்தில் நடக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியாக மட்டும் கருதி பெற்றோர் காட்டும் ஒருத்தி கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு கடமைக்காக அவளோடு வாழ்ந்து பிள்ளை களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்? உடலுறவுக்காகவும், குடும்பப் பெயர் நிலைக்க பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவுமே மனைவி இருக்கிறாள் என்ற எண்ணம் பலர் மத்தியில் ஊறிப்போயிருக்கிறது. போதக ஊழியத்தில் ஈடுபடுவதற்கு மனைவி தேவை என்பதற்காக நாலு இடங்களில் தேடி யாரை யாவது மணந்துகொள்ளும் அநியாயம் நடப்பதும் தமிழினத்தில் மட்டும்தான். மனங்கள் பொருந்தி வராமல், வேதம் எதிர்பார்க்கும் உண்மையான அன்பு கணவன் மனைவிக்கு இடையில் இல்லாமல் சமூகக் கட்டுப்பாட்டிற்கு மட்டும் அடங்கி ஒரே வீட்டில் வாழ்ந்து கொண்டிருப்பதற்குப் பெயர் திரு மண வாழ்க்கையல்ல; சட்டரீதியான விபச்சாரம். நம்முடைய வரட்டுப் பண்பாடே இதற்கெல்லாம் வழிவகுத்திருக்கிறது.

கர்த்தரை அறியாத மக்கள் இப்படி வாழ்வது வழக்கம். கர்த்தரை விசுவா சிக்கிறவர்கள் திருமணத்தையும், குடும்ப வாழ்க்கையையும் அலட்சியப் படுத்தி வெறும் உடலுறவுக்காக அதில் ஈடுபடுவதைக் கர்த்தர் விரும்ப வில்லை. பெற்றோர் பார்த்துவைத்து ஏனோதானோவென்று திருமணம் முடி த்து குழந்தைகளைப் பெற்றுக்கொண்ட பின் வேறு பெண்கள் மேல் அன்பு காட்ட ஆரம்பித்த பலர் விசுவாசிகள் மத்தியில் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் பாவம் என்று மட்டும் சொல்லி உதறிவிட முடியாது. திருமண வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் வயிற்றுப் பசிக்கு சாப்பாடு போடுவது போல் அமைந்து விடுவதால்தான் பலர் இந்தக் கதிக்கு ஆளாகிறார்கள். பெற்றோர்கள் திருமண வயதில் இருக்கும் பிள்ளைகளின் உணர்ச்சிகளுக்கு இடங்கொடுத்து அவர்கள் மனதுக்குப் பிடித்தமாதிரியான வரன்களைத் தேடி, அவர்கள் சந்தித்துப் பேசி ஒருவர் மனதை இன்னொருவர் புரிந்து கொள்ள வகைசெய்து கொடுத்தால் மிருகங்கள் வாழ்வதுபோல் விசுவாசிகள் உடலுறவுக்காகவும், பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காகவும் மட்டும் குடும்ப வாழ்க்கை நடத்தும் வழக்கத்திற்கு ஒரு முடிவு கட்டிவிடலாமே.

## திருமண விஷயத்தில் சபைப் போதகர்களின் பங்கு

திருமணத்தையும், குடும்ப வாழ்க்கையையும் பற்றி வேதபூர்வமாக சபை களில் போதிப்பது போதகர்களின் கடமை. திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்களுக்கு இல்லற வாழ்க்கைபற்றி போதகர்கள் வேதபூர்வமாக சிந்தி த்து தகுந்த ஆலோசனை அளித்து உதவ வேண்டியது அவசியம். இதை எழுதிக் கொண்டிருக்கிறபோது, சபைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர் கள்/போதகர்கள் இருப்பதன் அவசியம் நினைவுக்கு வருகிறது. மிகவும் 'சென்சிடிவான' நம் பண்பாட்டில் ஒரே ஒரு போதகன் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்களை தனிமையில் சந்தித்து எப்படி ஆலோசனை தர முடியும்? ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருந்தால் ஆலோசனைகள் சொல்ல அது வசதியாக இருப்பதோடு, போதகர்களுக்கும் பாதுகாப்பாக

*இருக்கும். தனிமையில் பெண்களைப் போதகர்கள் ஒரு போதும் சந்திப் பதை வழக்கமாக வைத்திருக்கக் கூடாது.*

*திருமண காரியமெல்லாம் சபையில் பேசுகிற விஷயமல்ல என்றும், அவை பக்திக்குரிய விஷயங்களல்ல என்றும் பத்தாம்பசலித்தனமாய் சிந்தித்து வாழ்கிற போதகர்கள்தான் இன்று நம்மினத்தில் அதிகமாக இருக்கிறார்கள். கொரிந்தியருக்கு பவுல் எழுதிய நிருபத்தையும், எபேசியருக்கு எழுதிய நிருபத் தையும், பேதுருவின் நிருபத்தையும் போதகர்கள் முறையாக வாசித்துப் பார்த்தால் போதகர்களுக்கு இந்த விஷயத்தில் பெரும் பங்கிருப்பது தெரிய வரும். நம்மினத்தின் போலிப் பண்பாட்டிற்கேற்ப வேதத்தை தலைகீழாக மாற்றி சபை நடத்தி வருவதால்தான் போதக ஊழியம் இன்று தமிழினத்தில் சீரழிந்து காணப்படுகிறது. அனேக போதகர்களின் குடும்ப வாழ்க்கையும் வேதப்படி அமைந்ததாயில்லை. ஆத்துமாக்களுக்கு இயேசுவை அறிமுகப் படுத்துவதைத் தவிர வேறு எதையும் சொல்லிக்கொடுக்காமல், அவர்கள் இருட்டில் இந்துக்கள் வாழ்வதுபோல் வாழ்ந்துகொண்டிருப்பதற்கு தமி ழினத்தின் சபைப் போதகர்களுக்குப் பெரும் பங்கிருக்கின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது.*

*'திருமண வாழ்க்கைபற்றி போதகரிடம் கேட்டால் என் மானமே போய் விடும், அவர் என்னைத் தப்பாக நினைத்துவிடுவார்' என்று இன்று போதகர் கள் பக்கமே தலையைக் காட்டாமல் இருந்துவிடுகிறார்கள் வாலிபப் பிள்ளை கள். பெற்றோரிடம் கேட்க முடியாத நிலையிலும், போதகர்கள் பக்கம் போக முடியாத நிலையிலும் இல்லற வாழ்க்கையை ஆரம்பித்துவிட்டு இருட்டில் வாழ்ந்து வருகிறார்கள் அனேக இளைஞர்கள். இல்லற வாழ்க்கையின் இரகசி யத்தை கர்த்தர் அவர்களுக்கு வானத்தில் இருந்து திருமண நாளிரவில் திடீ ரென்று கொடுக்கப்போவதாக பெற்றோர்களும், போதகர்களும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. குடும்பங்களில் குளருபடி ஏற்பட்டு சபைகள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமானால் குடும்ப வாழ்க்கை பற்றி கர்த்தர் தந்துள்ள போதனைகளின்படி சபை மக்கள் சிந்தித்து ஆராய்ந்து வாழ்வதற்கு துணைபுரிவது போதகர்களின் அடிப்படை கடமை.*

*இன்னும் எத்தனையோ விடயங்களில் பண்பாடென்ற பெயரில் நாம் பாவத் திற்கு துணை போய்க்கொண்டிருக்கிறோம். இந்துமதக் கலாச்சாரம் இறுக்க மாகப் பிடித்து வைத்திருக்கும் தமிழ்ப்பண்பாட்டில் இருக்கும் கள்ளிச்செடி களும், களைகளும் உடனடியாக அகற்றப்பட வேண்டும். விசுவாசி என்று தன்னை அழைத்துக் கொள்ளுகிற எவரும் பிசாசின் கேவலமான வழிமுறை களுக்கு பண்பாடு என்ற பெயரில் தங்களுடைய வாழ்க்கையில் இடம் கொடுக் கக்கூடாது. பண்பாடு என்ற இருட்டில் வாழ்ந்துகொண்டு, சமூகக் கட்டுப்பாடு என்ற போர்வையில் ஒலிந்துகொண்டு சீரழிந்து வருகிறார்கள் தமிழ் கிறிஸ்தவர்கள். நமது பண்பாட்டில் வேத அடிப்படையில் சீர்திருத் தத்தை நாம் கொண்டுவராதவரையில் நமது விசுவாசம் உயிரற்ற பிணமாகத் தான் இருக்கும். இயேசுவை விசுவாசிக்கிறோம் என்று சொல்வதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் நம் வாழ்க்கையில் அந்த விசுவாசத்தின்படி அனைத் தும் அமைவதையே கர்த்தர் விரும்புகிறார்; எதிர்பார்க்கிறார்.*

# போப்புகளின் வளர்ச்சியின் உச்சகட்டம்

ஹில்டபிராண்டு (Hildebrand) *1073*ல் ஏழாம் கிரெகரி என்ற பெயரோடு போப்பாக பதவியேற்றபின் உலகத்தில் சபையின் பங்கில் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தார். பேரரசன் முதற்கொண்டு சாதாரண மனிதர்கள்வரை உலகத்தில் அனைவரும் தன்னுடைய அதிகாரத்துக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். கிறிஸ்துவின் பிரதிநிதியாக, பேதுருவின் வழிவந்த தனக்கு இந்த உலகத்தில் சகல அதிகாரமும் இருப்பதாக அறிவித்தார்.

இதன் முதற்படியாக குருமார்களில் சிலர் திருமண பந்தத்தில் ஈடுபட லாம் என்ற கருத்தை முழுபலத்தோடு தாக்கினார். அன்றிலிருந்து கத்தோ லிக்க மதகுருமார் பரிசுத்தமுள்ளதும், சிறப்பான அனுபவமுமான திருமண பந்தத்தில் ஈடுபட்டு குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பது அடியோடு தடைசெய்யப்பட்டது. அடுத்ததாக சபை சம்பந்தமான காரியங்களிலும், நியமனங்களிலும் அரசு அங்கீகாரம் பெறுவதை ஹில்டபிராண்டு வன்மை யாகக் கண்டித்தார். இது அங்கீகார சடங்கு (Investiture) என்று அழைக்கப் பட்டது. எவராவது சட்டரீதியான ஒரு பதவி நியமனம் பெறுவதற்கோ அல்லது அதிகாரபூர்வமாக எதையாவது பெற்றுக்கொள்ளும்போதோ அத ற்கு அடையாளமாக இந்த அங்கீகாரம் அமைந்திருந்தது. சபையைப் பொறுத்தவரையில் இந்த அங்கீகாரம் அவசியமற்றது என்பது ஹில்ட பிராண்டின் வாதமாக இருந்தது. சபைக்காரியங்களில் அரசின் தலையீடாக இதை அவர் கருதினார். இது நாட்டு நிர்வாகத்துக்கு அவசியமாக இருந்த போதும் ஹில்டர்பிராண்டு எதற்கும் மசிவதாயில்லை.

*1075*ல் இதை ஹில்டபிராண்டு தடைசெய்து தன்னை வந்து சந்திக்கும்படி பேரரசன் நாலாம் ஹென்றிக்கு கட்டளையிட்டார். இது பேரரசன் சபை யின் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருப்பதுபோல் அமைந் தது. பேரரசன் இதற்கு உடன்படாமல் போப்பைப் பதவி நீக்கம் செய்யும் படி ஜெர்மானிய கவுன்சிலை வற்புறுத்தினான். கோபமுற்ற போப் பேரர சனைப் பதவி நீக்கம் செய்தார். நாடும், மக்களும் போப்பிற்குக் கட்டுப்பட்ட தால் ஒருவரும் பேரரசனை மதிக்கவில்லை. உணவுக்கும், தண்ணீருக்கும் கூட வழி இல்லாத நிலையில் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட பேரர சன் ஒரு குறிப்பிட்ட பனிக்காலத்தில் தன் மனைவி பிள்ளைகளோடு அல்ப்ஸ் மலைச்சிகரங்களைக் கடந்து போப்பை சந்திக்க வந்தார். போப் தங்கியிருந்த கனோசா மாளிகைக்கு வந்து மதில்களுக்கு வெளியில் அனுமதி நாடி நின்றார். காலணிகள் எதுவுமின்றி மூன்று நாட்கள் குடும்பத்தோடு பேரரசன் போப்பைப் பார்ப்பதற்காக கடும் பனியில் நிற்க வேண்டிய தாயிற்று. நான்காவது நாள் போப் அரசன் தன்னை சந்திக்க அனுமதியளித்

தார். அரசன் போப்பின் காலில் விழுந்து தன்னுடைய பாவங்களையெல் லாம் மன்னிக்க வேண்டுமென்று கதறவேண்டியதாயிற்று. அதற்குப் பிறகே போப் அரசனை மன்னித்து தடையை நீக்கினார். இதன் மூலம் போப்பின் வெற்றி உறுதியானது.

சில காலங்களுக்குப் பின்பு ஹென்றி தன்னுடைய எதிரியோடு போரிட்டு வென்றபிறகு மீண்டும் தலை நிமிர முடிந்தது. போப் ஹில்டபிராண்டுக்கு சிசிலியின் படைகளின் துணையிருந்தபோதும் ஹென்றியை எதிர்த்து நிற்க முடியாமல் பின்வாங்க நேர்ந்தது. ஹென்றி அவருடைய இடத்தில் மூன் றாம் கிளெமன்ட்டை அமர்த்தினான். பதினொராம் நூற்றாண்டின் நெப் போலியன் என்று அழைக்கப்பட்ட ஹென்றி நாடுகடத்தப்பட்ட நிலையில் 1085ல் மரணமடைந்தான். அவனுடைய காலம் இந்த வழியில் முடிவடைந்த போதும் அவனுடைய கோட்பாடுகள் அவனுக்குப்பின் வந்த அரசர்களால் பின்பற்றப்பட்டன. பேரரசன் போப்பின் முன் மண்டியிட நேர்ந்ததை எவரும் மறந்துவிடவில்லை. ஹில்டபிராண்டின் ஆதரவாளர்கள் போப் இரண்டாம் ஆர்பனை நியமித்தார்கள். ஐந்தாம் ஹென்றியின் பதவிக்காலத் தில் Investiture பற்றி நெடுங்காலமாக இருந்த பிரச்சனைக்கு 1122ம் ஆண்டில் ஒரு தீர்வு காணப்பட்டது. இதன் மூலம் மத்திய காலப்பகுதியில் போப்புக் கும் பேரரசனுக்கும் இடையில் இருந்த பெரும் பிரச்சனை தீர்ந்தது.

12ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் லொம்பார்டியின் (Lombardy) செல்வ மிக்க நகரங்கள் குடியரசுகளாவதை விரும்பின. அவர்களின் தலைவர்களில் ஒருவனாக எழுந்தவன் பிரேசியாவின் ஆர்னால்டு (Arnold of Brescia 1100-1153) என்பவன். இவன் பிரசித்திபெற்ற அபிலார்டு (Abelard) என்பவரின் மாணவன். இவன் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் காணப்பட்ட எளிய வாழ்க்கைக்கு மக்கள் திரும்ப வேண்டும் என்று கூறி சீர்திருத்தவாதத்தின் ஆவியை நினைவுபடுத்துபவனாக இருந்தான். இவனுடைய பெரும் எதிரி யாக இருந்தவன் கிளேயார்வொக்சின் பெர்னார்டு (Bernard of Clairvaux) என்பவன். 1143ல் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த ரோமில் ஆர்னால்டு மிகுந்த ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டான். அதற்குப்பிறகு ஏற்பட்ட சண்டையில் ஒரு போப் உயிரிழக்க நேரிட்டது, அடுத்த போப் பிரான்சு நாட்டிற்கு ஓடித்தப்ப நேரிட்டது.

பிரெட்ரிக் பார்பரோசா (Fredrick Barbarossa) என்ற இளம் பேரரசன் இத் தாலிக்குப் படையுடன் வந்து லொம்பார்டைத் தற்காலிகமாக அடக்க நேரிட் டது. போப்புக்கு Investiture அளிக்குமுகமாக பயமேயறியாத ஆர்னால்டை பிரெட்ரிக் அவரிடம் ஒப்படைத்தான். பின்பு ஆர்னால்டு கொல்லப்பட்டான்.

பிரெட்ரிக்குக்கு போப்புடன் இருந்த நட்பு நெடுங்காலம் நீடிக்கவில்லை. 1176ல் லெக்னானோ (legnano) என்ற இடத்தில் லொம்பார்ட் நகரப் படை களால் பிரெட்ரிக் முறியடிக்கப்பட்டான். பெருவியப்பு ஏற்படுத்தும்படியான நிகழ்ச்சிகள் அதற்குப் பின் நிகழ்ந்தன. ஜுலை 24, 1177ல் பிரெட்ரிக் பார்ப ரோசா போப் அலெக்சாண்டருக்கு முன் தன்னுடைய சால்வையை நிலத்தில் விரித்து மண்டியிட்டுத் தலைவணங்கி அவருடைய கால்களை முத்தமிட் டான். அதற்குப் பின் போப்பின் குதிரை லகானைக் கையில் பிடித்துக்

*கொண்டு குதிரைக்குப் பக்கத்தில் தெருவில் நடந்து போனான். ஒரு நூற்றா ண்டுக்கு முன்பு போப் ஹில்டபிராண்டு அடைந்த வெற்றியைவிட பெரு வெற்றியாக போப்புக்கு இது அமைந்தது.*

## சிலுவைப் போர்கள் *(1095-1270)*

*ஹில்டபிராண்டு பெரிதும் ஆதரவளித்த சிலுவைப் போர்கள் அவருக்குப் பின்வந்த போப்புகளால் நடத்தப்பட்டன. அராபியர்களிடமிருந்து எருச லேமை மததீவிரவாதிகளான துருக்கிய இஸ்லாமியர்கள் கைப்பற்றியதிலிருந்து அங்கு யாத்திரை செய்தவர்களுக்கு பெரும் தொல்லைகள் ஏற்பட்டதோடு கிறிஸ்தவர்கள் அதைத் தமக்கேற்பட்ட களங்கமாகவே கருதினர். போப் மூன்றாம் அர்பன் முதலாவது சிலுவைப்போரை நடத்த அனைத்து ஏற்பாடு களையும் செய்தார். இதனால் தனக்கும் போப்புப் பதவிக்கும் கிடைக்கப் போகும் புகழை எண்ணி அவர் பெருமிதம் அடைந்தார். மக்களும் சிலுவைப் போருக்கு பெரும் ஆதரவளித்தனர். மக்களுக்கு சகலவிதமான ஊக்கத்தையும் சபை அளித்தது. சிலுவைப் போரில் ஈடுபடுபவர்களின் பலவிதமான பாவங் களும் சபையால் மன்னிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. சமூக விரோதி களுக்கு மன்னிப்பும், கடன் வாங்கியவர்களுக்கு கடனடைப்பும், வாழ்க்கை யில் படுபாவங்களைச் செய்தவர்களுக்கு பரலோக சந்தோஷமும் கிடைக்கும் என்று சபை உறுதியளித்தது. சபையின் பாவமன்னிப்புப் பத்திரங்கள் விற்கப் படுவதற்கு சிலுவைப் போர் வேறு எதையும்விட அதிக உதவிசெய்ததென்றே கூற வேண்டும்.*

*பேதுரு என்ற மதகுரு மக்களைத் தூண்டிவிட்டு போருக்கு ஆயத்தப்படுத் தினான். கர்த்தர் தங்களை அற்புதமாகக் காப்பார் என்ற நம்பிக்கையோடு உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட ஆயிரக்கணக்கானவர்கள் எருசெ லேமை நோக்கிப் புறப்பட்டனர். 1096ல் இப்படிப் போனவர்கள் 275,000 பேர். இவர்களில் பெரும்பாலானோர் குளிராலும், வியாதிகளாலும் வழியி லேயே இறந்தார்கள். இவர்களை வழிநடத்திய மதகுரு பேதுரு ஆபத்து தலையைக் காட்டிய நிமிடமே பறந்து தப்பிவிட்டார்.*

*முதலாவது அதிகாரபூர்வமான சிலுவைப் போருக்கான படை 1096ல் கொன்ஸ்தாந்திநோபிள்* (Constantinople) *வழியாகக் கிளம்பியது. 600,000 பேரைக்கொண்ட இந்தப் பெருங்கூட்டமும் ஆயிரக்கணக்கானோரைப் பலிகொடுத்தது. 1099ல் மீதமிருந்தோர் எருசலேமை அடைந்தனர். மொத்தத் தொகையில் பத்திலொரு பகுதியினர் மட்டுமே எருசலேமை அடைந்தனர். நகரை அடைந்ததும் அவர்கள் செய்த முதல் வேலை செரசீன்களை* (Saracens) *வெட்டிச் சாய்த்ததுதான். நிகழ்ந்த எட்டு சிலுவைப் யாத்திரைகளில் இது மட்டுமே ஓரளவுக்கு வெற்றியடைந்தது என்று சொல்ல வேண்டும். ஏனைய சிலுவை யாத்திரைகள் தோல்வியில் போய் முடிந்தன. 1270 வரை இத்தகைய சிலுவை யாத்திரைகள் தொடர்ந்து நடந்தன. பெரும் ஆரவாரத்தோடு ஆரம்பித்து ஆயிரக்கணக்கானோரின் உயிர்களைக் குடித்துப் பல பிரச் சனைகளையும் உருவாக்கிய சிலுவை யாத்திரைகள் இறுதியில் ஒரு முடிவு க்கு வந்தது போப் முதற்கொண்டு ஐரோப்பாவில் அனைவருக்கும் பெரும் நிம்மதியை அளித்தது.*

## போப் மூன்றாம் இனொசன்ட் *(1198-1216)*

*போப் இனொசன்ட் பதவியேற்ற காலத்தில் போப்புக்களின் ஆதிக்கம் உச்ச நிலையை அடைந்திருந்தது. ஹில்டபிராண்டின் கோட்பாடுகளை இவர் பின்பற்றியபோதிலும் அவற்றை நடைமுறையில் செயலாக்குவதில் அவரைவிட கைதேர்ந்தவராக இருந்தார். சந்தர்ப்ப சூழ்நிலைகளும் இவருக்கு அனுகூலமாக அமைந்தன. நாலாம் ஹென்றி கனோசாவிலும், அதற்குப் பின் பிரெட்ரிக் பார்பரோசா வெனிஸிலும் அடைந்த அவமானங்கள் போப்பே சகல அதிகாரமும் கொண்டவரென்றும், அவருக்குக் கீழ் எல்லா அரசுகளும் அடங்கி வாழ வேண்டும் என்றும் மக்களை நம்ப வைத்திருந்தன. அத்தோடு சிலுவை யாத்திரைகளும் போப்பின் நிலையை வலிமைப் படுத்தியிருந்தன. மூன்றாம் இனொசன்டின் வெற்றி அபாரமாயிருந்தது. இங்கிலாந்தின் அரசனான ஜோனும், பிரான்சின் அரசனான பிலிப்பும் அவமானப்படுத்தப்பட்டு போப்புக்கு அடங்கியிருக்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். அக்காலத்தில் உலகத்தில் கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் மக்கள் வாழ்ந்த பகுதிகளனைத்திலும் போப்பின் செல்வாக்கும், அதிகாரமும் நிலைபெற்றிருந்தது. தான் வாழ்ந்து அதிகாரம் செலுத்திய இத்தாலியில் தன்னுடைய விருப்பப்படி அனைத்தையும் செய்து அதிகாரம் செலுத்தி வந்தார் போப் இனொசன்ட்.*

*சிலுவை யாத்திரை என்ற பெயரில் அல்பிஜீனியர்களுக்கு* (Albigenses) *எதிராக இவர் ஆரம்பித்த போர் இவருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் முரணாக இருந்தது. தென்பிரான்சில் வாழ்ந்த அல்பிஜீனியர்கள் போப்புகள் வெறும் மனிதர்கள் என்றும் அவர்களுக்கு கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினர். 1215ல் இனொசன்ட் கூட்டிய, இதுவரை கூடிய எல்லாக் கவுன்சில்களுக்கும் உயர்ந்ததாக இருந்த லேட்டரன் கவுன்சிலே அவருடைய பதவிக்கு பெருமதிப்பூட்டியதாக இருந்தது.*

## போப் எட்டாம் போனிபேஸ் *(1294-1303)*

*மூன்றாம் இனொசன்டின் காலத்தில் உச்சகட்டத்தை அடைந்த போப்பின் அதிகாரம் எட்டாம் போனிபேஸின் காலம்வரை நிலைத்திருந்தது. அதற்குப் பின் அது தள்ளாடி நிலைதளர ஆரம்பித்தது. போனிபேஸ் சகல அதிகாரங்களும் தனக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும், 'மனிதன் இரட்சிப்பை அடைய போப்பிலேயே தங்கியிருக்க வேண்டியிருக்கிறது' என்றும் அறிக்கையிட்டார். போப்பின் இத்தகைய செயல்கள் அரசர்களையும், இளவரசர்களையும் கோபம் கொள்ளச் செய்தன. நாடுகள் போப்பைப் பற்றிய தங்களுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ள இது வழிவகுத்தது. போப்புக்கு எதிரானவர்கள் பொங்கி எழவும், தேசிய உணர்ச்சி நாடுகளில் பெருகவும் ஆரம்பித்தது. ஒரு பேரரசைக் கட்டுப்படுத்த முடிந்த போப்பால் பல நாடுகளையும் தன் கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை.*

## ஆவிக்னன் போப்புகள்

*அடுத்ததாக போப்புகள் இத்தாலிக்கு வெளியில் வாழ ஆரம்பித்தது அவர்களுடைய பதவியை பலவீனத்துக்குள்ளாக்கியது. ஐந்தாம் கிளெமன்ட் பிரான்சின் அரசனுக்கு அதிகளவு அடங்கியிருந்ததால் இத்தாலி மக்களின்*

# ஜோர்ஜ் புஷ்ஷின் வெற்றி

'லிபரல்' கருத்துக்களைக் கொண்டவர்களாலும், சில ஐரோப்பிய நாடுகளாலும், பல தேசங்களாலும் வெறுக்கப்பட்டவர் ஜோர்ஜ் புஷ். தேர்தலுக்கு முன் நடந்த ஒரு வாக்கெடுப்பு அவர் மறுபடியும் பதவிக்கு வருவதை உலக நாடுகள் விரும்பவில்லை என்பதை சுட்டிக்காட்டியது. "புஷ் பதவிக்கு வருவது அமெரிக்காவிற்கு அவமானம்" என்று நியூசிலாந்து வானொலிச் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார். அந்தளவிற்கு புஷ்ஷை பலர் விரும்பாமல் போனதற்குக் காரணமென்ன?

தன்னைக் கிறிஸ்தவராக அடையாளம் காட்டிக் கொள்ளும் ஜோர்ஜ் புஷ் தன்னுடைய விசுவாசத்தை மறைத்து வைக்காமல் வெளிப்படையாகப் பேசுவதையும், ஜெபிப்பதையும், அரசியலுக்காக தன்னுடைய நம்பிக்கைகளைப் பலியிடாததையும் பிசாசின் உலகம் விரும்பவில்லை. முகத்தாட்சண்யம் காட்டி எல்லோருடனும் ஒத்துவாழ வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டிராது, பலருக்குப் பிடிக்காதிருந்தும் தனக்கு நியாயமாய்ப்படும் நம்பிக்கைகளை நிறைவேற்றுவதில் அவர் உறுதியாயிருந்தது உலகத்துக்குப் பிடிக்கவில்லை. ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை வற்புறுத்திப் பேசுவதும், ஓரின மணத்திற்கெதிராக சட்டம் கொண்டு வர முயல்வதும், கருச்சிதைவு செய்வதற்கெதிரான சட்டத்தில் கையெழுத்திட்டதும் உலகத்துக்குப் பிடிக்கவில்லை. அராஜக அரசுகளோடு பொறுத்துப்போகாமல் தன் நாட்டின் நன்மைக்காகவும், உலக நாடுகளின் சமாதானத்திற்காகவும் பயங்கரவாதத்திற்கெதிராகப் போராடப் புறப்பட்டிருப்பது உலகத்துக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்கா புஷ்ஷை விரும்பவில்லை என்று உலக ஊடகங்கள் பொய்ப் பிரச்சாரம் தீட்டிவந்தன. அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஜோர்ஜ் புஷ் மறுபடியும் பதவியேற்றிருக்கிறார்.

விசுவாசத்தைப் பற்றிப் பேசுவதும், ஒழுக்கத்தை வற்புறுத்துவதும் உலகை ஆளுகின்ற பிசாசுக்கு எந்தளவுக்குப் பிடிக்காமல் போகின்றது என்பதை அமெரிக்க அதிபர் தேர்தல் சுட்டிக்காட்டியுள்ளது. அமெரிக்க கிறிஸ்தவர்கள் சரியான நேரத்தில் அவசியமானதைச் செய்து நாட்டைக் காப்பாற்றிவிட்டார்கள். புஷ்ஷின் கீழ் நாடு வளம் பெறட்டும். அதையும்விட ஆத்மீக செழிப்படையட்டும்.

*கோபத்துக்கு உள்ளானார். இத்தாலிக்கு வெளியில் இருந்து தன் கடமைகளைச் செய்ய ஆரம்பித்த கிளெமன்ட் இறுதியில் 1309ல் ஆவிக்னனில் இருந்து பணிபுரிய ஆரம்பித்தார். போப்புகள் எழுபது வருடங்களுக்கு மேலாக இத்தாலியில் வாழ்ந்துள்ளனர். போப்புகள் இத்தாலிக்கு வெளியில் வாழ ஆரம்பித்தது ரோமன் கத்தோலிக்க சபைக்கு அரசியல் ரீதியிலும், ஆத்மீக ரீதியிலும் ஆபத்தை விளைவித்தது. 1377ல் பதினொராம் கிரெகரி மறுபடியும் இத்தாலியில் இருந்து பணியாற்ற ஆரம்பித்தார்.*

## போப்புக்கள் மத்தியில் போராட்டம்

*1378ல் இத்தாலியில் ஒரு போப்பும், ஆவிக்னனில் ஒரு போப்புமாக இத்தாலியையும், பிரான்சையும் பிரதிநிதித்துவப் படுத்தி பணிபுரிய ஆரம்பித்தனர். நாற்பது வருடங்களுக்கு தொடர்ந்த இந்தப் பதவிப்போர் கத்தோலிக்க மதத்தை மேலும் பலவீனப்படுத்தி இரட்சிப்புக்கு போப்பில் தங்கியிருந்த கத்தோலிக்க உலகத்தை மேலும் குழப்பத்துக்குள்ளாக்கியது.*

(கடந்த இதழில் **ஹில்டபிராண்டு** என்ற பெயர் தவறுதலாக **ஹைடில்பிராண்டு** என்று பிரசுரமாகியுள்ளது. மன்னிக்கவும்)

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கேள்வி***: *90 கிறிஸ்துவை விசுவாசித்தல் என்றால் என்ன?*

***பதில்***: *தங்களுடைய இரட்சிப்பிற்காக பாவிகள் சுவிசேஷத்தின் மூலம் தமக்கு முன்வைக்கப்படுகிற கிறிஸ்துவைப் பெற்று அவரில் மட்டுமே தங்கியிருக்கும் இரட்சிப் பிற்குரிய கிருபையே கிறிஸ்துவை விசுவாசித்தலாகும்.*

*(எபேசியர் 2:8-10; யோவான் 1:12)*

***கேள்வி***: *91 ஜீவனுக்குரிய மனந்திரும்புதல் என்றால் என்ன?*

***பதில்***: *பாவி தன்னுடைய பாவத்தைக்குறித்த மெய்யான உணர்வோடும், கிறிஸ்துவில் கர்த்தர் தனக்களித்துள்ள கிருபையின் புரிந்துகொள்ளுதலோடும், துக்கத்தோடு தன்னு டைய பாவத்தை வெறுத்து, கீழ்ப்படிதலைத் தன்னுடைய முழுநோக்கமாகக் கொண்டு அதற்காக உழைக்கும்படி கர்த்தரை நாடும் இரட்சிக்கும் கிருபையே ஜீவனுக்குரிய மனந்திரும்புதலாகும்.*

*(அப்போஸ்தலர் 11:18; 2:37, 38; யோவேல் 2:12-13; எரேமியா 31:18-19; எசேக்கியல் 36:31; சங்கீதம் 119:59.)*

**விளக்கவுரை:** மேல்வரும் இரு வினாவிடைகளும் கிறிஸ்துவின் மீட்பு எந்த வகையில் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் நிறைவேறுகிறது என்பதைப் பற்றியதாகும். மனந்திரும்புதல் என்றால் என்ன? என்ற கேள்வி க்கு முதலில் பதிலைப் பார்ப்போம். ஒரு பாவியினுடைய இருதயத்திலும், ஆவியிலும் முழுமையான ஒரு மாற்றம் ஏற்பட்டு அவன் தன்னுடைய சுயநம்பிக்கை, சுயமதிப்பு எல்லாவற்றையும் துறந்து இரட்சிப்புக்காக கிறிஸ்துவை மட்டும் நாடி அவரை விசுவாசிப்பதே மனந்திரும்புதலாகும்.

ஒரு மனிதனில் இது எவ்வாறு நிகழ்கிறதென்பதை பின்வருமாறு விளக்க லாம்.

*1. சுவிசேஷத்தை ஒரு மனிதன் கேட்டு ஆவியின் மூலம் மறு பிறப்பை அடையும்போதே அவனால் கர்த்தருடைய சத்தியத்தை ஏற்றுக்கொள்ள முடிகிறது. மறுபிறப்பு மனிதனுடைய உள்ளத்தின் ஆழத்தில் ஏற்படுகிற ஆவியின் கிரியை. அதை அடையாதவனுக்கு சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் வல்லமை கிடையாது. சுவிசேஷத் தின் மூலம் இயேசு அவனுக்கு தீர்க்கதரிசியாக அவனுடைய பாவ த்தைப் பற்றியும், அதிலிருந்து விடுபட தன்னை அவன் விசுவாசிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்தி தன்னைப் பற்றிய அறிவைத் தருகிறார். தன்னுடைய பாவத்தை உணர்வதும், கிறிஸ்துவைப் பற்றிய அறிவை அடைவதுமே மனிதனுடைய மனந்திரும்புதலின் முதலாவது அம்சம்.*

*2. மறுபிறப்பின் மூலமாக சத்திய வெளிச்சத்தை அடைந்த மனிதன் இப்போது உணர்வுபூர்வமாக தனிப்பட்ட முறையில் தன்னுடைய பாவத்துக்காக வருந்தி அதிலிருந்து விடுபடும் முயற்சியில் ஈடுபட*

*வேண்டும். இது எல்லோரிலும் ஒரேவிதமாக நடந்துவிடாது. நபருக்கு நபர் வித்தியாசமாக இருந்தாலும் பாவ உணர்தலும், அதற்காக வருந்துதலும் இல்லாமல் எந்தவொரு மனிதனும் மனந் திரும்ப முடியாது.*

*3. ஒரு மனிதன் சுவிசேஷத்தைக் கேட்டு மறுபிறப்பை ஆவியின் மூலம் அடைந்து தன் பாவத்தை உணர்ந்து அதற்காக வருந்தி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தால் மட்டும் மனந்திரும்புதல் நிகழ்ந்துவிடாது. அவன் மனந்திரும்ப வேண்டும் என்கிறது சுவிசே ஷம். அவன் அதன்படி தன்னுடைய பழைய வழிகளைவிட்டு விலகி கிறிஸ்துவைத் தன்னுடைய பாவநிராவணத்துக்காக நம்பி விசுவாசிக்க வேண்டும். இதைச் செய்தபிறகே அவன் மனந்திரும்பி யிருக்கிறான் என்று நம்மால் உறுதியாகக் கூறமுடியும்.*

*இதுவரை பார்த்ததிலிருந்து இரண்டு உண்மைகளை நீங்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். (1) மறுபிறப்பு ஆவியானவர் ஒருவனில் செய்கிற கிரியை. (2) மனந்திரும்புதல் மனிதன் செய்ய வேண்டியது. கர்த்தர் மனித னுக்காக மனந்திரும்ப முடியாது. அதனால்தான் ஒவ்வொரு பிரசங்கியும் மனிதன் மனந்திரும்ப வேண்டிய அவசியத்தை பிரசங்கத்தில் வலியுறுத்து வது அவசியம். இரட்சிப்பை ஒருவன் அடைய வேண்டுமானால் மனந் திரும்பாமல் அவனால் அதை அடைய முடியாது.*

*திட்ப உறுதியான அழைப்பின் பிறகே ஒரு மனிதனில் மறுபிறப்பு நிகழ் கிறது. அதன் பின்பே மனிதனால் மனந்திரும்ப முடிகிறது. மறுபிறப்பை அடையாதவன் மனந்திரும்புவதற்கு வழியில்லை. மனந்திரும்புகிறவன் இத னால் தன்னைப் பெருமை பாராட்டிக்கொள்ள முடியாது. ஏற்கனவே மறுபிறப்பை அடைந்திருப்பதாலேயே அவனால் மனந்திரும்ப முடிகிறது. அதை அவனே செய்ய வேண்டியிருந்தாலும் அதில் அவன் பெருமைப்பட ஒன்றுமேயில்லை. அவன் ஏன் மனந்திரும்ப வேண்டியிருக்கிறது? மறுபிறப் பாகிய ஜீவனைக் கர்த்தர் அவனுக்கு ஆவியின் மூலமாக அளித்திருப்பதால் அவன் மனந்திரும்ப வேண்டுமென்று அவர் கட்டளையிட்டிருக்கிறார். அத்தோடு ஜீவனை அடைந்திருக்கிற அவன் சுவிசேஷ அழைப்பை நிரா கரிக்க வழியில்லை. சத்தியத்தை அறிந்து விளங்கிக் கொண்டிருக்கிறவன் அதை எப்படித் தூக்கி எறிவான்? அவன் செய்யத் துடிக்கிற காரியத்தை அவனால் செய்யாமல் இருக்க முடியாது. இதனால்தான் மனந்திரும்பு தலையும் விசுவாசத்தையும் மனிதன் செய்யவேண்டிய காரியமாக மட்டு மல்லாமல் கர்த்தரின் ஈவாகவும் வேதம் விளக்குகிறது. பின்வரும் வசனங் களைக் கவனியுங்கள்: “வாழ்வுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் வேற்று இனத்தாருக்கும் அருளிச் செய்தார்.” (அப்போ. 11:18). “கிருபை யினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவாகும்” (எபேசியர் 2:8). இதன் மூலம் மனந்திரும்புவதும், விசுவாசிப்பதும் நமது கடமை என்று வேதம் விளக்குவதைப் புரிந்துகொள்வது அவசியம். அதேவேளை கர்த்தர் நமக் களித்திருக்கிற ஜீவனுக்காக நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருந்து*

*அவரை மகிமைப்படுத்த வேண்டும். அவர் அளித்திருக்கிற மறுபிறப்பின் மூலமாகவே நாம் மனந்திரும்பும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.*

*போலியான மனந்திரும்புதலுக்கும், மெய்யான மனந்திரும்புதலுக்குமிடையிலுள்ள வேறுபாட்டையும் நாம் புரிந்துகொள்வது அவசியம். ஒருவருக்கு வெறும் வேத அறிவு மட்டும் இருந்துவிட்டாலோ அல்லது பாவத்தைப் பற்றிய குற்ற உணர்வு மட்டும் இருந்துவிட்டாலோ அல்லது இரட்சிப்பைக்குறித்த ஆர்வம் மட்டும் இருந்துவிட்டாலோ அவையெல்லாம் மெய்யான மனந்திரும்புதலாகிவிடாது. அல்லது ஒரு மனிதன் சுவிசேஷக் கூட்டத்தில் எடுக்கும் 'தீர்மானமும்' மெய்யான மனந்திரும்புதலுக்கு அடையாளமாகிவிடாது. அது மனித சித்தத்தின் கிரியையே தவிர கர்த்தரின் ஆவியின் காரணமாக உருவான கிரியையாக இருக்காது. மெய்யான மனந்திரும்புதல் மனிதனுடைய உணர்ச்சிகளை மட்டுமோ அல்லது அறிவை மட்டுமோ பாதிக்காது முழுமையாக அவனுடைய இருதயம், உணர்ச்சிகள், ஆவி அனைத்தையும் பாதித்து அவனில் ஆவிக்குரிய பெரும் ஆத்மீக மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும்.*

*விசுவாசமும், மனந்திரும்புதலும் ஒருவனில் வாழ்க்கை முழுவதும் இருக்க வேண்டியவை. அதாவது, மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கிற நாளை மட்டும் விசுவாசத்தின் முடிவாக தவறாகக் கருதிவிடக்கூடாது. அது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப நாள். அப்படி ஆரம்பித்த வாழ்க்கையில் மனந்திரும்புதலும், விசுவாசமும் தொடர்ந்திருக்க வேண்டும். மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்த நாளை மட்டும் பெரிதுபடுத்துவதால் எந்த நன்மையுமில்லை. அது முக்கியமானதாக இருந்தாலும் எல்லோராலும் நாளையும், நேரத்தையும் குறிப்பாக சொல்ல முடியாது. விசுவாச வாழ்க்கையில் தொடர்ந்து விசுவாசமாக இருப்பதையே கர்த்தர் எதிர்பார்க்கிறார். அதுவே முக்கியம். இறுதிவரை நிலைத்திருப்பவனே கிறிஸ்தவன். "உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயமாக்கிக் கொள்ளும்படி கவனமாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருபோதும் இடறி விழுவதில்லை." என்கிறார் பேதுரு (2 பேதுரு 1:10).*

| **மனந்திரும்புதல்** | **விசுவாசம்** |
|---|---|
| **ஒரு மனிதன் தன்னுடைய பாவத்தை உணர வேண்டும்.** | **ஒரு மனிதன் கிறிஸ்து தனக்காக என்ன செய்திருக்கிறார் என்பதை அறிந்திருக்க வேண்டும்.** |
| **அவனுடைய இருதயம் பாவத்திற்காக வருந்துவதாக இருக்க வேண்டும்.** | **கிறிஸ்துவை தனிப்பட்ட முறையில் விசுவாசிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்க வேண்டும்.** |
| **அவன் பாவ வழிகளில் இருந்தும், மரண பாதையில் இருந்தும் திரும்ப வேண்டும்.** | **கிறிஸ்துவை நாடி தன்னுடைய இரட்சிப்புக்காக அவரில் மட்டுமே தங்கியிருக்க வேண்டும்.** |

# பிரசங்கத்தில் கோட்பாடுகள்

சமகாலத்து தமிழ் பிரசங்கங்களை எடுத்துப் பார்த்தால் அங்கே கோட்பாட்டுப் பஞ்சம் நிலவுவதை சுலபமாக அறிந்து கொள்ள லாம். வேத வசனங்கள் அங்குமிங்குமாக பிரசங்கங்களில் பலர் பயன்படுத்தப்படுகிறபோதும் அவர்களுடைய பிரசங்கங்களின் சாராம்சத்தையும், உட்தாற்பரியத்தையும் ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் மிஞ்சுவது வெறும் கதைகளும், தனிமனித அனுபவங்களும் மட்டுமே. வேதவசனங்களை மட்டுமே விளக்கிப் போதிக்கின்ற பிரசங்கிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய அளவுக்கு மட்டுமே அத்தகைய பிரசங்கிகளை தமிழினத்தில் காண முடிகின்றது.

பிரசங்கங்களில் கோட்பாடுகள் இல்லாமலிருப்பதற்குப் பலகாரணங் களுண்டு. முதலில் பிரசங்கிகளில் பலர் பிரசங்கப் பயிற்சியையோ, அனு பவத்தையோ தங்களுடைய வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளவில்லை. இன்று வேதாகமக் கல்லூரிகளில் அத்தகைய பயிற்சிக்கு வழியுமில்லாம லிருக்கிறது. இரண்டாவதாக, இறையியல் போதனைகளை முறையாகக் கற்றுக்கொள்ளாததால் பிரசங்கிகளுக்கு வேத வசனங்களைப் பயன்படுத்தி சத்துள்ள போதனைகளை அளிக்க முடியாதிருக்கிறது. ஏதாவதொரு தலைப் பின் அடிப்படையில் அங்குமிங்குமாக தெரிவுசெய்யப்பட்ட சம்பவங்களின் தொகுப்பாகவே பிரசங்கங்கள் காணப்படுகின்றன. மூன்றாவதாக, கோட் பாடுகள் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற தவறான, வீணான எண்ணத் தைக் கொண்டிருக்கும் அனேக பிரசங்கிகள் அவற்றை முற்றாகத் தவிர்த்து விடுவதால் பிரசங்கத்தில் சொல்லுவதற்கு எந்த சத்தியமும் இல்லாமல் வெறும் சக்கையான சம்பவத் தொகுப்புகளைப் பிரசங்கமென்ற பெயரில் அளித்து வருகின்றனர். நான்காவதாக, வெறும் அனுபவத்திற்கு மட்டும் இடம் கொடுத்து வேதபோதனைகளைப் பெரும்பாலானோர் நிராகரித் திருப்பதால் பிரசங்கத்தைக் கேட்பதைவிட பரவசத்தை அடைவதே விசுவா சத்திற்கு வழி என்ற எண்ணத்தில் அவர்கள் வனாந்தரப் பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மொத்தத்தில் பெரும் பாதிப்புக்குள்ளாகி சத்திய மறியாமல் இருட்டில் வாழ்கிறது தமிழினம்.

பிரசங்கத்தின் முக்கிய பணி கர்த்தரின் செய்தியை ஆத்துமாக்களுக்கு தெளிவாக விளக்குவது. கர்த்தர் வேதத்தில் தந்திருக்கும் அனைத்துப் போதனைகளையும் தகுந்த முறையில் ஆத்துமாக்களின் ஆத்மீக வளர்ச்சிக் காக வாழ்நாள் முழுவதும் எடுத்துப் பிரசங்கிப்பதே பிரசங்கியின் முக்கிய கடமை. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கர்த்தரின் வேதம் கோட்பாடு களால் நிரம்பி வழிகின்றது. கர்த்தரின் ஒவ்வொரு செய்தியும் போதனை

களே. போதனைகள் இல்லாத செய்தியை வேதத்தில் பார்க்க முடியாது. தன்னுடைய போதனைகளை அறிந்த விசுவாசிகள் அவற்றின்படி விசுவாச மாக வாழவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவருடைய போத னைகளை அறிந்துகொள்ள விரும்பாத மனிதனால் கர்த்தரின் வழிப்படி வாழமுடியாது. கர்த்தரின் போதனைகளை நிராகரிக்கிறவர்கள் கர்த்தரையே நிராகரிக்கிறார்கள்.

பத்துக் கட்டளைகளை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால். முதலாம் கட்டளை கர்த்தர் மட்டுமே ஜீவனுள்ள தேவன் என்பதை விளக்குகிறது. அந்தக் கட்டளையை ஆராய்ந்து படித்தால் கர்த்தர் ஒருவரே தேவன் என்றும், அவர் ஜீவனுள்ள தேவன் என்றும், அவரைத் தவிர வேறு தேவர் கள் இல்லை என்றும், அவர் மட்டுமே தேவனாக இருப்பதற்கான காரணங் களையும் அறிந்து கொள்ளலாம். இதையே இன்னும் ஆழமாகப் படித்துப் பார்த்தால் கர்த்தர் சர்வ வல்லவர் என்றும், அனைத்தையும் படைத்து இயக்குகிறவர் என்றும் அவரைப் பற்றி இன்னும் அதிகமான சத்தியங்களை அறிந்து கொள்ளலாம். இதெல்லாம் முதலாம் கட்டளை கர்த்தரைப் பற்றித் தரும் போதனைகள். இதையெல்லாம் விளக்காமல் முதலாம் கட்டளை யைப் பிரசங்கிக்கவே முடியாது. இந்தப் போதனைகளை உதறித் தள்ளி விட்டு முதலாம் கட்டளையைப் பிரசங்கிக்க முற்பட்டால் கர்த்தரைப் பற்றிய சத்தியங்களே இல்லாத செய்தியாகத்தான் அது போய் முடியும்.

பிரசங்கம் என்றால் அதில் வேதபோதனைகள் இருந்தேயாக வேண்டும். வேதக்கோட்பாடுகளை விளக்காத செய்திகள் பிரசங்கங்கலல்ல. அத்தகைய செய்திகள் ஆத்துமாக்களை சீரழித்து விடும். இனி பிரசங்கத்தில் வேதக் கோட்பாடுகள் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்வதெப்படி? என்பதை ஆராய்வோம்.

## பிரசங்கிகளுக்கு இறையியல் அறிவு அவசியம்

இறையியல் என்ற பதத்தைக் கேட்டவுடனேயே பலருக்கு ஜுரம் வந்து விடுகிறது. அந்தளவுக்கு போலித்தனமான செய்திகளைக் கேட்டு இறையிய லைத் தள்ளி வைத்திருக்கிறார்கள் பெரும்பாலானோர். பிரசங்கம் செய்யத் துணிகிறவர்கள் கர்த்தரின் வேத அறிவில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண் டும். அதைத்தான் இறையியல் என்று கூறுகிறேன். கர்த்தரின் வேதத்தில் தரப்பட்டிருக்கும் அத்தனை சத்தியங்களையும் அறிந்தவனாகவும், அந்த சத்தியங்களைப் பகுத்துப் போதிக்கும் வல்லமையுள்ளவனாகவும் பிரசங்கி இருக்க வேண்டும். வேத இறையியலை இன்று வேதாகமக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ள முடியாமலிருப்பது கவலை தரும் செய்திதான். பெரும் பாலான வேதாகமக் கல்லூரிகள் இறையியல் என்பதையே அறியாத தேவ நிந்தனை செய்யும் கல்லூரிகளாக இருக்கின்றன.

இந்த நிலைமையில் பிரசங்கி எப்படி, எங்கிருந்து, வேத இறையியலைப் பெற்றுக்கொள்வது? அதற்கு வழி என்ன? என்ற கேள்வி எழுகிறது. முதலில் வேதத்தை முறையாகத் தொடர்ந்து வாசித்து, குறிப்பெடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அறைகுறையாக ஒரு பகுதியை வாசிப்பதோ அல்லது பிரசங்கம் செய்வதற்காக ஒரு வசனத்தை வாசிப்பதையோ நான் குறிப்பிட

வில்லை. அது வேதவாசிப்பாகாது. ஒவ்வொரு நாளும் நேரத்தை ஒதுக்கி ஆரம்பம் முதல் கடைசி நூல்வரை வருடா வருடம் வேதத்தை வாசித்து ஆராய்வதையே குறிப்பிடுகிறேன். இதன் அவசியத்தை உணர்ந்து இதற்கு நேரம் ஒதுக்கி வேதத்தைப் படிக்க வேண்டும். இப்படிப் படிப்பது வேதம் முழுவதிலும் தரப்பட்டிருக்கும் போதனைகளை நாம் படித்தறிந்து கொள்வதற்கு துணைபுரியும்.

அடுத்ததாக, ஒரு குறிப்பிட்ட வேதநூலை ஆராய்வதற்கு தனியாக நேரம் ஒதுக்கி அதைப் பலமுறைப் படித்து, அதன் எல்லா அம்சங்களையும் விளங்கிக் கொள்ள முயல வேண்டும். உதாரணத்திற்கு பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தை எடுத்துக் கொண்டால்,

அதை எங்கிருந்து பவுல் யாருக்கு எழுதினார்?

அந்த நூலில் அவர் நூலைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு எதைப் போதிக்கிறார்?

அந்தப் போதனை நூலில் எந்தமுறையில் தரப்பட்டிருக்கிறது?

அந்தப் போதனை எப்படி விளக்கப்பட்டிருக்கிறது?

அதேவிதமான போதனை வேதத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படுகின்றதா?

அந்தப் போதனையை பவுல் முக்கியமாக நூலைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு விளக்கியிருப்பதற்குக் காரணம் என்ன?

அந்தப் போதனையின் மூலம் பவுல் எதிர்க்கும் போலிக்கோட்பாடு எது?

அந்தப் போலிக்கோட்பாடு விசுவாசிகளை எந்தவிதத்தில் பாதித்தது?

என்பது போன்ற கேள்விகளுக்கான பதில்களை எல்லாம் ரோமருக்கு பவுல் எழுதிய நூலில் இருந்து பெற்றுக்கொள்ளும்படி நமது வாசிப்பும் ஆராய்ச்சியும் அமைய வேண்டும். இதை ஒரு நாளிலோ, ஒரு வாரத்திலோ செய்துவிட முடியாது. இதைச் செய்வதற்கு ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். இந்த முறையில் வேத நூல்களை ஆராய்ந்து ஆவியின் துணையோடு படிக்கும்போது வேதபோதனைகளில் நாம் நிச்சயம் வளர்வோம். வேதக் கோட்பாடுகளை இலகுவாக புரிந்துகொள்ளுவோம்.

## இறையியல் ஞானத்தைத் தரக்கூடிய நூல்கள்

வேதபோதனைகளை முறையாகக் கற்றுக் கொள்ளுவதற்கு வேதஞான முள்ளவர்கள் எழுதிவைத்துள்ள நூல்களை வாசித்து ஆராய்வது பெரும் பயனளிக்கும். இன்று வேதக்கோட்பாடுகளை விளக்கும் நூல்கள் தமிழில் மிகக் குறைவு. இருந்தாலும் இருக்கும் நல்ல நூல்களை பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பது மன்னிக்க முடியாத குற்றம். நம்முன்னோர்களான சீர்திருத்தவாதிகள் ஆராய்ந்து எழுதி வைத்துள்ள 1689 விசுவாச அறிக்கை வேதபோதனைகளை விளக்கமாகவும், சுருக்கமாகவும் தொகுத்து அளிக்கும் மிகவும் பயனுள்ள ஒரு நல்ல நூல். பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் வாசித்துப்பயன்பெற வேண்டிய நூல் இது. வேதம் போதிக்கும் அனைத்து சத்தியங்களும் இதில் முறையாகத் தொகுத்து அளிக்கப்பட் டிருக்கிறது. வேதத்தாலும், வரலாற்றாலும், காலத்தாலும் நிரூபிக்கப்பட்

டுள்ள அருமையான நூல். இதற்கு அடுத்தபடியாக வினாவிடைப் போதனையொன்றையும் நம்முன்னோர்கள் நமக்கு அருளிச் சென்றிருக்கிறார்கள். விசுவாச அறிக்கையில் நாம் வாசிக்கும் சத்தியங்களை வினா விடை வடிவத்தில் தந்திருக்கிறார்கள். அதையே திருமறைத்தீபத்தில் 'கிறிஸ்தவ கோட்பாடுகள்' என்ற தலைப்பில் விளக்கமாகத் தந்து வருகிறோம். இவை இரண்டையும் கவனமாகப் படிக்கும் எந்தப் பிரசங்கியும் தேவையான வேதபூர்வமான இறையியல் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஆரம்ப இறையியல் அறிவு இல்லாமல் பிரசங்க ஊழியத்திற்குப் போவது குதிரையோட்டத் தெரியாதவன் குதிரை சவாரி செய்யப் போவது போல்தான் அமையும்.

இவைதவிர வேதபூர்வமான நல்ல நூல்களையும் வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஜோன் பனியனின் 'மோட்சபயணம்' – இது வேத இறையியலை அனுபவரீதியில் அருமையாக விளக்குகிறது. மார்டின் லூதரின் 'பிறவி அடிமைகள்', மனிதன் பாவத்திற்கு எப்படி அடிமையாக இருக்கிறான் என்பதை விளக்கும் நல்ல நூல். நூல்களை வாசிக்கும்போது ஆராய்ந்து வாசிப்பது அவசியம். தவறான போதனைகளை அளிக்கும் நூல்களை வாசித்து இருதயத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. பெனிஹின், ஜொய்ஸ் மேயர், கென்னத் கோப்லாந்து, தமிழ் நாட்டில் தினகரன், சாம் ஜெபத்துரை மேலும் இவர்களைப் போன்ற பெந்தகொஸ்தே இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் நூல்கள் பக்கம் தலை வைத்தும் படுக்காமல் இருப்பது நல்லது. 'செழிப்பு உபதேசம்' என்ற பிசாசின் போதனையை இவர்கள் பரப்பி வருகிறார்கள். நல்ல நூல்கள் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் பின்வரும் முகவரிகளுக்கு எழுதிக் கேளுங்கள்: இந்தியாவில் இருப்பவர்கள், சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள், 22 டி. பி. கே மெயின் வீதி, பைகாரா, மதுரை 04 என்ற முகவரிக்கு எழுதவும். ஸ்ரீ லங்காவில் இருப்பவர்கள், டியாகிறைசிஸ் புக் சர்விஸ், 19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6 என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளவும்.

ஆங்கில அறிவுள்ளவர்கள் அனேக நல்ல நூல்களைப் படிக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆங்கிலத்தில் வாசிக்கும் பயிற்சியையாவது பெற்றுக் கொண்டால் பிரசங்க ஊழியத்திற்கு பேருதவியாக அமையும். முக்கியமாக பேர்கொவ்வின் Summary of Christian Doctrine, (Louis Berkhof) வேதசத்தியங்களை சுருக்கமாக விளக்குகிறது. இவர் முழுக்கு ஞானஸ்தானத்தை விசுவாசிப்பவரல்ல என்றாலும் நூலில் உள்ள இறையியல் மிகவும் தரம் வாய்ந்தது.

## வேதபோதனைகளை (இறை கோட்பாடுகள்) பிரசங்கத்தில் பயன்படுத்தும் முறை

நாம் கற்றறிந்து கொண்டிருக்கும் வேதபோதனைகளை பிரசங்கத்தில் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் கேட்கின்ற ஆத்துமாக்கள் வேத அறிவில் வளர வழி செய்து கொடுக்க முடியும். வேத அறிவில் அவர்கள் வளர்ந்தால் மட்டுமே அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் மெய்யான வளர்ச்சி ஏற்படும். பிரசங்கி ஒரு நூலில் இருந்து தொடர்ச்சியான பிரசங்கத்தை அளிக்க முடிவு செய்திருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவர் ஏற்கனவே அந்த நூலைப் பலதடவை

வாசித்து, அந்த நூலை எந்த முறையில் பிரசங்கிக்கப் போகிறேன் என்பதைத் தீர்மானித்து, நூலைப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றில் இருந்து எத்தனைப் பிரசங்கங்களை அளிக்கப் போகிறேன் என்பதையும் ஏற்கனவே தீர்மானித்திருப்பார். அத்தோடு அந்த நூலில் முக்கியமாகப் போதிக்கப்பட்டிருக்கும் இறைகோட்பாடு என்ன என்பதையும் நூல் விளக்கும் ஏனைய போதனைகளையும் குறிப்பெடுத்து வைத்திருப்பார். உதாரணமாக ரோமரை எடுத்துக் கொண்டால் அதில் நீதிமானாக்கல் (Justification) முக்கிய போதனையாக இருக்கிறது. அதைத் தவிர தேவ கோபம், தேவநீதி, பாவம், மூல பாவம், நியாயப்பிரமாணம், விசுவாசம், பரிசுத்தமாகுதல், கிறிஸ்துவினுடனான ஐக்கியம், எஞ்சியிருக்கும் பாவம், மகிமையடைதல், கர்த்தரின் இறையாண்மை, தேவனின் திட்டத்தில் இஸ்ரவேலின் பங்கு, விசுவாச வாழ்க்கை, கிறிஸ்தவ சுதந்திரம் போன்ற பல வேதபோதனைகளும் நூலில் அடங்கியிருக்கின்றன.

ரோமருக்கு எழுதிய நூலில் இருந்து பிரசங்கிக்கிறபோது மேலே நாம் பார்த்த சத்தியங்கள் காணப்படும் பகுதிகளில் அந்தந்த சத்தியங்களை முறையாக நூலில் அவை தரப்பட்டிருக்கும் விதத்தில் விளக்கமாக போதிக்க வேண்டியது பிரசங்கியின் கடமை. நூலில் காணப்படும் கோட்பாடுகள் அனைத்தையும் விலக்கி வைத்துவிட்டு அதிலிருந்து பிரசங்கம் செய்ய முடியாது. அப்படிச் செய்கிற ஆயிரக்கணக்கான அதிகப்பிரசங்கிகள் இருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியம். பிசாசு செய்யவேண்டிய வேலையை இவர்கள் தத்தெடுத்து செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இதை எப்படிச் செய்கிறார்கள் என்றால் நூலை முறையாக, தொடர்ச்சியாக விளக்கிப் போதிக்காது இங்கும் அங்குமாக தங்களுக்குப் பிடித்தமான ஓரிரு வசனங்களை எடுத்துக்கொண்டு அவற்றின் அடிப்படையில் மேலெழுந்தவாரியாகப் பிரசங்கித்து ரோமரில் பவுல் தந்திருக்கும் போதனைகளை அடியோடு மறைத்துவிடுகிறார்கள். இதனால் ஆத்துமாக்கள் வேதம் தெரியாமலேயே வாழ நேரிடுகிறது.

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து நீதிமானாக்கலைக் குறித்து பிரசங்கி பிரசங்கிப்பதானால் அவர் முதலிலேயே நீதிமானாக்கல் போதனையை ஆராய்ந்து படித்து குறிப்பெடுத்து வைத்துக்கொள்ளுவது அவசியம். அந்தக் கோட்பாட்டை சரிவர அறிந்துகொள்ளாமல் பிரசங்கிக்கப் போகக்கூடாது. நீதிமானாக்கலின் சகல அம்சங்கள் பற்றியும் பிரசங்கிக்கு நல்ல அறிவு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கோட்பாட்டைத் தவறாகப் பிரசங்கித்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். அதேபோலத்தான் அந்நூலில் உள்ள ஏனைய சத்தியங்களையும் கவனமாகப் படித்து அவற்றை நூலில் பவுல் எவ்வாறு கையாளுகிறார் என்பதை உணர்ந்து பிரசங்கிப்பது அவசியம். அதேவேளை நீதிமானாக்கலுக்கு எதிர் கோட்பாடுகளையும் அறிந்து வைத்திருப்பது அவசியம். ரோமன் கத்தோலிக்கர்கள் வேதம் போதிக்கும் நீதிமானாக்கல் போதனையை ஏற்றுக் கொள்ளுவதில்லை. கிரியையின் அடிப்படையிலான விசுவாசத்தை அவர்கள் போதிக்கிறார்கள். நீதிமானாக்கல் போதனையை நன்குணர்ந்தவர்கள் இரட்சிப்பில் மனிதனுக்கு எந்தப்பங்கும் இல்லை என்பதை நன்றாகப் புரிந்து

கொள்ளுவார்கள்.

## வேதக்கோட்பாடுகளை தலைப்பாகக் கொண்டு பிரசங்கித்தல்

ஒரு நூலில் இருந்து முறையாக பங்கு பங்காகப் பிரசங்கிக்காமல் சில சமயங்களில் வேதக் கோட்பாடுகளின் தலைப்புகளின் அடிப்படையிலும் (Topical sermons) பல வாரங்களுக்குப் பிரசங்கிக்கலாம். இப்படிப் பிரசங்கிப்பது சபை மக்களுக்கு வேதசத்தியங்களைப் போதித்து அவற்றில் அறிவு அதிகரிக்க வழி செய்யும். இதையே வழக்கமாகக் கொண்டிராமல் வசதிக்கும், ஆத்துமாக்களின் தேவைகளுக்கும் ஏற்ப இருந்திருந்து பிரசங்கிப்பது நல்லது. முக்கியமாக பிரசங்கி ஒரு காலண்டரை வைத்திருந்து குறிப்பிட்ட வருடத்தில் எப்போது எத்தனை வாரங்களுக்கு தலைப்புகளின் அடிப்படையில் பிரசங்கிக்கப்பது என்பதைக் குறித்து வைத்துக் கொள்ளலாம்.

இந்த முறையில் பிரசங்கிப்பதற்கு பிரசங்கிக்கப்போகும் ஒவ்வொரு வேதக் கோட்பாட்டிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம். வெறும் தலைப்பை மட்டும் எடுத்துக்கொண்டு உளறுவது ஒரு தலைப்பின் அடிப்படையில் செய்யும் பிரசங்கமாகாது. உதாரணமாக, பரிசுத்தமாகுதலைப் பற்றிப் பிரசங்கிப்பதானால் வேதம் அதுபற்றி எல்லாப் பகுதிகளிலும் கொடுக்கும் விளக்கங்களை அறிந்திருக்க வேண்டும். மேலும் வேதத்திற்கு முரணான பரிசுத்தமாகுதல் பற்றிய தவறான போதனைகளையும் அறிந்துவைத்திருக்க வேண்டும்.

கத்தோலிக்க மதம், விசுவாசி முழுக்கு ஞானஸ்நானத்தின் மூலமும், சபைக்குக் கட்டுப்பட்டு செய்யும் கிரியைகளின் மூலமும் ஒருவன் பரிசுத்தமாகுவதாக தவறாகப் போதிக்கிறது. பெந்தகொஸ்தே இயக்கங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் விசுவாசி பரிசுத்தமாகுவதாக எண்ணி, விசுவாசியின் கடமைப்பாட்டை முற்றாக அலட்சியப்படுத்துகிறது. சகோதர சபைப் பிரிவுகளில் சில பத்துக்கட்டளைகளுக்கு விசுவாசி அடங்கி நடக்க வேண்டுமென்பதை அலட்சியப்படுத்தி பாவம் செய்கிற விசுவாசி ஜெபத்தாலும், உபவாசத்தாலும், கர்த்தரில் தங்கியிருப்பதாலும் பரிசுத்தமடையலாம் என்று போதிக்கின்றன. ஜோன் வெஸ்லி, விசுவாசி இந்த உலகத்தில் பூரணத்துவமடையலாம் என்று தவறாகக் கருதினார். இத்தனைத் தவறான போதனைகளும் நம்மத்தியில் உலவுவதால் இதையெல்லாம் தோலுரித்துக் காட்டி பரிசுத்தமாகுதல் விசுவாசியால் மட்டுமே முடியும் என்றும், அதை அடைய முதலில் ஒருவன் மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் பெற்றிருத்தல் வேண்டும் என்றும், அப்படி விசுவாசியாக இருக்கும் மனிதன் தன் வாழ்க்கையில் பாவத்துக்கு புறமுதுகு காட்டி அன்றாடம் பத்துக் கட்டளைகளைத் தன் வாழ்க்கையில் கடைப் பிடித்து கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் என்பதையும் விளக்குவது அவசியம். பரிசுத்தமாகுதலை விசுவாசி கர்த்தரின் ஆவியின் துணையோடு மட்டுமே தன் வாழ்க்கையில் காண முடியும் என்பதையும் விளக்குவது அவசியம். கர்த்தர் விசுவாசியில் செய்யும் பரிசுத்தமாகுதலில் மனிதனின் பங்கு நிச்சயம் இருக்கிறது. (பிலிப்பியர் 2:12, 13).

இந்த முறையில் வேதக்கோட்பாடுகளை ஆராய்ந்து படித்துத் தயாரித்து பிரசங்கங்களை அளிக்க வேண்டியது ஒவ்வொரு பிரசங்கியினதும் கடமை.

# எண்ணங்கள்!

நான் ஒரு வேதாகமக் கல்லூரியில் ஊழியப் பயிற்சிக்காகப் படித்து வருகிறேன். எனது சக மாணவரின் மூலம் தங்களின் வெளியீடான திருமறைத்தீபம் புத்தகத்தை வாசித்தேன். அது எனது ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், கல்லூரிப் படிப்புக்கும் பிரயோஜனமாக இருந்தது. குறிப்பாக 'டிஸ்பென்சேஷனலிசமும் அதன் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றிய ஆக்கம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நிலையற்ற தடுமாறும் இன்றைய கிறிஸ்தவ உலகில் தங்களின் திருமறைத் தீபம் மெய்யான ஆவிக்குரிய விழிப்புணர்வை தருவதை உணர்கிறேன். விசேஷமாக கடந்த நாட்கள்வரை நான் "அன்றாட தியான நூல்களைப்' படிக்கப் பயன்படுத்தினேன் ஜூலை-செப்டெம்பர் 2004 மாதங்களின் வெளியீட்டை வாசித்தபின் தவறை உணர்ந்து விட்டுவிட்டேன். தேவன் எதிர்பார்க்கும் தியானத்தை எவ்வாறு தியானிப்பது? என்று வழிகாட்டியதற்கு நன்றி. மேலும் நான் இதுபோன்ற காரியங்களைக் கற்றுக் கொள்ளவும், மெய்யான தேவ சத்தியத்தை தேவன் எதிர்பார்க்கும்படி போதிக்கவும் எனக்கு திருமறைத்தீபத்தை அனுப்பித் தருமாறு வேண்டுகிறேன். பழைய வெளியீடுகளையும் அனுப்பும்படித் தாழ்மையுடன் வேண்டுகிறேன். – ***ஐசெக் டேவிட், தமிழ்நாடு***

ஆசிரியருக்கு என் நன்றி கலந்த ஸ்தோத்திரங்கள். கடந்த பத்து ஆண்டுகளாக தங்களின் இதழான திருமறைத்தீபத்தை நடத்தும்படி தேவன் செய்தரு ளிய கிருபைக்காக நான் ஆண்டவரைத் துதிக்கிறேன். இந்தக் கரை திறை நிறைந்த வஞ்சக உலகில் தாங்கள் எவற்றை செப்பிடவேண்டுமோ அவற்றை இலகுவாக வெளிக்கொணர்ந்து வருகிறபடியால் தங்களை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இருந்தாலும் பெந்தகொஸ்தேகாரர்களை நாம் நேரடியாகத் தாக்குவதைத் தவிர்த்து அவர்களை நாம் எப்படி ஆதாயப்படுத்த வேண்டும் என்பதையும் நினைத்துப் பார்ப்பது நல்லது. நான் ஒரு எளிமையான ஊழியன். குறைகள் இருந்தால் மன்னியுங்கள். நீங்கள் பவுல் சொல்லும் வெட்கப்படாத ஊழியன். உங்களுக்காக ஜெபிக்கிறேன். – ***பாஸ்டர் பீட்டர் ஜோன் சகாயராஜ், தமிழ்நாடு***

*(மேல்வரும் கடிதத்தை எழுதிய சகோதரருக்கு என் நன்றிகள். மனதில் பட்டதை மறைக்காமல், அதே நேரம் அன்போடு எழுதித் தெரிவித்ததற்காகப் பாராட்டுகிறேன். நண்பரின் கூற்றில் எனக்கு ஓரளவுக்கு உடன்பாடு உண்டு. பெந்தகொஸ்தேகாரர்கள் நமக்கு எப்போதுமே எதிரிகள் அல்ல; அவர்கள் மத்தியில் இருக்கும் பல தவறான அடிப்படைப் போதனைகளுக்கும், நடைமுறைகளுக்கும்தான் நாம் எதிரி. சத்திய வேதம் போதிக்கும் உண்மைகளுக்கெதிராக கிறிஸ்துவின் பெயரைப் பயன்படுத்தி யார் எதைச் செய்தாலும் அவற்றை வெளிப்படுத்துவதும், அவற்றின் வழியில் போகாமலிருங்கள் என்று விசுவாசிகளையும், சபைகளையும் எச்சரிப்பதும் அவசியம். அப்போஸ்தலர்கள் அந்தக் கடமையில் இருந்து ஒருபோதும் தவறியதில்லை. அதைத்தான் நானும் செய்து வருகிறேன். சத்தியம் பாதுகாக்கப்பட வேண்டும், அந்தக் கடமையைச் செய்யும்போது அசத்தியத்தை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. சத்தியத்திற்காகப் போராடுவது நமது கடமை (யூதா 3). எவரையும் ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்காக சத்தியத்தை ஒருக்காலும் நாம் பலியிட முடியாது. சத்தியத்தைத் தெளிவாக விளக்கி, அசத்தியத்தை அடையாளம் காட்டி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதே கர்த்தர் நமக்களித்திருக்கும் பணி. அந்தப் பணியைச் செய்கிறபோது பெந்தகொஸ்தே போதனைகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறோம்; அதைப் போதிப்பவர்களையும் அடையாளம் காட்டுகிறோம். அது தாக்குவதாகாது. பெந்தகொஸ்தேகாரர்கள் சீர்திருந்தினால் அதில் ஆனந்தம் அடையப்போகும் முதல் மனிதன் நானாகத்தான் இருப்பேன். – **ஆசிரியர்**)*

# தேவை இன்று சீர்திருத்தம்! தேவை இன்று சீர்திருத்தம்!

**ச**த்திய வேதத்தை உதறித் தள்ளிவிட்டு
சுத்தமும் நெஞ்சில் தேவ பயமின்றி
வங்கியில் கடனெடுத்த பணத்தை வீசி
சுவிசேஷ வியாபாரத்தை அசத்தலாய் செய்து
சபை என்ற பெயரில் ஒரு கூட்டத்தைக்கூட்டி
தன்னிச்சையாய் தங்கள் குடும்பத்தை வளர்க்க
செய்கிறார்களே ஒரு ஊழியம்; அதில்
தேவை இன்று நிச்சயம் சீர்திருத்தம்

**வே**தமறியாது, கர்த்தர் சித்தம் தெரியாது
பிரசங்கத்திற் கெந்த இடமுந் தராது
பாட்டும், கூத்தும், சினிமாப் படக்காட்சியும்
அறைகுறைகள் சொல்லுகிற அறைவேட்காட்டு சாட்சியும்
மட்டுந்தான் ஆராதனைக்கு அவசியம் இன்று என்று
ஆர்ப்பரித்து அல்லேலூயா! சொல்லுகிற கூட்டத்தின்
கொட்டம் அடங்கி சத்திய வாஞ்சை வளர
தேவை இன்று நிச்சயம் சீர்திருத்தம்

**க**மிட்டி அமைத்துக் கர்த்தரை மதிக்காது,
குடும்ப ஊழியக் கூத்துக்குப் பாலூட்டி,
சாதி, குலம், கோத்திரம் பார்த்துச்
சபையில் திருமணங்கள் செய்து வைத்து,
ஆணவத்துடன் அதிகாரம் செய்து
தங்களையும், தம்மினத்தாரையும் வளர்த்து வரும்
போலிப் போதகர்கள் திசையறியாமல் போகும்படி
தேவை இன்று நிச்சயம் சீர்திருத்தம்

**அ**ர்த்த இராத்திரியில் அயர்ந்த உறக்கத்தில்
கண்ட கனவின் கள்மயக்கத்தின் விளைவாய்
உண்டான உற்சாக வெறியில் துள்ளி
சுவிசேஷ ஊழியம் செய்யப் போகிறேனென்று
அரிச்சுவடி கூடப் படிக்காத அறிவீனர்கள்
அரிப்போடு கிளம்பி யிருக்கிறார்களே,
அந்தத் திருச்சபை ஊழியத் திருப்பணியில்
தேவை இன்று நிச்சயம் சீர்திருத்தம்

**பா**ப்திஸ்து, மெத்தடிஸ்டு, லூதரன், ஆங்கிலிக்கன்
சகோதரர்கள், பெந்தகொஸ்தே காரர்கள் என்ற
சாதிப்பிரிவு போன்ற பேதத்திற் கெல்லாம்
சமாதிகட்டி, சடங்குகள் பாரம்பரியங்கள் என்று
கூவம்போல் சபையைச் சீரழித்துக் கொண்டிருக்கும்
பிணங்களுக்கும், சபை அறியா ஸ்தாபனங்களுக்கும்
முடிவுகட்டி தூய திருச்சபைகள் தோன்றிவளர
தேவை இன்று நிச்சயம் சீர்திருத்தம்

**க**ர்த்தருக்குப் பணிந்து வாழும் குடும்பங்கள்
கருத்தாய் இயேசு வழிச்செல்லும் நல்லிளைஞர்கள்
அறிவில் சிறந்து ஆவியில் நெருப்பாய்
பிரசங்கித்துப் போதிக்கும் நற் போதகர்கள்
தேவன் வழி மட்டுமே தேர்ந்த வழி என்று
தீவிரமாய் அவர் வழி செல்லும் திருச்சபைகள்
தோன்றிச் சிறந்திருந்த சீர்த்திருத்தகாலம் போல்
தேவை இன்று நிச்சயம் சீர்திருத்தம் நம்மினத்தில்

சு.பி.

மலர் 11 ஜனவரி - மார்ச் 2005 இதழ் 1

1. புறஜாதிப் பண்பாடும், நாமும்

2. கிறிஸ்துவின் சிலுவைப் பலி

3. எதில் தேவை சீர்திருத்தம்

4. செழிப்பு / நவீன யூதாசு (கவிதை)

5. சிக்கலான சில வேதப்பகுதிகள் (புதிய பகுதி)

6. சீர்திருந்த வேண்டிய தமிழ்ப் 'பண்பாடு'

7. போப்புகளின் வளர்ச்சியின் உச்சகட்டம்

8. கிறிஸ்தவ கோட்பாடுகள்

9. பிரசங்கத்தில் கோட்பாடுகள்

10. எண்ணங்கள்!

11. தேவை இன்று சீர்திருத்தம்! (கவிதை)

Terau Print